Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 156

ஞாயிற்றுக்கிழமை
01 மே 2022

சித்திரை 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+08

விலை: 60/=

# சிறுபான்மையினருக்கு எதிராக பிக்குகள் நின்றமை தவறே!

## மகா சங்கத்தினரின் கட்டளைக்கான மாநாட்டில் ஓமல்பே சோபித தேரர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 1**

**குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக அரசியல்வாதிகள் தமிழ், முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக கடந்த காலங்களில் கட்டவிழ்த்து விட்ட அடக்குமுறைகள், இனவாதச் செயற்பாடுகளுக்கு பௌத்த மதத் தலைவர்களில் ஒருசிலர் துணை சென்றமை வேதனைக்குரியது - இவ்வாறு ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.** 15

## மருந்து விலை அதிகரிப்பு

கொழும்பு, மே 1

60 மருந்துகளின் விலைகள் அண்ணளவாக 40 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன. விலை அதிகரிப்புத் தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவினால் வெளியிடப்பட்டுள்ளது. (அ-ஓ-இ)

## வேகமாகும் காற்று!

கொழும்பு, மே 1

வடக்கு மற்றும் கிழக்கு கடற்பரப்பில் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 40 - 60 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக் 14

## மஹிந்தவை விரட்டுவதில் மகாசங்கம் மிகத் தீவிரம்!!

### கோத்தாவின் அதிகாரங்களை குறைத்தால் போதுமாம் 15

## கோத்தாபய விலகாதவரை சர்வகட்சி யோசனை சரிவராது

### மகாசங்கத்திடம் எடுத்துரைத்தன எதிர்க் கட்சிகள் 15

அரச தொழிற்சங்கங்கள்

## சம்பளத்தைப் பெறாமல் ஹர்த்தாலில் பங்கேற்குக!

### ஆதரவளிக்க தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் நிபந்தனை

கொழும்பு, மே 1

எதிர்வரும் 6ஆம் திகதி முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு, ஒத்துழைப்பு வழங்க வேண்டுமாயின், சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களிடம், கோரிக் 15

## ஸ்டாலினுக்கு நன்றி!

### கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 1

பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களை மீட் 15

## இன்று மே தினம் கொழும்பில் பாதுகாப்பு

கொழும்பு, மே 1

உலகத் தொழிலாளர் நாளான இன்று இலங்கையில் பல அரசியல் கட்சிகளும் மேதினக் கூட்டங்களை 16

## பல்பொருள் அங்காடிகளில் சலுகை விலையில் அரிசி

### வர்த்தக அமைச்சர் திட்டம்

கொழும்பு, மே 1

இந்தியக் கடன் வசதியின் கீழ் இறக்குமதி செய்யப்படும் அரிசியை ச.தொ.ச. விற்பனை நிலையங்களில் மட்டுமல்லாது பல்பொருள் அங்காடிகள் மூலமும் சலுகை விலையில் நுகர்வோருக்கு விற் 15

## பவுஸர் உரிமையாளர் சங்கம் வேலைநிறுத்தம்

### போராடினால் உரிமம் இரத்து; மிரட்டுகிறார் அமைச்சர்

கொழும்பு, மே 1


எரிபொருள் விநியோகத்தில் ஈடுபடும் தனியார் பவுஸர் உரிமையாளர் சங்கம் நேற்று நள்ளிரவு தொடக்கம் 14




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பேரவைக்கு ரணிலுக்கு அழைப்பு

## ஜனாதிபதி கோத்தாபய விடுத்தார்



**கொழும்பு, மே 1**

**இடைக்கால அனைத்துக் கட்சி அரசாங்கம் தொடர்பான வேலைத்திட்டத்துடன் ஏற்படுத்தப்படவுள்ள 'தேசியப் பேரவையில்' இணைந்துகொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.**

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக தேசிய இணக்கப்பாட்டு அரசாங்கத்தை உருவாக்கும் தேவை மற்றும் அதன் அடிப்படை நடவடிக்கையாக நாடாளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் அனைத்துக் கட்சித்தலைவர்களைக் கொண்ட தேசியப் பேரவையை நியமிப்பது தொடர்பான முடிவை ஜனாதிபதி எடுத்துள்ளார்.

அதேவேளை சில வாரங்களுக்கு முன்னர், அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள், பிரதமர் பதவியை ஏற்கவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரினர் என்று கூறப்படுகிறது. இதற்குப் பதிலளித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு மக்கள் கூறினால், நெருக்கடியான சந்தர்ப்பத்தில்கூட அதைப் பொறுப்பேற்க தயார் என கூறியுள்ளார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதிக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் புதல்வரும் பிரதமரின் ஊழியர் குழுவின் தலைமை அதிகாரியுமான யோஷித்த ராஜபக்சவுக்கும் இடையில் பேச்சு ஒன்று நடந்துள்ளது - என்று தகவல்கள் கூறுகின்றன.

(எ-இ)

# ஜனாதிபதியின் முடிவை ஏற்றுக்கொள்ளத் தயார்!

## மஹிந்த ராஜபக்ச தெரிவிப்பு



**கொழும்பு, மே 1**

**பிரதமர் பதவி தொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் எந்தமுடிவையும் ஏற்றுக்கொள்ளத் தயார் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச கூறியுள்ளார்.**

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனக்கு பதில் வேறொருவரை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்தால் அதனை ஏற்கத்தயார். ஜனாதிபதி எடுக்கும் தீர்மானங்களை மதிக்க வேண்டும் என்றும் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமருடன் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இணக்கம் தெரிவித்துள்ளார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சு வெற்றியடைந்துள்ளது என்றும் அவர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-இ)

# அண்ணனைப் பதவி விலக்காது எப்படி புதிய பிரதமர் நியமனம்?

## கேள்வி எழும்புகின்றார் ராஜித



கொழும்பு, மே 1

ஜனாதிபதி விரும்பும் புதிய பிரதமர் யார்? அண்ணனை (மஹிந்த ராஜபக்ச) பிரதமர் பதவியிலிருந்து தான் விலகச் சொல்லவில்லை என்று தெரிவித்த கோத்தாபய, எப்படி புதிய பிரதமரை நியமிக்கப் போகின்றார்?.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

புதிய பிரதமருடன் இடைக்கால அரசு அமைப்பதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இணக்கம் தெரிவித்துள்ளார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே ராஜித சேனாரத்ன இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இடைக்கால அரசுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒரு போதும் ஆதரவு வழங்காது. எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ அதைப் பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டார்.

அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவும் தனது பதவியைத் தக்க வைப்பதற்காகவுமே இடைக்கால அரசு அமைய ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருக்கலாம்.

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண இடைக்கால அரசு தேவையில்லை. புதிய அரசே வேண்டும். அதற்கு முன் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியைத் துறந்துவிட்டு வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

அப்போதுதான் புதிய அரசு சுதந்திரமாகச் செயற்படமுடியும். தற்போதைய அரசை நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் தோற்கடித்துவிட்டு ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் புதிய அரசை நாம் நிறுவுவோம் - என்றார்.

(எ-இ)

# முன்னாள் அமைச்சர்களுக்கு தொடர்ந்தும் பாதுகாப்பு!

கொழும்பு, மே 1

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அதே போன்று நீடிக்கப்பட்டுள்ளது என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் வீடுகளுக்கு முன்பாக தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதால் நாட்டில் பொதுமக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ளும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சரவை அமைச்சர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர்களது வீடுகளுக்கு அருகில் கலவரம் ஏற்படும் பட்சத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையையும், தேவைப்பட்டால் ஆயுதப் படையினரையும் பணியில் ஈடுபடுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## நாடாளுமன்றின்

# அடுத்த கூட்டத்தொடர் மிகத்தீர்க்கமான ஒன்று

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு, மே 1

அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தொடர் மிகவும் தீர்மானமிக்க ஒன்றாக இருக்கும் எனவும் மக்கள் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையில் அரசாங்கத்துக்கு எதிரான தீர்மானம் முன்னெடுக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தர்.

அரசாங்கத்துக்கு எதிரான பேரணியொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற அமர்வுகள் இருக்கும்போது செய்ய வேண்டியவை மற்றும் நாடாளுமன்ற அமர்வுகள் இல்லாதபோது செய்ய வேண்டியவை தொடர்பாக புரிதல் இல்லாதவர்கள் சொல்லும் கதைகள் குறித்து நான் எதையும் பொருட்படுத்துவதில்லை.

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தே உண்மையான தேசப்பற்றாளர்கள் மற்றும் மக்கள்வாதிகள் யார் என்பதை அடையாளம் காணமுடியும் - என்றார். (ம)

# இடைக்கால அரசமைக்க பெரமுனவுக்குள் அதிருப்தி!



கொழும்பு, மே 1

நடைமுறைப்படுத்த தயாராகிவரும் இடைக்கால அரசாங்கம் என்பது என்ன என்பதை ஜனாதிபதி விளக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:

நடைமுறைப்படுத்த தயாராகிவரும் இடைக்கால அரசாங்கம் என்பது என்ன என்பதை ஜனாதிபதி விளக்கவேண்டும். இடைக்கால அரசாங்கத்தில் பங்கு கொள்வதா? இல்லையா? என்பதை அதன்பின்னர் தீர்மானிக்கமுடியும். இடைக்கால அரசாங்கம் என்பது அரசமைப்புச் சட்டத்தில் இல்லாத புதிய எண்ணக்கரு. இதனால் எந்த விதத்தில் அது நடைமுறைப்படுத்தப்படும் என்பதை கட்சி என்ற வகையில் நாங்கள் முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

இது சம்பந்தமாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பொதுஜன பெரமுனவுக்கு விளக்கமில்லை. ஜனாதிபதியை சந்தித்து இது சம்பந்தமாக அவரது கருத்தை அறிய எதிர்பார்த்துள்ளோம்.

பொதுஜன பெரமுனவின் இந்த நிலைப்பாடு ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு எதிரானது அல்ல. எனினும் ஜனாதிபதி, மாநாயக்க தேரர்களின் விசேட பொறிமுறையை நடைமுறைப்படுத்த இணங்கியமை சாதகமான நிலைமை.

இடைக்கால அரசாங்கம் தொடர்பாக ஜனாதிபதி எடுத்துள்ள முடிவு குறித்து பொதுஜன பெரமுன சிறப்புக் கவனத்தைச் செலுத்தியுள்ளது - என்றார்.

(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்!

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் உறுதி






வவுனியா, மே 1

**எமக்கான நீதி கிடைக்கும்வரை தொடர்ந்து போராடிக்கொண்டே இருப்போம். எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இனியாவது சர்வதேசம் முன்வர வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.**

வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால், வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

எமது உறவுகளின் உண்மைநிலையை வலியுறுத்தி மூன்று வருடங்களுக்கும் மேலாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எனினும் எமக்கான நீதியை எந்த அரசாங்கமும் பெற்றுத்தரவில்லை.

அரசு மீது நம்பிக்கை இழந்ததால்தான் நாம் சர்வதேசத்திடம் தற்போது நீதிகோரி நிற்கின்றோம்.

எமது உறவுகளைத் தருமாறே நாம் போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். நாம் வேறு எதனையும் இந்த அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கவில்லை. எனவே எமக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் இந்தப்போராட்டங்களை இடைநிறுத்தாமல் தொடர்ந்து முன்னெடுப்போம். எமது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இனியாவது சர்வதேசம் முன்வரவேண்டும்- என்றனர். (ம-110)

## சங்காபிஷேகப் பெருவிழா

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாணம், வண்ணை மேற்கு விசுவேச விநாயகர் ஆலய தேவஸ்தான சங்காபிஷேகப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெற்று இரவு 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதிவலம் வருவார்.

அடியவர்களுக்கு பகல் அன்னதானம் வழங்கப்படும் என ஆலயப் பரிபாலன சபையினரால் தெரிவிக்கப்பட்டது. (ச)



## அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக மன்னாரில் போராட்டம்

மன்னார், மே 1

காணாமலாக்கப்பட்ட உறவுகள் தங்களுடைய உறவுகளுக்காக நீதிகோரி மேற்கொள்ளும் போராட்டத்தில், அரசு மேற்கொள்ளும் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாகப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச வருகைதந்த பொழுது காணாமலாக்கப்பட்ட உறவுகள் சார்பாக நீதிகேட்டுப் போராட்டத்தில் ஈடுபட்ட உறவுகளுக்கு எதிராக பொலிஸார் மேற்கொண்ட அராஜகங்களைக் கண்டித்தே இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் என பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (ம-125)

## கிளிநொச்சியிலும் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம்!

கிளிநொச்சி, மே 1

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதி கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவுகளின் ஒளிப்படங்களையும், பதாகைகளையும் ஏந்தியவாறு போராட்டத்தில் கலந்து கொண்டனர். (எ-113)

## சட்டவிரோதமாக இறக்குமதியான சொகுசுக் கார்கள் சிக்கின

கொழும்பு, மே 1

பிரிட்டனில் இருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 4 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய இரு அதி சொகுசு வாகனங்கள் உட்படப் பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு-புறக்கோட்டைப் பகுதி வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான 4 கோடிக்கும் அதிக பெறுமதியான இரு அதிசொகுசு ரக வாகனங்கள், 5 வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் ஆயிரம் கிலோ கிராம் மஞ்சள் தூள் உள்ளடங்கிய பொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்தப் பொருள்கள் உள்ளடங்கிய கொள்கலனின் நிறை சுமார் ஆயிரம் கிலோ என்று தெரிவித்துள்ள இலங்கை சுங்கத் திணைக்களத்தினர், இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சாவகச்சேரி நகரசபையில்

# திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ 'பின்லா' செயற்றிட்டம் அறிமுகம்

யாழ்ப்பாணம், மே 1

யாழ்.மாவட்டத்தில் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தை சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு சாவகச்சேரி நகர சபையால் 'பின்லா' எனும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



அரச சார்பற்ற நிறுவனங்களான 'செவனத' மற்றும் 'வேள்ட் விஷன்' ஆகியவற்றின் நிதி அனுசரணையில் குறித்த செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிமுகநிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் ஜெட்விங் தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

நாட்டில் நாளாந்தம் 2.01 பில்லியன் தொன் கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன. இதில் உள்ளூராட்சி மன்றங்களால் 1.105 பில்லியன் தொன் கழிவுகளே சேகரிக்கப்படுகின்றன. இதன்படி நாளாந்தம் ஏறத்தாழ 1 பில்லியன் தொன் கழிவுகள் சமூகத்தில் கலக்கின்றன. திட்டமிடப்படாத பொறிமுறையின்றி இவ்வாறான முறையற்ற வகையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையால் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்கு முறையான பொறிமுறை ஒன்றை உருவாக்குவதன் மூலம் [illegible] முடியும். அதற்கமைய குறித்த செயற்றிட்டத்தின் மூலம் உக்காத பொருள்களை மீள்சுழற்சிக்குட்படுத்துவதன் மூலம் மீண்டும் பொருள்களை உற்பத்தி செய்யலாம். ஆகவே குறித்த திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாட்டுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் எதிர்கால ஆரோக்கிய சந்ததியைக் கட்டியெழுப்ப முடியும் என நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செயற்றிட்டம் இலங்கையின் தென் பகுதியில் யாகல, வத்தளை ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் தற்போது யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி நகர சபையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நிகழ்வில் சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன், பின்லா செயற்திட்ட முகாமையாளர் அத்துல ரணசிங்க, யாழ். பல்கலைக்கழகத்தின் உயிரியல் இரசாயனப் பிரிவின் பேராசிரியர் ஜி.சசிகேசன் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மாகாண அலுவலர் சுபாஷினி சசீலன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-26)

## மயங்கி வீழ்ந்து சிப்பாய் இறப்பு!

யாழ்ப்பாணம், மே 1

பலாலிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ விவசாயப் பண்ணையில்கடமையாற்றிய சிப்பாயொருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

55ஆவது படைப் பிரிவில் கடமையாற்றிய மாரசிங்க சமாதிவிராஜ் (வயது 27) என்ற சிப்பாயே உயிரிழந்தவராவார். தனது பணிகளின் பின் குறித்த சிப்பாய் குளித்துவிட்டு கொடியில் உடுப்புகளைக் காயவிடமுற்பட்டபொழுது மயங்கி விழுந்துள்ளார். பின்னர் அவர் இராணுவ மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். எனினும், அந்தச் சிப்பாய் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெரமுன ஆட்சியை கவிழ்க்க முடியாது!

## பஸில் நம்பிக்கை



கொழும்பு, மே 1

**பொதுஜன பெரமுனவின் ஆட்சியை எவரும் கவிழ்க்க முடியாது. அதேவேளை, ஜனாதிபதியையும் பதவியிலிருந்து எவரும் விரட்டவும் முடியாது என்று முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை. ஒருவரையொருவர் பதவி விலகவும் கோரவில்லை. நாட்டில் தற்போது பெரும்பாலான ஊடகங்கள் எமது அரசுக்கு எதிராகவே செய்திகளை வெளியிடுகின்றன. இதன் பின்னணியில் யார் செயற்படுகின்றார்கள் என்று தெரியவில்லை.

ஊடகங்களில் வெளிவரும் செய்திகளைப்போன்று ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை. ஜனாதிபதியைப் பதவி விலகவேண்டும் என்று பிரதமரோ அல்லது பிரதமரைப் பதவி விலகவேண்டும் என்று ஜனாதிபதியோ கோரவில்லை. அதனால் ஊடகங்கள் உண்மைத்தன்மையுடன் செய்திகளை வெளியிட வேண்டும். நடுநிலையுடன் செயற்பட வேண்டும் - என்றார். (எ-இ)

# தமிழகத்தின் உதவியை வரவேற்றது நா.க.த.அ.

லண்டன், மே 1

இலங்கையில் ஏற்பட்டுள்ள மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியை அடுத்து, ஈழத் தமிழர்களுக்கு உதவுவதற்காக தமிழக அரசாங்கம் அறிவித்துள்ள உதவிகளை வரவேற்றுள்ளது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்.

தமிழ்நாடு அரசின் சார்பில் ஈழத்தமிழர் தேசத்தின் உண்மை நிலையைக் கண்டறிவதற்கான குழு ஒன்றை அங்கு உடன் அனுப்பி வைப்பதும் இந்த முயற்சிக்கு வலுச்சேர்க்கும் என்பதோடு, நேரடி உதவிப் பொறிமுறை ஊடாக ஈழத்தமிழ் மக்களுக்கு அனுப்பி வைக்கும் முயற்சியில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது பங்களிப்பை வழங்கும் எனவும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# 31 அமைச்சுக்களின் விடயதானம் மாற்றம்

கொழும்பு, மே 1

அமைச்சுக்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் சிலவற்றின் விடயதானங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அண்மையில் பிரதமர் தவிர்ந்த முழு அமைச்சரவையும் பதவி விலகியதையடுத்து கடந்த 18ஆம் திகதி மீண்டும் புதிய அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்த நிலையிலேயே புதிய அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழ் உள்ளடங்கும் இராஜாங்க அமைச்சுக்களின் விடயதானங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் 9ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டு இந்தப் புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு, தொழில்நுட்பம், புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள், நிதி, நீதி, வெளிநாட்டலுவல்கள், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் உள்ளூராட்சி, கல்வி, சுகாதாரம், தொழில், சுற்றாடல், வன ஜீவராசிகள் வன வளங்கள் பாதுகாப்பு, கமத்தொழில், நீர்ப்பாசனம், காணி, கடற்றொழில், பெருந்தோட்டக் கைத்தொழில், நீர் வழங்கல், மின்சக்தி, வலுசக்தி, துறைமுகங்கள் கப்பற்றுறை, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, இளைஞர் விவகாரம் விளையாட்டுத்துறை, சுற்றுலாத்துறை, வர்த்தகம், கைத்தொழில், வெகுசன ஊடகம், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி ஆகிய 31 அமைச்சுக்களின் விடயதானங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (எ-இ)

# வெளிநாட்டு இலங்கையர்கள் முதலிடுவதற்கு ஒத்துழைப்பு!

## இராஜாங்க அமைச்சர் அழைப்பு

கொழும்பு, மே 1

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தொழிற்பேட்டைகள், வர்த்தக மற்றும் உற்பத்தி நிறுவனங்களை ஆரம்பிக்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகசந்திப்பில் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த முயற்சிகளில் ஈடுபட விரும்புபவர்களுக்குத் தேவையான வசதிகள் மாகாண சபை, பிரதேசசபை மூலம் செய்து கொடுக்கப்படும். நாடு இன்று எதிர்நோக்கியுள்ள டொலர் பிரச்சினைக்குத் தீர்வாக வெளிநாட்டில் பணியாற்றுபவர்கள் டொலரை இலங்கைக்கு அனுப்புவதை ஊக்குவிக்கும் வகையில் அரச அதிகாரிகள் செயற்படவேண்டும் - என்றார். (எ-இ)

# இளைஞர்களின் ஒத்துழைப்பை கோருகிறார் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, மே 1

வீழ்ச்சியடைந்துவரும் நாட்டின் பொருளாதார நிலைமையை மக்கள் போராட்டங்கள் மேலும் மோசமாக்கும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு இளைஞர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக தியாகங்களைச் செய்து நாட்டை அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க வேண்டிய பொறுப்பு இளைஞர்களுக்கு இருக்கிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

# இராஜதந்திரிகளுக்கு ஜி.எல்.பீரிஸ் விளக்கம்



கொழும்பு, மே 1

நாட்டில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார சவால்களை அரசியல் சாசனத்துக்கு அமைவாக எதிர்கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக, வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் விளக்கமளித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பில், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் அண்மைக் காலமாக மேற்கொள்ளப்பட்ட கணிசமான திருத்தங்கள் மற்றும் பயங்கரவாதத்தின் சமகால பரிமாணங்களுக்கு ஏற்ப அதைக்கொண்டு வருவதற்கு விரிவான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இலங்கை ஜனாதிபதி நடத்திய சந்திப்பு மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில், கைதானோரின் பிரச்சினைகள் உட்பட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களைப் பாதிக்கும் சில பிரச்சினை களுக்குத் தீர்வு காண்பதற்காக எடுக்கப் படும் நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பான நிபுணர்கள் குழுவின் அறிக்கையை சுட்டிக்காட்டிய அவர், விரிவான ஆலோசனைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய நிறுவனத்திடம் எரிவாயு கொள்வனவு



கொழும்பு, மே 1

குறைந்த விலையில் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்காக, தாய்லாந்தின் புதிய நிறுவனம் ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது என்று லிட்ரோ நிறுவனத் தின் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 2 ஆண்டுகளில், எரிவாயுவை இறக்குமதி செய்யும் நிறுவனம், மெட்ரிக் தொன் ஒன்றுக்கு அறிவிட்ட தொகையை விடவும் 9 டொலர் குறைவாக, புதிய நிறுவனத்திடமிருந்து எரிவாயுவை பெற்றுக் கொள்ளமுடியும்.

கடந்த 2 ஆண்டுகளாக, ஓமானில் இருந்து நாட்டுக்கு எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டது. அந்த நிறுவனத்துடனான ஒப்பந்தம் இந்த மாதத்துடன் நிறைவடைகிறது. அடுத்த மாதம் முதல் 2 ஆண்டு களுக்கு எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்காக விலை மனுக் கோரப்பட்டுள்ளது.

ஓமான் நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கு அமைய அந்த நிறுவனத் தால் அனுப்பப்பட்ட 3 ஆயிரத்து 500 மெட்ரிக் தொன் எரிவாயு அடங்கிய கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது - என்றார். (எ-இ)

## நாட்டின் தற்போதைய சூழ்நிலையில்

# மௌனமாக இருப்பதே தமிழர்களுக்கு உசிதம்

### தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான சட்டத்தரணி தவராசா தெரிவிப்பு



**கொழும்பு, மே 1**

**நாட்டின் தற்போதைய சூழ்நிலையில், தமிழ் தரப்பு மக்கள் சார்ந்தும் அரசியல் சார்ந்தும் அமைதியாக இருப்பதே உசிதமானது. ஏனெனில் இப்போது மக்கள் எதிர்கொள்கின்ற வாழ்வியல் பிரச்சினைகள் சார்பான எந்த ஒரு நெருக்கடிக்கும் எடுக்கப்படுகின்ற தீர்வில் அரசமைப்பு முன்னிலைப்படுத்தப்படுவதுடன், அது நிச்சயமாக பெரும்பான்மை சிங்கள மக்கள் விரும்புகின்ற தீர்வை மையப்படுத்தியதாகவே அமையும் - என்று தெரிவித்துள்ளார் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான தவராசா.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையின் அரசியல் வரலாற்றில் வடக்கு - கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழர்கள் பெரும்பாலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் பல்வேறு விதமான நெருக்குவாரங்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளனர். அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நெருக்கடிகளுக்கு தீர்வுகாண அந்தந்தக்காலத் தலைவர்கள் பல்வேறு விதமான அரசியல் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அந்த அடிப்படையில் பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், இறுதியாக பிரபாகரனின் ஒப்பந்தம் என்று கிழித்தெறியப்பட்ட அனைத்தையும் குறிப்பிடமுடியும். ஆனாலும் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகிட்டியதா என்று பார்த்தால் அது கேள்விக்குறியே.

இதிலிருந்து தமிழர் தரப்பு ஒரு முக்கியமான விடயத்தை அரசியல் ரீதியில் புரிந்து கொள்ளவேண்டும். அதாவது இந்நாட்டில் ஆட்சி செய்யும் எந்தவொரு சிங்களத் தரப்பும், தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் ஒருகாலமும் நிரந்தரமான ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வைத் தரப்போவதில்லை. இந்த வரலாற்றுப் பின்புலத்தில் இருந்துதான் நாம் இந்தப் பிரச்சினையை அணுகவேண்டும்.

சஜித் பிரேமதாஸவை முன்னிறுத்தி நகர்கின்ற அரசியல் முடிவில் தமிழர் அரசியல் கட்சிகள் தம்மை இணைத்துக் கொள்வது ஒரு கட்டத்தில் தோல்வியில் முடிந்தால், அடுத்துவரும் மூன்றாண்டு காலத்துக்கும் ஆட்சியிலிருக்கும் ஜனாதிபதியிடம் தமிழர் பிரச்சினையை முடிவுக்குகொண்டு வருவதற்காக என்ன விதமான பேச்சை நாம் முன்னெடுக்கமுடியும்? அவர்களை எந்த அடிப்படையில் நாம் அணுக முடியும்?

இப்போதுள்ள அரசியல் நெருக்கடி என்பது தமிழர் தரப்புக்கு எவ்விதத்திலும் சாதகத்தையோ பாதகத்தையோ உடனடியாகத் தந்துவிடப் போவதில்லை. எனவே இச்சூழ்நிலையில் தமிழர் தரப்பு, மக்கள் சார்ந்தும் அரசியல் சார்ந்தும் அமைதியாக இருப்பதே உசிதமானது. ஏனெனில் இப்போது மக்கள் எதிர்கொள்கின்ற வாழ்வியல் பிரச்சினைகள் சார்பான எந்த ஒரு நெருக்கடிக்கும் எடுக்கப்படுகின்ற தீர்வு என்பது அரசமைப்பை முன்னிலைப்படுத்தியே முன்வைக்கப்படும் அபாயம் தெரிகிறது. நாம் அமைதியாக இருக் கின்றபோதும் சரி அல்லது ஏதாவது ஒருபக்கம் சார்ந்து முன்வைக்கப்ப டும் தீர்வுக்குப் பின்னால் பயணிக்கத் தொடங்கினாலும் சரி இந்தப் பிரச்சினைகள் ஏதோ ஒருவிதத்தில் முடிவுக்கு வரத்தான் போகின்றன. அது நிச்சயமாக பெரும்பான்மை சிங்கள மக்கள் விரும்புகின்ற தீர்வை மையப்படுத்தியதாகவே அமையும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது.

கடந்த காலத்தில் இதனை விட மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தமிழர் வாழ்க்கை பலாத்காரமாக தூக்கி எறியப்பட்டபோது, அதனை எமது மக்கள் மிகவும் பொறுமையுடன் கடந்துவந்தார்கள். அந்த அனுபவத்தின் அடிப்படையில் நின்று இப்போதைய சூழ்நிலையை எதிர்கொள்வது தமிழருக்குமிகவும் கடினமான விடயம் அல்ல. எனவே இப்போதுள்ள அரசியல் நெருக்கடியை தோற்றுவித்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை மையப்படுத்திய இந்த இழுபறியில் நாம் சிக்கிக் கொள்ளதேவை இல்லை என்பதுதான் இப்போதைக்குச் சரியான நிலைப்பாடாக இருக்கும் - என்றுள்ளது. (ம)

## இடைக்கால அரசாங்கமென்பது போராட்டத்தை அழிக்கும் சதி!

### சஜித் தெரிவிப்பு



கொழும்பு, மே 1

இடைக்கால அரசாங்கம் என்பது மக்களின் போராட்டத்தை மழுங்கடிக்கும் சதி. அந்தச் சதியில் ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் சிக்காது என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுமக்கள் ராஜபக்சக்கள் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்றுதான் கோரிக்கை விடுத்துப் போராடி வருகின்றனர். அவர்கள் ராஜபக்சக்கள் கூண்டோடு விலகவேண்டும் என்று விரும்புகின்றனர். இடைக்கால அரசாங்கம் என்பது இந்தப் போராட்டங்களை மழுங்கடிக்கும் சதி. அந்தச் சதியில் ஐக்கிய மக்கள் சக்தியும் சிக்கவில்லை. மக்களும் சிக்கவில்லை - என்றார். (ம)

## ராஜபக்சக்கள் கூண்டோடு விலகவேண்டும்

### பத்தில் ஒன்பது பேரின் நிலைப்பாடு இதுவென்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அறிக்கை

கொழும்பு, மே 1

இலங்கையில் பத்தில் ஒன்பது பேர் ராஜபக்சக்கள் கூண்டோடு பதவி விலக வேண்டும் என்றுவிரும்புகின்றனர்என்று மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் தனது ஆய்வொன்றின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட மிக மோசமான நெருக்கடியாகக் கொள்ளப்படும் தற்போதைய நிதி நெருக்கடிக்கு கோத்தாபய ராஜபக்ச அரசாங்கமே காரணம் என நாடு முழுவதிலும் உள்ள மக்கள் ஏகமனதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

அத்துடன், அனைத்து அரசியல்வாதிகளின் சொத்துக்களும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் அவர்களது கணக்கில் வராத செல்வங்கள் அரசால் பறிமுதல் செய்யப்படவேண்டும் என 96 வீதமான இலங்கையர்கள் கருதுகின்றனர். பிரதமர் மகிந்த ராஜபக்ச பதவி விலகவேண்டும் மற்றும் இலங்கை அரசியலில் இருந்து ராஜபக்ச குடும்பம் விலக வேண்டும் என்ற அபிப்பிராயத்தை பத்தில் ஒன்பது இலங்கையர்கள் கொண்டுள்ளனர்.

மேலும், தற்போதைய நெருக்கடியில் இருந்து மீளும்வரை நாடானது நிபுணர்கள் குழுவினால் ஆளப்படவேண்டும், நிறைவேற்று ஜனாதிபதி முறை முழுமையாக ஒழிக்கப்படவேண்டும், நாடாளுமன்றத்தில் இருக்கும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும், மற்றும் 20ஆவது சீர்திருத்தம் நீக்கம் செய்யப்பட்டு 19 ஆவது சீர்திருத்தம் போன்ற ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளுக்கும் தெளிவான மக்கள் ஆதரவு உள்ளது - என்றுள்ளது. (ம)

## அடுத்தவாரம் பெரும்பான்மை; கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, மே 1

அடுத்தவாரம் நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் அடுத்த வாரம் வரையில் பொறுத்திருக்க வேண்டும். அதேநேரம் பிரதி சபாநாயகர் தெரிவுக்காக எமது தரப்பிலும் ஒருவரை முன்னிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மே தினம் சொல்லும் செய்தி

இன்றுமே 1. உழைப்பாளர் தினம். உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையையும், உறுதியையும் குறிக்கும் தினம். போராடினால் வெற்றியை அடைய முடியும் என்பதை உறுதிப்படுத்திய தினம்.

சர்வதேச உழைப்பாளர் தினம் உருவாவதற்கான காரணம் முதலில் அவுஸ்திரேலியாவில் தொடங்கியது. ஒரு நாளுக்கு 15 மணி நேரம்வரை வேலை வாங்கப்பட்ட தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை கேட்டு 1856 ஆம் ஆண்டின் ஏப்ரல் 21ஆம் திகதி போராட்டம் நடத்தினார்கள். அவுஸ்திரேலியாவில் எழுந்த கோரிக்கை அடுத்ததாக அமெரிக்காவிலும் எழுந்தது. 1886ஆம் ஆண்டில் மே 1ஆம் திகதி போராட்டம் நடத்த சிக்காகோ தொழிலாளர்கள் அழைப்பு விடுத்தனர். ஆயிரக்கணக்கானோர் திரண்டனர். இரண்டு நாள்களுக்கு பிறகு தொழிலாளர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

மக்கள் திரட்சிக்கு அஞ்சுபவைதானே அரசுகள்? வழக்கம் போல் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டது. துப்பாக்கிச் சூடும் தடியடியும் நடத்தினர். ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர். ஆனாலும் போராட்டங்கள் ஓயவில்லை. தொழிலாளர்களின் போராட்டத்தால் நிலைகுலைந்த அரசாங்கங்கள் அவர்களின் கோரிக்கையை 1890ஆம் ஆண்டு ஏற்றன. தொழிலாளர்களின் இந்த வெற்றியைக் குறிக்கும் விதத்தில் மே முதல் நாள் தொழிலாளர் தினமாக மே தினம் என்று உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

மே தினத்தின் வரலாறு இன்றைய காலகட்டத்தில் இலங்கை மக்களுக்கு முக்கியமானது. அன்றைய காலகட்டத்தில் தொழிலாளர்கள் இருந்த நிலைமையிலேயே, இப்போது இலங்கை மக்கள் இருக்கின்றனர். நாட்டின் செல்வங்களையும், மக்களின் உழைப்பையும் சுரண்டி செல்வச் செழிப்பில் திளைத்து, நாட்டைக் குட்டிச் சுவராக்கிய ஒரு குழுவினருக்கு எதிராகப் போராட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர் இலங்கை மக்கள்.

ஆட்சி அதிகாரத்தில் இருந்து மக்களின் சொத்துக்களை சுரண்டிக் கொண்டிருப்பவர்களுக்கு எதிராக இலங்கையில் இப்போது போராட்டங்கள் வலுப்பெற்றிருக்கின்றன. அந்தப் போராட்டங்களை அடக்க ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் அனைத்து வழிகளிலும் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றைத்தாண்டி போராட்டங்களை முன்னகர்த்திச் செல்வதே மக்கள் முன்பாகவுள்ள சவால். அந்தச் சவாலை எதிர்கொள்ள மே தினத்தின் வரலாறும் வழிகாட்டலும் மிக முக்கியமானவை.

இன, மொழி, மத பேதங்களைக் கடந்து ஒன்றுபட்டதன் விளைவாக தொழிலாளர்களின் உரிமைகள் அன்று கிடைத்தன. அதேவேளையில் இலங்கை மக்களும் இன, மொழி, மத பேதங்களைக் கடந்து ஒன்றுபட்டுப் போராட வேண்டிய தருணம் இது. நாட்டைச் சுரண்டி, மக்களின் உழைப்பைச் சுரண்டி மக்களை நடுவீதியில் நிறுத்தியவர்களை விரட்டியடிப்ப தன் ஊடாகவே இந்த நாட்டுக்கும் , மக்களுக்கும் சுபீட்சமான எதிர்காலம் கிட்டும். ஒரு புதிய நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான திடசங்கற்பத்து டன் இலங்கையின் இளையோரும், மக்களும் கைகோர்க்க வேண்டியதே தற்போதைய தேவை.

நாளொரு நல்வார்த்தை

"உடல் உழைப்பு உடலைப் பலப்படுத்துவதைப்போலவே, சோதனைகளும் மனதைப் பலப்படுத்துகின்றன" - செனிக்கா



# இந்தியா செல்லமுயன்ற 13 பேர் யாழில் கைது!

**யாழ்ப்பாணம், மே 1**



**சட்டவிரோதமாக இந்தியா செல்வதற்கு முயன்ற திருகோணமலையைச் சேர்ந்த 13 பேர் நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம் வளலாய் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

அவர்கள் பயணித்த படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கைதான சந்தேகநபர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, கடற்படையினரின் விசாரணையின் பின்னர் பலாலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் திருகோணமலையை சேர்ந்தவர்கள் என்பதுடன் அவர்களில் 5 பேர் ஆண்கள், 3 பேர் பெண்கள், 5 பேர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-27)

# ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப ஐக்கிய மக்கள் சக்தி விடாப்பிடி

## அனைத்து அஸ்திரங்களும் ஏவப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் எரான் தெரிவிப்பு

கொழும்பு, மே 1

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை வீட்டுக்கு அனுப்புவதற்காக அரசமைப்பின் பிரகாரம் ஏவக்கூடிய அனைத்து அஸ்திரங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி ஏவும் - என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதி பதவி விலகா விட்டால் அவரை அந்தப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை திரட்டிவருகின்றோம். ஆதரவு வழங்க மறுப்பவர்களின் பெயர் விவரம் வெளிப்படுத்தப்படும். ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணையை கொண்டுவருவது பற்றி ஆராயப்படுகின்றது. அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையும்



முன்வைக்கப்படும். ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்புவதற்காக அரசமைப்பு ரீதியில் பாவிக்கக்கூடிய அத்தனை அஸ்திரங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி பயன்படுத்தும்" - என்றார்.

(அ-ம-44)

நாளை

02.05.2022
திங்கட்கிழமை
சித்திரை 19

சுபநேரம் : 11.57 - 01.27
ராகுகாலம்: 07.27 - 08.57

கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரதி சபாநாயகர் பதவிக்காக

# பெரும்பான்மையை பரிசீலிக்க நான்காம் திகதி பலப்பரீட்சை

## எதிரணி அரசியல் பொறிவைப்பு

**கொழும்பு, மே 1**

**பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து இன்று (நேற்று) முதல் முழுமையாக விலகிவிட்டேன். இது தொடர்பில் ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் உரிய வகையில் அறிவிக்கப்பட்டுள்ளது என்று பிரதி சபாநாயகர் பதவியை வகித்த ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.**

சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுதந்திரக்கட்சி, அரசுக்கான ஆதரவை கடந்த 5ஆம் திகதி விலக்கிக்கொண்டது. நானும் பதவி விலகல் கடிதத்தைக் கையளித்தேன். 'பிரதி சபாநாயகர்' பதவியென்பது சுயா தீனம் என்பதால், இந்தமாதம் 30ஆம் திகதிவரை அந்தப் பதவியில் இருப்பதற்குத் தீர்மானித்தேன். அந்த வகையில் இன்றுடன் (நேற்றுடன்) முழுமையாகப் பதவி விலகிவிட்டேன். எனவே, மே 4ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது, முதல் விடயமாக பிரதி சபாநாயகர் தேர்வு இடம்பெற வேண்டும் - என்றார்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு ஆளுந்தரப்பில் இருந்தும், எதிரணியில் இருந்தும் இருவர் போட்டியிடுவார்கள். தமக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கின்றதென கூறிவரும் அரசுக்கு, இந்தத் தெரிவில் தோல்வி ஏற்பட்டால் அது பெரும் பின்னடைவாக அமையும். அதே போல எதிரணியில் இரட்டை நிலைப்பாட்டில் உள்ள உறுப்பினர்களைக் கண்டறிவதற்கான ஒரு கருவியாக பிரதி சபாநாயகர் தேர்வை, ஐக்கிய மக்கள் சக்தி பயன்படுத்தவுள்ளது. (எ-44)



## சங்கிலிகள் திருட்டு நால்வர் கைது

கிளிநொச்சி, மே 1

தங்கச் சங்கிலிகளைத் திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். திருடிய தங்கச் சங்கிலிகளை வாங்கினர் என்ற குற்றச்சாட்டிலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் வெவ்வேறு இடங்களில் இரு தங்கச் சங்கிலிகள் திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-113)

## விபத்துகளில் ஆறு பேர் உயிரிழப்பு

கொழும்பு, மே 1

நாட்டில் 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த வீதி விபத்துக்களில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

அக்கரைப்பற்றில் தொலைபேசிக் கம்பத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

லுணுகம்வெஹர, சீதுவ மற்றும் அஹங்கம ஆகிய இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளனர். அஹங்கமவில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் 35 வயதான ஸ்பெயின் பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார். (எ-இ)

## நீரில் மூழ்கி சகோதரர்கள் உயிரிழப்பு

கொழும்பு, மே 1

வாரியபொல - குருணவ பிரதேசத்தில் உள்ள வாவியில் நேற்றுமுன்தினம் மாலை நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 43 மற்றும் 34 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு வாரியபொல மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# மீனவர் அத்துமீறலை தடுத்து நிறுத்துங்கள்

## தமிழக முதலமைச்சரிடம் வடக்கு மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 1

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவ முன்வந்ததுபோல கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இந்திய இழுவைமடி தொழிலால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மீனவர்களுக்கும் தமிழக முதலமைச்சர் உதவ முன்வர வேண்டும் - இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் அன்னராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்நாட்டு முதலமைச்சர் இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பால்மா, உணவுப் பொருள்களை வழங்குவதை வடக்கு கடற்றொழிலாளர்கள் என்ற ரீதியில் நாங்கள் வரவேற்கின்றோம். அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். அதேபோல தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடமும், தமிழக சட்ட சபை உறுப்பினர்களிடமும் வடக்கு கடற்றொழிலாளர்கள் ஆகிய நாங்கள் ஓர் அன்பான வேண்டுகோளை விடுக்கின்றோம்.

தமிழ்நாட்டு மீனவர்களால் கடந்த பத்து வருடமாக நாங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றோம். இரண்டு லட்சம் தொழிலாளர்கள் தமிழக இழுவை மடி தொழிலாளர்களால் பாதிக்கப்பட்டுள்ளோம். நாம் கடந்த 10 ஆண்டுகளாக வடபகுதியில் இந்திய மீனவர்கள் இழுவைமடித் தொழிலை மேற்கொள்ளக்கூடாது என்று போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றோம். பல்வேறு பேச்சிலும் கலந்துகொண்டுள்ளோம். தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு இது தொடர்பாக பகிரங்க மடலை நாம் அனுப்பியிருந்தபோதும், இதுவரை அது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இலங்கைக்கு உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு எடுத்த தீர்மானத்தைப் போல வடக்கு மீனவ தொழிலாளர்களுக்காக இழுவை மடி பிரச்சினை தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (எ-26)

# மே தின ஆர்ப்பாட்டங்களில் வன்முறைகள் ஏற்படலாம்!

## அமெ.தூதரகம் எச்சரிக்கை

கொழும்பு, மே 1

கொழும்பில் நடைபெறவுள்ள மே தினக் கூட்டங்கள் தொடர்பாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை வெளியிட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மே முதலாம் திகதியான நாளை, கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பல ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன. சில ஆர்ப்பாட்டங்கள் பற்றி அமெரிக்க தூதரகம் அறிந்திருக்கின்றது. ஆனால், இலங்கை முழுவதும் மேலதிக போராட்டங்களுக்கும் திட்டமிடப்பட்டுள்ளன. ஆர்ப்பாட்டங்களில் வன்முறைகள் ஏற்படக்கூடிய நிலைமை காணப்படுகின்றது என்று அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 11 இளைஞர்கள் கடத்தல் வழக்கு செப்ரெம்பருக்கு

கொழும்பு - கொட்டாஞ்சேனை மற்றும் அதை அண்மித்த பகுதிகளில் 11 இளைஞர்களை கப்பம் பெறுவதற்காக கடத்தி காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பான வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

விசேட மூவர் அடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது நேற்றுமுன்தினம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கில் முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரன்னகொட உள்ளிட்ட 14 கடற்படை அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் வெற்றிவேலு ஜனனதின நிகழ்வு

சாவகச்சேரி, மே 1

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பூ. வெற்றிவேலுவின் நூறாவது பிறந்ததின நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பாடசாலை நிறுவுநர் சிலை, அமரர் வெற்றிவேலு சிலை, நினைவு முற்றம் ஆகியவை திரைநீக்கம் செய்யப்பட்டன. அத்துடன் புனரமைப்பு செய்யப்பட்ட அருணாசலம் மண்டபமும் திறந்து வைக்கப் பட்டது. (ச-9,131,159)



## குப்பை கொட்டியவருக்கு நீதிமன்றம் எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், மே 1

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லுண்டாய் பகுதியில் கழிவுகளைக் கொட்டியவரை கடுமையாக எச்சரித்தது மல்லாகம் நீதிமன்றம்.

பொலிஸாரின் திடீர் வீதிச்சோதனையின் போது குறித்த நபர் கல்லுண்டாய் பகுதியில் குப்பைகளைக் கொட்டியமை தெரியவந்தது. இதையடுத்து சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதையத்து அவரைக் கடுமையாக எச்சரித்து விடுதலை செய்தது நீதிமன்றம். (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு விற்பனை; மூன்று பேர் கைது

யாழ்ப்பாணம், மே 1

ஆவரங்கால் மேற்குப் பகுதியில் ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெறுகின்றது என்று கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே மேற்படி கைது நடவடிக்கை இடம்பெற்றது. கசிப்பை உடைமையில் வைத்திருந்தவரிடம் இருந்து அதைக் கொள்வனவு செய்வதற்காக வந்த மேலும் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்ற பின்னர், அவர்கள் மூவரும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-23)

# ஈழத்தின் அடையாளங்களை அழிவடைய விடவேண்டாம்

## பிரான்ஸ் வாழ் தமிழர்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மே 1**

**ஈழத்தின் அடையாளங்களை அழிவடையவிட வேண்டாம். அவற்றைப் பேணுவதற்கான உதவிகளை வழங்கத் தயார் என்று பிரான்ஸ் வாழ் தமிழ் வர்த்தகர்கள் உறுதியளித்தனர்.**

பிரான்ஸில் 'குட்டி யாழ்ப்பாணம்' என அழைக்கப்படும் பரிஸ் லாச்சப்பல் பகுதியில் பிரான்ஸ் தமிழ் வர்த்தகர்களுக்கும், யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இதில் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாசைகள், ஈழத்து மக்களின் சமூகப் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.



யாழ். மாநகர சபையின் தற்போதைய செயற்பாடுகளைப் பாராட்டிய வர்த்தகர்கள், ஈழத்தில் கல்வி, சுயதொழில் வாழ்வாதாரம், தொழில் முயற்சி மற்றும் தனித்துவ அடையாளங்களைப் பேணுவதற்கு தம்மாலான உதவிகளை மேற்கொள்வோம் என்று தெரிவித்தனர். (க-125)



# சொகுசு வாகனம் மோதி இளைஞரொருவர் காயம்

வவுனியா, மே 1

சொகுசு வாகனம் மோதி இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இந்த விபத்து வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. விபத்தில் காயமடைந்த இளைஞர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு வாகனம், நகர்ப்பகுதியிலிருந்து தாண்டிக்குளம் நோக்கிப் பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட இளைஞரை மோதியது.

விபத்துக்குள்ளான சொகுசு வாகனம் அமெரிக்கத் தூதரகத்துக்குச் சொந்தமானது. மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-110)

# முக அமைப்புச் சீராக்கல் அறுவைச்சிகிச்சை ஆரம்பம்

கிளிநொச்சி, மே 1

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் முதன்முறையாக முகம், தாடை, வாய் அறுவைச் சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மாவட்ட மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவ அதிகாரி சுகந்தன் தெரிவித்துள்ளார்.

இதுவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கே மக்கள் சென்று மேற்படி சிகிச்சைகளை பெற்று வந்தநிலையில் தற்போது கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையிலும் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா மருத்துவமனையில் பணியாற்றிய முகம், தாடை, வாய் விசேட மருத்துவ நிபுணர் மா. தவராஜா இந்தச் சிகிச்சைகளை வழங்கவுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-214)

# கடன்கள் அறவீட்டை நிறுத்தக் கோரிக்கை

## பிரதேசசபையில் பிரேரணை

யாழ்ப்பாணம், மே 1

வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் மாதந்த கடன்கள் அறவீட்டை தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் உறுப்பினர் நிமலறோகன் பிரேரணை முன்வைத்தார். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைமைகளால், ஒரு வேளைச் சாப்பாட்டுக்கே மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இந்த நேரத்தில் மாதாந்தக் கட்டுப்பணத்தை வங்கிகள், நிதி நிறுவனங்கள் அறவிடுவது நியாயமற்றது.

கடந்த காலங்களில் பலர் தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர். சிலர் உயிரிழந்தும் உள்ளனர். எனவே வறிய மக்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு கடன் அறவீட்டை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டும் என்று அவர் பிரேரணையில் குறிப்பிட்டுள்ளார். இதனைச் சபை ஏற்றுக் கொண்டது. (க-159)



# தலைமைத்துவப் பயிற்சி

கிளிநொச்சி, மே 1

முறிகண்டி, இந்துபுரம் மற்றும் பொன்நகர் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களின் தலைமைத்துவத் திறனை மேம்படுத்தும் முகமாக கடந்த புதன்கிழமை 'வெண் ஒளி' சிறுவர் கழகத்தில் தலைமைத்துவப் பயிற்சிகள் இடம்பெற்றன.

இதன்போது வளவாளராக நக்கீரன் கலந்துகொண்டார். அத்துடன் இரண்டாம் கட்ட தலைமைத்துவப் பயிற்சி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-159)



# தமிழரசுக் கட்சியின் மூலக்கிளை திறப்பு

மன்னார், மே 1

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூலக்கிளை தாழ்வுபாடு கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை திறக்கப்பட்டது.

மன்னார் மாவட்டக் கிளையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், கட்சியின் மாவட்டச் செயலாளரும், நகரசபையின் உப தவிசாளருமான [illegible] சந்திரன், யூட்சன் மாஸ்ரர், [illegible] மற்றும் இளைய தலைமுறையினர் கலந்துகொண்டனர். (க-213)

# மாணவர்களுக்கு மரக்கறி நாற்றுகள்

யாழ்ப்பாணம், மே 1

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு மரக்கறி நாற்றுகள் வழங்கப்பட்டன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், தென்மராட்சி அபிவிருத்திக் கழக பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ம-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மருத்துவர்-இ.சுரேந்திரகுமாரன்


கலாநிதி ஜே.றொபின்சன்


கலாநிதி பி.பிரதீப்காந்

# யாழ்ப்பாணப் பல்கலையில் 3பேர் பேராசிரியர்களாகினர்

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூத்த விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவருமாக மூன்று மூத்த விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமனங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதற்கமைய, மருத்துவ பீடாதிபதியும், சமுதாய மருத்துவ மற்றும் குடும்ப மருத்துவத் துறையைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளருமான மருத்துவர் இ.சுரேந்திரகுமாரன் சமுதாய மருத்துவத் துறையில் பேராசிரியராகவும், வணிக முகாமைத்துவ பீடத்தின் கணக்கியல் துறையைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளர் கலாநிதி பி.பிரதீப்காந் கணக்கியலில் பேராசிரியராகவும், மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த மூத்த விரிவுரையாளர் கலாநிதி ஜே.றொபின்சன் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ஒ-இ)

# சிகிச்சை வழங்கத் தாமதம் மருத்துவமனை மீது தாக்குதல்

## பணியாளர்கள் போராட்டம்



முல்லைத்தீவு, மே 1

முல்லைத்தீவு - மூங்கிலாறு ஆதார மருத்துவமனையில் தனது பிள்ளைகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு தாமதமானதால் ஆத்திரமடைந்த தந்தை மருத்துவமனை சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகத் தெரிவித்து மருத்துவமனை பணியாளர்களால் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் காய்ச்சல் ஏற்பட்டதாகத் தெரிவித்து தனது இரண்டு பிள்ளைகளை மருத்துவமனைக்கு அழைத்து வந்துள்ளார் தந்தை. அவரது பிள்ளைகளுக்கு அனுமதிச் சிட்டை வழங்கப்பட்டது. மருத்துவர் பார்வையிடுவதற்கு இரண்டு மணி நேரம் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டதையடுத்து, மருத்துவமனையின் சொத்துக்களுக்கு தந்தை சேதம் விளைவித்ததாக மருத்துவமனைப் பணியாளர்களால் குற்றம் சுமத்தப்படுகின்றது.

இந்த நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்து மருத்துவமனைப் பணியாளர்கள் நேற்று ஒரு மணி நேரம் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மூங்கிலாறு ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக செல்லும்போது நீண்ட நேரம் காத்திருந்து மருந்துகளைப் பெற வேண்டிய நிலைமை காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். மருத்துவமனையின் மருந்தாளர் தேவிபுரம் மருத்துவமனையிலும் மருந்து வழங்கிவிட்டு சில நேரங்களில் மாலைவேளையிலேயே அல்லது நண்பகலுக்கு பின்னரான வேளையிலேயே மருந்து வழங்கும் நடவடிக்கையை இங்கு முன்னெடுப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-19)


**வீடு வாடகைக்கு உண்டு**

சங்கானை பிரதான வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. (மேல் மாடி வீடு மட்டும், அரச ஊழியர் குடும்பம் விரும்பத்தக்கது.)

தொடர்பு: 077 623 7037

**காணியுடன் வீடு விற்பனைக்கு**

நவாலியில் 8 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.

077 382 6099, 075 7466 000

**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. 076 7518138

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ 38 வயது திருமணமாகாத இளம் தோற்றம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு: 077 905 8615 (வைபர் & வாட்ஸ்ஆப்)

**இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்**

பிரிவு 38

- Diploma in English / Spoken English
- Diploma in ICT
- Diploma in Singala
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counselling
- Diploma in Law (pre-law degree)

■காலம்:- 3 மாதங்கள் ■சான்றிதழ் வழங்கப்படும்.

ஆரம்பம்: 07/05/2022 , 10.00AM

IPS திருநெல்வேலி, யாழ்ப்பாணம். T.P:- 021 434 0229, 076 685 2529


# பொலிஸாரிடம் ரூபா 100 மில். இழப்பீடு கோத்தா கோ ஹோம் நிர்வாகி கோரல்

கொழும்பு, மே 1

சமூக ஊடகச் செயற்பாட்டாளரான அனுருத்த பண்டார தம்மைக் கைதுசெய்து தடுத்து வைத்ததற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அவர் 'கோத்தா கோ ஹோம்' என்ற முகநூல் பக்கத்தை இயக்கியதற்காக இந்த மாத தொடக்கத்தில், மோதர குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இந்த முகநூல் பக்கத்தின் மூலம் ஜனாதிபதி மற்றும் அரசு மீது அதிருப்தி உணர்வுகளைத் தூண்ட முயன்றதாகக் குற்றம்சாட்டப்பட்டார். தம்மைக் கைது செய்தமையும், தடுத்து வைக்கப்பட்டுள்ளமையும் தனது அடிப்படை உரிமைகளைமீறும்செயலாகும் என்று அனுருத்த பண்டார உயர் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் மனுத் தாக்கல் செய்துள்ளார். இழப்பீடாக ரூ.100 மில்லியன் வழங்க உத்தரவிடுமாறும் கோரியுள்ளார். (ஒ-இ)


**TRANSPORT MANAGER**

யாழ் - கொழும்பு - யாழ் LORRY (லொறி) TRANSPORT நிறுவனத்திற்கு TRANSPORT MANAGER தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். சம்பளம் 85,000+Commision.

தொடர்பு: 0777 157070

(யாழிலும் கொழும்பிலும் பொருட்கள் சேகரிப்பில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது). (CR 8206)1-6

**SPOT ADMISSION**

STUDY IN YOUR DREAM COUNTRY
FRANCE/ UK/ USA/ CANADA



- WITH/WITHOUT IELTS
- ALL FEES AFTER VISA
- GAP ACCEPTABLE
- EDUCATION CONSULTANCY

JOIN WITH US ON 07,08/05/2022
CALL:- 074 287 5219


# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 07 . 1964



இறப்பு 28 . 04 . 2022

## கந்தையா (தளையசிங்கம்) சதானந்தலிங்கம் (சதா)

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் கண்ணகைபுரத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் YVERDON (V.D) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா (தளையசிங்கம்) சதானந்தலிங்கம் ( சதா - சுவிஸ்) அவர்கள் 28.04.2022 வியாழக்கிழமை அன்று சுவிஸில் காலமானார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (தளையசிங்கம்) ஆச்சிக்கண்ணு தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் மல்லிகாதேவி (பிரான்ஸ்) தம்பதியினரின் அன்பு மருமகனும், இராஜகுமுதினி (சுவிஸ் - குமுதா) வின் அன்புக் கணவரும், ஆர்மிலா (ஆர்மி - சுவிஸ்), றக்ஷன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூவாஸின் பாசமிகு மாமனாரும், கோதைநாயகி, பஞ்சலிங்கம், பூலோகநாயகி (இலங்கை), அமிர்தநாயகி (லண்டன்), சிவலிங்கம் (சுவிஸ்), கிருபானந்தலிங்கம் (சுவிஸ்), தெய்வநாயகி (சுவிஸ்), சுவீந்திரலிங்கம் (ஜேர்மன்), சதீஸ்லிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ரமணிதேவி, இராஜரஜனி (பிரான்ஸ்), இராஜரமணன் (ஜேர்மன்), இராஜகுமணன், காலஞ்சென்றவர்களான தம்பிராசா (டாங்கர்), மாணிக்கவாசகர் (பழனிவாத்தி), ஜெகநாதன் மற்றும் லீலாதேவி , ஜெயராணி (சுவிஸ்), வினிதாராணி (சுவிஸ்), மணிவண்ணன் (சுவிஸ்), சிவசக்தி (ஜேர்மன்), ரஜனி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற சிறிகாந்தன் மற்றும் நகுலேஸ்வரன் (பிரான்ஸ்), லலிதா (ஜேர்மன்), ஜெயந்தி ஆகியோரின் அன்பு சகலனும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

மருமகன் - 004 178 835 1017
மகன் - 004 178 757 5415
அண்ணா - 004 179 779 1035
அக்கா - 009 424 222 1686

தகவல் : தீசன் (தம்பி) சுவிஸ்

(cs 998) (2.6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 03 . 1940

மறைவு 27 . 04 . 2022



## திருமதி காராளசிங்கம் இளையபிள்ளை

ஆவரங்கால் 10 ஆம் கட்டடையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி சன்னதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காராளசிங்கம் இளையபிள்ளை அவர்கள் 27.04.2022 அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - புதியாத்தை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு - பார்வதி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற காராளசிங்கத்தின் மனைவியும், கந்தசாமியின் பாசமிகு சகோதரியும், செல்வயோகம், வாமளாதேவி (லண்டன்), அற்புதராசா (லண்டன்), மாலினி (லண்டன்), தபோதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் கால்நடைப் பண்ணை - அச்சுவேலி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசரத்தினம் (ஓய்வுபெற்ற தபால் உத்தியோகஸ்தர்), பாலேஸ்வரன் (லண்டன்), திருச்செல்வி (லண்டன்), தவராசா (லண்டன்), பகீரதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம்) ஆகியோரின் மாமியாரும், ஜனனி, ஜவாகினி, சுஜானி, அஜன், டெசியா, பிரவீன், தருண், சுபீட்சன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் தீர்த்தாங்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
076 307 1975

(cs 44412) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 09 . 1949

மறைவு 30 . 04 . 2022



## சபாரத்தினம் பரமேஸ்வரி

காரைநகர், களபூமி, திக்கரையைப் பிறப்பிடமாகவும், 126/12, அரசடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் பரமேஸ்வரி அவர்கள் நேற்று (30.04.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சபாரத்தினத்தின் (V.C சபாரத்தினம்) அன்பு மனைவியும், பிரபாகரன் (லண்டன்), மனோகரன் (பிரதி அதிபர், யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), சர்மிளா ஆகியோரின் பாசமிகு தாயாரும், தயாநிதி (லண்டன்), கலைச்செல்வி, Dr.அரிதரன் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கணேசப்பெருமாள் ஏகாம்பரநாதன், செல்லத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அக்ஷயன், சந்தோஷ், சுபணன், அஸ்வின், அசோக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2022) திங்கட்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.126/12, அரசடி வீதி, கந்தர்மடம்.
077 113 0303, 021 222 6498

(CS 19569) (4/6)

தகவல்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திரு. சண்முகம் சிங்கரட்ணம்

பத்தமேனி அச்சுவேலியை பிறப்பிடமாகவும், 23 / 16, முதலியார் லேன், நல்லூர் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சண்முகம் சிங்கரட்ணம் கடந்த (27.04.2022) புதன்கிழமை காலமானார்.


அன்னார் கெங்காலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராஜேஸ்வரி (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும், கஜதீபா (கனடா), லக்சாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகுந்தன் (கனடா), அரிகரன் ஆகியோரின் அன்புப் மாமனாரும், சியந்த், ஆருத், மிதுன் ஆகியோரின் அன்புப் பேரனும், பரஞ்சோதி (லண்டன்), கந்தசாமி (கனடா), சரஸ்வதி (கனடா), இராசா (கொழும்பு), சரோஜினிதேவி (நோர்வே) மற்றும் காலஞ்சென்ற செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுகிர்தாலட்சுமி (நோர்வே), கிருபாலட்சுமி, விஜயலட்சுமி, கெங்காதரன் (கனடா), தயாலட்சுமி (கனடா), சிறீதரன் (கனடா), நித்தியலட்சுமி (கனடா), ஜெயலட்சுமி (நோர்வே), காலஞ்சென்ற மயூரன் மற்றும் சுகபாணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
021 222 9030
076 409 9413

23/16, முதலியார் லேன்,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

(cs 19542) (4/6)



தோற்றம் 17.03.1955

மறைவு 27.04.2022

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செம்பசுமை மேதினம்

யாழ். மே 1

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் நடத்தும் செம்பசுமை மேதினம் இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது. தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், சமூகச் செயற்பாட்டாளர் ம.செல்வின் இரேனியஸ், மனித உரிமை செயற்பாட்டாளர் றுக்கி பெர்னாண்டோ, அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

(ஒ-இ)


## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும். ஒரு சதுர அடி - 55 ரூபா இழுத்து பதிக்க - 75 ரூபா

077 334 1281

## தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் அரச தொழில் செய்யும் குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. 072 159 6978

(CS 19568) (4/6)

## A/L இணைந்தகணிதம்

A / L 2022 வினாவிடை வகுப்புக்கள். A/L 2021 மீட்டல் வகுப்புக்கள். A /l 2023 வகுப்புக்கள் வீடு வந்து பிரத்தியேகமாகக் கற்பிக்கப்படும்.

074 111 0790

## Study in UK / Canada / Spain

BEVERLEY INTERNATIONAL

- IELTS தகைமை உள்ளவர்கள் அல்லது அற்றவர்கள்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- புலமைப்பரிசு (Scholarships) உண்டு
- கல்வியின் பின் வேலை வாய்ப்பிற்கான விசா பெற்றுக்கொடுக்கப்படும் PSW
- PR பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள்
- சாதாரணக் கல்விக் கட்டணம்
- வங்கி பண வைப்பிற்கான வழிகாட்டல்

உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!

மேலதிக தகவல்களுக்கு : 0776 929 773

பாத்திமா : 0706 697 660 | வேனுகா : 0718 517 994

**Beverley International**

Head Office - No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka.

Tel : 0112 576 656

Jaffna Office - No. 401, Clock Tower Road, Jaffna. Tel : 021 22 10 277

## பணிப்பெண் தேவை

முல்லைத்தீவு முள்ளியவளையில் 2 வயதுக் குழந்தையை பராமரிப்பதற்கு பணிப்பெண் ஒருவர் உடன் தேவை. (வீட்டில் தங்கியிருந்து பணி புரியக்கூடியவர்கள்) விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும். 071 134 4873

(CS 00996) (3/6)

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விழும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்ஸா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## வீடு வாடகைக்கு

இருபாலை வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள (ஐயப்பன் கோயிலுக்கு அருகில்) அமைந்துள்ள 6அறை, குளியல் அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு தரப்படும். நிறுவனங்களுக்கு முன் உரிமை. தனியாருக்கும் வழங்கப்படும் சனி, ஞாயிறு, தினங்களில் பார்வையிடலாம்.

077 350 4910

## வீடு, காணி விற்பனைக்கு

நீர்வேலி இராசபாதை சிறுப்பிட்டி மேற்கில் 21 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீட்டுடன் விற்பனைக்குண்டு.

077 618 0675

## கணித வகுப்பு

பல வருட அனுபவமுள்ள கணித பாட ஆசிரியரால் பிரத்தியேக வகுப்புக்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். ஆண்டு 8 தொடக்கம் 11 வரை (Past Paper Class) வேலைநாள்களில் பிற்பகல் 2.30 தொடக்கம் 4.30 வரை (தண்ணீர் ஊற்று, முள்ளியவளை, வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு) நேரம் பொருத்தமானவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

075 874 5237

## மணமகள் தேவை

இந்து சைவ கௌவர குடும்பம் வயது 31, உயரம் 5'8" அழகான வெள்ளை நிறம் கொண்ட DOCTOR (M.B.B.S) இற்கு பல்கலைக்கழகப் பட்டம்பெற்ற, அரச தொழில் புரியும் மணமகள் தேவை.

077 989 7931

## மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்: May 2022 இரண்டாம் வாரம் ஆரம்பம்.

1) மின்னியலாளர் (Certificate in Electrician) NVQ பாடத்திட்டத்தை தழுவியது. சுயதொழிலில் ஈடுபடுவதற்கும், (GCE (A/L) பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் கல்வியைத் தொடர்வதற்கும் ஏற்றது. ( 3 மாதங்கள் முழு நேரம்)

2) Certificate in Craft Courses (6 மாதங்கள் முழு நேரம் தமிழ் மொழி மூலம்)
- குளிரூட்டுதல் பயிற்சி நெறி Refriguration & Air Conditioning Mechanic
- அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும் NVQ level -3 (Accredited) -Aluminum Fabricator

மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது. (TVEC) பதிவு இலக்கம் - P25/0014, Facilities Library & Sports

மேலதிக விபரங்களுக்கு, DIRECTOR JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY VADDUKODDAI, JAFFNA, SRI LANKA.

Tel : 021 321 3139 / 021 225 0975

E-mail: ejcit@sltnet.lk

## கடை வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, மூன்றாம் கட்டை, கல்வியங்காடு (யாழ்ப்பாணம்) அமைந்துள்ள நான்கு கடைகள் வாடகைக்குண்டு.

077 175 0746, 077 806 9790

## தனியார் வகுப்பு

தரம்: 6 - 11 வகுப்புகளுக்கு விஞ்ஞானம், கணிதம் பாடங்கள் (தமிழ் / ஆங்கில) மொழியில் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். (தனியாகவோ, குழுக்களாகவோ)

077 639 1935

## தங்குமிடம்

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் பல்கலை மாணவர்/ தொழில் புரிவோருக்கான தங்குமிடம் தொடர்பு: 021 222 1268, 076 849 1738 மற்றும் கைதடி. கொழும்பு பம்பலப்பிட்டியிலும் பெண்களுக்கான தங்குமிடம் - 076 693 5426, 0785679674

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி, ஞானவைரவர் கோவிலடியில் நான்கரைப் பரப்பு வீடு உடனடி விற்பனைக்கு விலை 20 மில்லியன். பேசித் தீர்மானிக்கலாம்.

(CR 35923) (4/6)

076 740 7464

## சென் ஜோன்ஸ் கல்லூரி - யாழ்ப்பாணம்

### வேலையாட்கள் தேவை (ஆண்)

எமது கல்லூரிக்கு வேலையாட்கள் தேவை. தங்களது சுயவிபரக் கோவையுடன் பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றின் போட்டோ பிரதிகளையும் மற்றும் கிராம சேவகரின் நற்சான்றிதழ், வதிவிட சான்றிதழ் ஆகியவற்றினையும் இணைத்து 10.05.2022 முன்பு பதிவுத் தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்:

அதிபர்,
சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(cr.35910) (2.6)

## ST. JOHN'S COLLEGE. JAFFNA

### VACANCY

Applications are hereby invited from qualified persons to teach :

**Western Music - Grade: 6 - 11**

Please send your complete CV with the contact details of two non-related referees by registered post to reach before 10 May 2022 to the address given below:

The Principal
St. John's College Jaffna.

(cr.35910) (2.6)

## St. John's Academy & College of Technology

TVEC

**G.C.E. O/L = NVQ 3**
**G.C.E. A/L = NVQ 4**

TVEC Registration No.P25/0076

**O/L, A/L**
**Boys & Girls!**
**Can Apply**

Application Form Issue : 06.05.2022
Closing Date for Applications : 03.06.2022
Course Commencement : 6th June 2022

### Available Courses

- Pre School Teacher NVQ Level - 04
- Computer Hardware Technician Level - 03 & 04
- Information and Communication Technology Level - 03 & 04

For further details:
Call over at the office during 08.00 am – 3.30 pm on working days.
St. John's College,
446 Main Street, Chundikuli, Jaffna.
Tel: 0212216680
Email: sjcjaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 44ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 07 . 1950



மறைவு 01 . 05 . 1977

## அமரர் குமரையா தேவராஜன்

மே மாதமே
நீங்கள் எங்களைப் பிரிந்தாலும்
நீங்கள் எங்களுடன் இருப்பதை நாங்கள் ஒவ்வொரு
நிமிடமும் உணருகின்றோம்
*என்றும் அழியாத நினைவுகளுடன்*

தேவராஜன் (மனைவி), டீன் தேவராஜன் (மகன்),
சசி தேவராஜன் (மகன்), ஜெசி தேவராஜன் (மருமகள்),
நிருபா தேவராஜன் (மருமகள்),

**பேரப்பிள்ளைகள் :**
சன்ரல் தேவராஜன், சஞ்ஜஸ் தேவராஜன்,
சவி தேவராஜன்,ராயன் தேவராஜன், ஜெய்டன் தேவராஜன்,
அஸ்ரன் தேவராஜன்.

**இல. 28, றக்கா ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17.01.1936 மறைவு 29.04.2022

அமரர்
## க.ச.கணபதிப்பிள்ளை

எமது ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் பரிபாலன சபையில் நீண்டகாலம் உறுப்பினராகவும் உப தலைவராகவும் பதவி வகித்து ஆலய நலனில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டுவந்த அன்னார் கடந்த (29.04.2022) அன்று அமரத்துவம் அடைந்தமை எமக்கு பேரிழப்பாகவே உள்ளது.

அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வீரகத்திப்பிள்ளையாரை பிரார்த்திக் கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**நம்பிக்கை பொறுப்பாளர் பரிபாலன சபையினர்
கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் முதலாய
கோயில்கள்**

# மரண அறிவித்தல்


## R.B.C.Ariaratnam

ஓய்வு பெற்ற Ceylon Tobacco Company யின் பிராந்திய விற்பனை முகாமையாளரும், Ceylon Business Appliances முகாமையாளரும், யாழ்ப்பாணம் சென் . ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவருமான Reginald Benjamin Chelvakularasa (செல்வம்) கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார். அன்னார் Dr.பிறேமினி அரியரட்ணம் (Retired Medical Officer Chest Clinic & MRI) அவர்களின் அன்புக் கணவரும் ராஜன் (சிங்கப்பூர்) காலஞ்சென்ற குலம், ஞானோ (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைச் சகோதரரும் ரஜீவ் (PharmEvo) ஏஞ்சலியா (ஆஸ்திரேலியா) சஞ்ஜீவ் (MobiWorld) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பிரியாஞ்சலி, பிரசங்கா (ஆஸ்திரேலியா) டவினா ஆகியோரின் அன்பு மாமனாரும் யசிந்து, ஷெனூரா, டினன்யா, கேஷிகா, ஹனா, ஜேடன், ஏரன், நேத்தன் ஆகியோரின் அருமைப்பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று மே மாதம் முதலாம் திகதி காலை 10.00 மணி முதல் பொரளை ஜயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் . நாளை திங்கட் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இறுதி ஆராதனை நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பொரளை பொதுமயானத்திற்கு (அங்லிக்கன் பகுதி) எடுத்துச் செல்லப்படும்.

தகவல் : மனைவி ,பிள்ளைகள்

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 04 . 1999



மறைவு 12 . 05 . 2020

**அமரர் திரு.உதயகுமார் உதயரூபன் (அளவெட்டி)**

எம்மோடு நீ சிரித்துப் பேசிய நாட்கள் எண்ணிட
நெஞ்சம் நெருப்பாய் கொதிக்கிறதே
அழகும் உன் சிரிப்பும் இப்போதும் என்
கண்களில் நிழலாடுதே
எப்போது மீண்டும் வருவாய் எம்மிடம்

தவளக்கிரி முத்துமாரி அம்மன்
கோவிலடி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

குடும்பத்தினர்.

(CS44401) 1-6


## வாடகைக்கு அல்லது குத்தகைக்கு

பருத்தித்துறையில் இயங்கிக் கொண்டிருக்கும்
**சைவ உணவகம்**
சகல தளபாடங்களுடன்
குத்தகைக்குகொடுக்கப்படும்.
074 140 7599

cs 18240(2.6)

## Chemistry வகுப்பு

(Tamil Medium / English Medium)
GCE A/L மாணவர்களுக்கான இரசாயனவியல்
வகுப்புகள் தனியா கவோ / குழுவாகவோ
தகுதிவாய்ந்த [BSc (Hons) in Chemistry]
ஆசிரியையினால் கற்பிக்கப்படும்
இடம் : கோண்டாவில் மேற்கு, கந்தர்மடம்.
076 751 6379,077 233 6267


# மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 01 . 1938



இறப்பு 30 . 04 . 2022

## திருமதி பரமானந்ததேவி மயில்வாகனம்

கைதடி மத்தி (உதயதாரகை) கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமானந்ததேவி மயில்வாகனம் நேற்று (30.04.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், இராமலிங்கம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராமலிங்கம் மயில்வாகனம் (கல்வி அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், சுஜித்திரா (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி ஊழியர்), கவிதரன் (பொறியியலாளர்), சுரேசன் (ஆசிரியர் - வவுனியா), கபாலினி (பிரான்ஸ்), தயாளினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரப்பிரமானந்தம் (வவுனியா), கலைச்செல்வி (ஆசிரியர் - வவுனியா), இந்திரகுமார் (பிரான்ஸ்), சுதர்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பரமநாதன், பரமானந்தராஜா, காலஞ்சென்ற பரமநாயகம், கிருஷ்ணராசா, கணேஸ்வரன், சுத்தானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், லக்சனா, தாட்சாயினி, அஞ்சணன், சஞ்சை, அல்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உதயதாரகை,
கைதடி மத்தி,
கைதடி.

தகவல்:
பிள்ளைகள்
077 615 5950
077 179 4084

(cs 44427) (2.6)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 1
விவேகானந்தா முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று பி.ப. 3 மணிக்கு, மஞ்சத்தடி ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது. வி.கே.குகானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேசசபை செயலர் சு.சுதர்ஜன் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-இ)

## மோட்டார் ஷெல் மீட்பு

யாழ்ப்பாணம், மே 1
பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்வாய் மேற்குப் பகுதியில் மோட்டார்ஷெல் மீட்கப்பட்டுள்ளது. காணியை துப்புரவாக்கிய ஒருவர் இதன்போது ஷெல்லை அவதானித்துள்ளார். கிராம அலுவலர் ஊடாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மோட்டார்ஷெல்லை மீட்டு செயலிழக்கச் செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஓ-125)



## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 1
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் தொடர்பாடல் ஆங்கிலம் மற்றும் கணினி அடிப்படைக் கல்வி ஆகிய குறுகிய கால கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 18 வயதுக்கு மேற்பட்ட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்திபெற்றோர் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
கற்கைக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு யாழ். பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூரோவைப் பயன்படுத்தும் ஐரோப்பிய நாடுகளில் பணவீக்கம் எகிறியது!

### ரஷ்யாவுடனான பகைமையே காரணம்

**பரிஸ், மே 1**

**உக்ரைன் - ரஷ்யா விவகாரத்தில் ரஷ்யாவுடனான பொருளாதாரப் போர் காரணமாக யூரோவை நாணய அலகாகக் கொண்ட நாடுகளில் உச்சக்கட்டப் பணவீக்கம் பதிவாகியுள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையில் ஐரோப்பிய நாடுகள் பலவும் உக்ரைன் பக்கமாக நிற்கின்றன. ரஷ்யாவுக்கு பல ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளன. தன் மீதான பொருளாதாரத் தடைக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக எரிவாயுவும் எரிபொருள்களும் யூரோவுக்கும் டொலருக்கும் வழங்கப்படாது என்றும் ரூபிளுக்கு மட்டும்தான் அவை வழங்கப்படும் என்றும் ரஷ்யா அறிவித்தது. இதனால் யூரோவைப் பண அலகாகக் கொண்ட நாடுகளில் நாணயச் சுழற்சித் தேக்கம் ஏற்பட்டு அங்கு உச்சக்கட்டப் பணவீக்கம் பதிவாகியுள்ளது. 7.5 வீதமான பணவீக்கம் மேற்படி ஐரோப்பிய நாடுகளில் பதிவாகியுள்ளது.

இந்தப் பணவீக்கத்தால் ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளைக் கைவிட்டு அல்லது பொருளாதாரத் தடைகளில் விட்டுக்கொடுப்பை மேற்கொண்டு பரஸ்பரம் சுமுகமான வணிகமொன்றுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்துக்கு ஐரோப்பிய நாடுகள் தள்ளப்பட்டுள்ளன என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)



# உலகிலேயே உயரமான இயேசுசிலை பிரேஸிலில்!

ரியோ, மே 1

தெற்கு பிரேஸிலில் உள்ள என்காண்ட்டோ எனும் நகரில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் உலகின் உயரமான இயேசு சிலை அமைக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிலை 141 அடி உயரத்தில் நெஞ்சுப் பகுதியில் இதயவடிவ ஜன்னல் அமைக்கப்பட்டு அதிலிருந்து நகரைப் பார்க்கக்கூடியவாறு அமைக்கப்படுகிறது.

'கிறிஸ்ட் தி ப்ரொடெக்டர்' என இந்தச் சிலைக்கு பெயரிடப்பட்டுள்ளது.

இதேவேளை- பிரேஸிலில் 1922ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட 125 அடி உயர இயேசு சிலை ரியோ நகரம் மற்றும் பிரேஸில் நாட்டு சின்னமாகக் கருதப்படுகிறது. (ச-இ)

# பாகிஸ்தானில் நீண்ட மின்தடை

### மக்கள் பரிதவிப்பு



இஸ்லமாபாத், மே 1

பாகிஸ்தானில் எரிபொருள் மற்றும் எரிவாயு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் அங்கு பல பகுதிகளில் நீண்ட நேர மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நகர்ப்புறங்களில் 6 முதல் 10 மணிநேரம் வரையிலும், கிராமப்புறங்களில் ஒரு சில பகுதிகளில் ஒரு நாளைக்கு சுமார் 18 மணிநேரமும் நீடித்த மின்வெட்டு ஏற்படுகிறது என்று உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எரிசக்தி நெருக்கடி மற்றும் விநியோகத்தில் மாறுபாடு நிலவுவதன் காரணமாகவே மின்உற்பத்தி ஆலைகளில் போதுமான மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடிவதில்லை. இதனால் சுமார் 6 ஆயிரம் முதல் 7ஆயிரம் மெகாவாட் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. இந்த நீண்டநேர மின்வெட்டால் அங்குள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். (ச-இ)



# கலிபோர்னியாவில் தண்ணீர்ப் பஞ்சம்

வொஷிங்கடன், மே 1

அமெரிக்க கலிபோர்னியா மாகாணத்தில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது.

இதனால் கலிபோர்னியாவின் தெற்குப் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறையால் 60 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அங்குள்ள மலைக் குன்றுகள், ஏரி மற்றும் ஆறுகளில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இந்தத் தண்ணீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அங்கு அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன்படி தோட்டங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுதல் உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் முதற்கட்டமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பருவநிலை மாற்றப் பிரச்சினை இதற்குக் காரணமாக இருக்கக்கூடும் என ஆய்வாளர்களால் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# ஆப்கான் மசூதியில் குண்டுவெடிப்பு

### 50 பேர் சாவு!

காபூல், மே 1

ஆப்கானிஸ்தானில் உள்ள மசூதி ஒன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 50 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானின் காபூல் நகரிலுள்ள மசூதியில் ரமழான் நோன்பை முன்னிட்டு அதிகளவானோர் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவேளை இந்தக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 50 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்புத் தாக்குதலை நடத்தியது யார்? என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்களது உழைப்பை பணியிடத்தில் புரிந்து கொள்வார்கள். நேர்மையாகப் பணிபுரிவதால் பிரச்சினையில் இருந்து தப்புவீர்கள். எதற்காகவும் உணர்ச்சி வசப்பட வேண்டாம்.

**இடபம்:** கடந்த கால உழைப்பின் பலன் உங்களைத் தேடி வரும். பிறரது பிரச்சினையில் தலையிட வேண்டாம். பேச்சில் கவனம் தேவை. தேவையில்லாத செலவுகளை செய்யவேண்டாம்.

**மிதுனம்:** எதிலும் இருந்து வந்த தாமதநிலை மாறும். உற்சாகம் பெருகும். உங்களுடைய சில பழக்கத்தால் விமர்சனத்துக்கு உள்ளாவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கடகம்:** உங்களது விருப்பங்கள் ஒவ்வொன்றாக நிறைவேற ஆரம்பிக்கும். நற்செயலால் பாராட்டுப் பெறுவீர்கள். உற்சாகம் கூடும். குடும்பத்தினருக்கு பெருமிதம் ஏற்படும்.

**சிம்மம்:** குடும்பத்தினருக்கு கூடுதல் நன்மை ஏற்படும். உற்சாகம் குறையாது. புதியவர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். நல்லெண்ணம்மேலோங்கும். குறுக்கு வழியை நாட வேண்டாம்.

**கன்னி:** பெற்றோருடையபொருளாதார நிலை உயரும். கூடுதல் முயற்சியால் தொழிலில் வெற்றி அடைவீர்கள். பயணங்களில் எச்சரிக்கை தேவை. சிக்கல்கள் தீரும்.

**துலாம்:** முயற்சியில்வெற்றிகிடைக்கும். நிதி நிலை சீராகும். வாகனம் வாங்கும் திட்டம் நிறைவேறும். ஆதாயம் கூடும். குடும்பத்துக்காகச் செலவு செய்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்கள் யார், பகைவர்கள் யார் என்று பிரித்து அறிவீர்கள். இன்று குடும்பத்தினருடன் கடுமையாக நடந்து கொள்ள வேண்டாம். கடந்த காலத்தில் தொழிலில் இருந்து வந்த தடைகள் அகலும்.

**தனுசு:** புதிய செயல்களின் மூலம் புத்துணர்ச்சி கிடைக்கும். இன்று தொழிலில் வரவு குறைந்து செலவு அதிகமாகும். பதவியை பிடிக்க நேர்மையற்ற வழியில் செல்ல வேண்டாம்.

**மகரம்:** உடன்பிறந்தோர் உங்களுக்கு உதவி செய்ய காத்திருப்பர். முன்பு இருந்த தாமதம் நீங்கும். பணியிட பிரச்சினை மறையும். உழைக்க வேண்டி வந்தாலும்கூட உற்சாகமான நாள்.

**கும்பம்:** உங்களது முயற்சிக்கு உடனுக்குடன் நன்மை கிடைக்கும். தாயார் உடல்நிலைபற்றி இருந்துவந்தகவலை தீரும். உயர்ந்த நிலையை அடைய முயற்சி செய்வீர்கள்.

**மீனம்:** வெளியூர்ப்பயணத்தால்உற்சாகமாக காணப்படுவீர்கள். செயல்களில் வெற்றி கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும். குழந்தைகளால் பெருமிதம் அடைவீர்கள். மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபோஷ விநியோகம் நிறுத்தம்: சிறுவர்களுக்கு போசாக்கில்லை

கொழும்பு, மே1

சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக ளால், நாடளாவிய ரீதியில் திரிபோஷ விநியோ கம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் வடமத்திய மற்றும் கிழக்கு மாகா ணங்களில் சிறுவர்கள் போசாக்கின்மைக்கு உள்ளாகும் வாய்ப்புகள் அதிகம் ஏற்பட்டுள்ளன. முதல் சில மாதங்களில் மட்டுமே தமக்கு திரி போஷ கிடைத்தது என்று அந்த மாகாணங்க ளின் கர்ப்பிணிகள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை மூலப்பொருள்கள் பற்றாக்கு றையால் திரிபோஷ உற்பத்தி மூன்று மாதங்க ளுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று லங்கா திரிபோஷ நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (க-இ)



கிளிநொச்சி - பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் 3 மாணவர்களின் மகிழ்ச்சிகரமான ஆரம்ப செயற்பாடு அதிபர் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ய-159)



யாழ். வெற்றிலைக்கேணி கட்டைக்காடு பகுதியில் 55 ஆவது படைப்பிரிவினரால் புதிதாக அமைக்கப்பட்ட இயற்கையோடு இணைந்த மழலை பூங்கா யாழ். மாவட்ட படைமுகாம்களின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாப்பா வால் சிறார்களிடம் கையளிக் கப்பட்டது. (ய-113)

### வேகமாகும்...

கூடும் என்பதால், மீன்பிடி மற்றும் கடற்றொழில்களில் ஈடுபடுபவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

காங்கேசன்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட ஆழமுள்ள மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும் எனவும், காலியில் இருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்பில் ஆழமான மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்பில் கடற்றொழிலாளர்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ-ஒ-இ)

### பவுஸர்...

வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. அதிகரித்துள்ள எரிபொருள் விலைக்கு அமைவாக தமது கட்டணம் மாற்றியமைக் கப்படவில்லை எனத் தெரிவித்து போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதேவேளை- இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தின் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களை குறைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

'போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தனியார் எரிபொருள் பவுஸர் உரிமையாளர்களின் அனுமதியை ரத்து செய்து புதிய வழங்குநர்களுக்கு அனுமதி பத்திரம் வழங்கப்பட்டவுள்ளது. மேலும் ரயில்கள், அரசுக்குச் சொந்தமான பவுஸர்கள், தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச் சொந்தமான பவுஸர்கள் மற்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத தனியார் வாடகை பவுஸர்கள் மூலம் சேவைகள் தடையின்றி தொடரும். இதேவேளை - ஒக்ரேன் 95 பெற்றோல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது' என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ-ஒ-இ)


**தேவை**

MS-Office முடித்த அனுபவமுள்ள பணியாளர் தேவை. நெல், தேங்காய், தானிய வகை கொள்வனவு செய்யப்படும். உழுந்து உடைத்துக் கொடுக்கப்படும்.

077 7722 215

**வாகன சாரதி தேவை**

யாழ். நகரில் உள்ள கடை ஒன்றிற்கு சாரதி தேவை.

077 937 0000
075 988 1000

**ஆண், பெண் வேலையாள் தேவை**

யாழ். நகரில் உள்ள கடை ஒன்றில் 18 வயது தொடக்கம் 30 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தேவை.
ஆண் - சம்பளம் : 40,000 + மதிய உணவு
பெண் - சம்பளம் : 25,000 + மதிய உணவு
தொடர்புகளுக்கு:
077 9370000, 075 988 1000

**தேங்காய் துருவுவதற்கு வேலை ஆட்கள் தேவை**

இருபாலையில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றுக்கு இயந்திரத்தில் தேங்காய் துருவுவதற்கு வேலையாட்கள் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்) அனுபவ முள்ளவர்கள் விரும்பத்தக்கது.
**சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.** (CS 19578) 1-6
தொடர்புகளுக்கு:-077 986 2649


## மரண அறிவித்தல்

### கந்தையா துரைசிங்கம்



வத்திராயன் வடக்கு வடமராட்சி கிழக்கை பிறப்பிடமாகவும், இல.311 உதயநகர் கிழக்கு கிளிநொச்சியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கந்தையா துரைசிங்கம் கடந்த (29.04.2022) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா மற்றும் சிவகாமிப்பிள்ளையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரோசாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு, மேகவண்ணன், விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கருணாகரன் (ஆசிரியர், கிளி/ திருவள்ளுவர் வித்தியாலயம்), பகீரதி (இந்தியா), உதயகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதர்ஜினி (முகாமைத்துவ உதவியாளர் மாவட்ட செயலகம் - கிளிநொச்சி), டயாகணேஸ் (இந்தியா) அனுஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவின் (மாணவன் - உருகுனை பல்கலைக்கழகம்) அபிநயன் (கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், உயர்தர மாணவன்), சாகித்யன் (கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய சாதாரணதர மாணவன்), பிருந்தன் (இந்தியா), சரண்ராஜ் (லண்டன்), யதுசா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், ஸ்ரீஸ்கந்தநாகேஸ்வரி (லண்டன்), தவராணி (வவுனியா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை இல.311 உதயநகர் கிழக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 8.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மருதங்கேணி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

மலர்வு 18 . 06 . 1934



உதிர்வு 30 . 04 . 2022

### திருமதி கனகம்மா வல்லிபுரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்)

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா வல்லிபுரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்கள் நேற்று (30.04.2022) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வல்லிபுரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வி சரஸ்வதி கந்தையா இன் அன்புச் சகோதரியும், திருமதி அன்பரசியின் (ஆசிரியர் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்புத் தாயாரும், ரமணீதரன் இன் (நிலையப் பொறுப்பதிகாரி, விதை அத்தாட்சிப்படுத்தும் சேவை விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்), அன்பு மாமியாரும், ஆதித்யா, கனிஷ்கர் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.390, மீசாலை மேற்கு,
மீசாலை.
தொடர்புகளுக்கு:077 7781 110

தகவல்: திரு.அ.ரமணீதரன் (மருமகன்)

(CR 72911) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'கோத்தா கோ ஹம' லண்டனில் கிளை!

கொழும்பு, மே 1

காலிமுகத்திடலில் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கும் போராட்டக்காரர்களால் 'கோத்தா கோ ஹம' ஆரம்பிக்கப்பட்டதைப்போன்றுலண்டனிலும்'கோத்தாகோ ஹம' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரிட்டன் நாடாளுமன்ற வளாகத்தில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

# தமிழக பா.ஜ.க. தலைவர் இலங்கைக்கு வருகை

கொழும்பு, மே 1

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பின் பேரில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தலைமையிலான குழுவினர் இலங்கையை நேற்று வந்தடைந்தனர். அவரை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட உப தலைவர் திருக்கேஸ் செல்லசாமி மற்றும் அரசியல் அமைப்பாளர்களான ரகு, கோபி ஆகியோர் தலைமையிலான குழுவினர் விமான நிலையத்தில் வரவேற்றனர். (அ-ஒ-இ)

# இரகசிய ஆவணங்களை 'லீக்' செய்கிறார் அநுர

கொழும்பு, மே 1

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க நாளை மறுதினம் இர்கசிய ஆவணங்கள் சிலவற்றை வெளியிடப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச குடும்பம் மற்றும் அமைச்சர்களின் ஊழல் மோசடிகள் தொடர்பான ஆவணங்களை பொதுமக்களிடம் அவர் முன்வைக்கவுள்ளதாக இதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே தனது ருவிற்றரில் 'உரிமையாளர்களும் கேட்டவர்களும் மே 3 ஆம் திகதி விழிப்புடன் இருக்கவும்' என்று பதிவிட்டுள்ளார். (அ-ஒ-இ)

## சிறுபான்மையினருக்கு...

பௌத்தத்தின் மூன்று பீடங்களையும் சேர்ந்த ஆயிரம் தேரர்கள் கொழும்பு 7இல் உள்ள அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தில் இருந்து சுதந்திர சதுக்கத்துக்கு நேற்று மாலை பேரணியாகச் சென்றனர். அங்கு மகாநாயக்க தேரர்களின் அறிவிப்பை செயற்படுத்துமாறு வலியுறுத்தும் மகா சங்கத்தினரின் கட்டளைக்கான மாநாட்டை நடத்தினர். இந்த மாநாட்டில் உரையாற்றுகையிலேயே ஓமல்பே சோபித தேரர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் தவறான நிர்வாகத்தால் நாடு மிகப் பெரிய விளைவுகளை எதிர்கொண்டுள்ளது. நாகரிகமான முறையில் ஆடையணிந்து வெளிநாடுகளில் யாசகம் பெறும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு நட்பு நாடுகள் மனிதாபிமான அடிப்படையில் இலங்கைக்கு உதவிக் கரம் நீட்டியுள்ளமை வரவேற்கத்தக்கது.

சமூக மட்டத்தில் தோற்றம் பெற்றுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு இடைக்கால அரசாங்கத்தை நிறுவி தீர்வு காணவும், பிரதமர் உட்பட அமைச்சரவையை முழுமையாக பதவி நீக்குமாறும் மாகாநாயக்க தேரர்கள் கடந்த 4 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கூட்டாக அறிவித்தனர். எந்தவிதப் பதிலும் கிடைக்காத காரணத்தால் கடந்த 20ஆம் திகதி மகாநாயக்க தேரர்கள் மீண்டும் ஜனாதிபதியிடம் இடைக்கால அரசாங்கத்தை கூட்டாக வலியுறுத்தினார்கள். இடைக்கால அரசாங்கத்தை நிறுவாவிடின் சங்க மகா பிரகடனத்தை அறிவிக்க நேரிடும் என கூறியதைத் தொடர்ந்து ஜனாதிபதி இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவதாகக் குறிப்பிட்டுள்ளார். அதுவும் தற்போது இழுபறி நிலையில் உள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நீக்கி இடைக்கால அரசாங்கத்தை நிறுவுமாறு மகா சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு புறம்பாக அரச தலைவர்கள் செயற்பட்டால் இதுவரை காலமும் வழங்கிய ஆசீர்வாதம் அனைத்தும் சாபமாக மாறும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அரசாங்கத்தில் அதிகாரம் மிக்கவராக நிதி மற்றும் நீதியமைச்சர் அலிசப்ரி உள்ளார். ராஜபக்ச குடும்பத்தின் மோசடியை மறைப்பதற்காகவே அமைச்சர் அலிசப்ரிக்கு முக்கிய அமைச்சுப் பதவிகள் ஊடாக இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் உண்மை பின்னணியின் தன்மை தற்போது கட்டம் கட்டமாக வெளிவருகிறது. தமிழ், முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிராக அரசியல்வாதிகள் கடந்த காலங்களில் கட்டவிழ்த்துவிட்ட இனவிரோதங்கள், அடக்குமுறைக்கு ஒருசில பௌத்த மதத் தலைவர்கள் துணைசென்றுள்ளமை வேதனைக்குரியது - என்றார். (அ-ஒ-இ)

## கோத்தாபய...

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருக்கும்வரை, சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க இணங்க முடியாது என பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் மகா சங்கத்தினரிடம் நேற்று எடுத்துரைத்தன.

இதனால் சர்வகட்சி இடைக்கால அரசமைக்க பிரதான எதிர்க்கட்சிகளை பொது நிலைப்பாட்டுக்கு கொண்டுவரும் ஆரம்பக்கட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது. இது சம்பந்தமான பேச்சை தொடர்வதற்கும் இணக்கம் எட்டப்பட்டது. நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதி களுக்கும், மகா சங்கத்தினருக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்றிரவு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. சர்வ மதத் தலைவர்களும், சிவில் செயற்பாட்டாளர்களும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இந்தக்கூட்டத்தில் பங்கேற்குமாறு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ரஞ்சித் மத்தும பண்டாரவும், தேசிய மக்களின் சார்பில் விஜித ஹேரத்தும், 43 ஆம் படையணியின் சார்பில் சம்பிக்க ரணவக்கவும், சுதந்திரக்கட்சியின் சார்பில் மஹிந்த அமரவீரவும், 11 கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர். ரிஷாத்பதியுதீன், அதாவுல்லா, முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகளும் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவின் சார்பில் எவரும் பங்கேற்கவில்லை.

மகாசங்கத்தினரால் எடுக்கப்பட்ட முடிவு சம்பந்தமாக, கட்சி பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. அதன்பின்னர் கட்சிகளின் நிலைப்பாடு கோரப்பட்டது. அவ்வேளையிலேயே, ஜனாதிபதியும் பதவி விலக வேண்டும் என்பதே நாட்டு மக்களின் கோரிக்கை, அது நடக்க வேண்டும். ஜனாதிபதியும் பதவி விலகிய பின்னர் அமையும் சர்வகட்சி அரசே பொருத்தமாக அமையும் என ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் குறிப்பிட்டுள்ளன.

அத்துடன், தேர்தலொன்றுக்கு செல்வது சிறந்தது என்ற யோசனை தேசிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவி விலகாமல், புதிய பிரதமரின்கீழ் இடைக்கால அரசமைப்பதற்கு 11 கட்சிகளின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர். எதிரணிகள் வராவிட்டால், இருக்கும் தரப்புக்களை இணைத்துக்கொண்டாவது பயணிக்க வேண்டும் என வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

அதேவேளை, ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என பிரதான எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்பட்ட யோசனை மகாநாயக்க தேரர்களின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என மகா சங்கத்தினர் தெரிவித்தனர். (அ-ஒ-44)

## மஹிந்தவை...

மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை ஏற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச உடனடியாக பதவி விலக வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்களை குறைக்கும் வகையில் அரசமைப்பு மறுசீரமைப்பு அவசியம். இதற்கு உடன்பட்டு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், அனைத்து அரசியல்வாதிகளையும் புறக்கணிக்கும் ஒன்றிணைந்த சங்க ஆணை வெளியிடப்படும். இவ்வாறு கொழும்பில் நேற்று அணிதிரண்ட மகா சங்கத்தினர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைக்கு தீர்வாக மூன்று முக்கிய பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களால் 7 யோசனைகள் உள்ளடங்கிய கூட்டறிக்கையொன்று வெளியிடப்பட்டது. பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலக வேண்டும், சர்வகட்சி இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பது இவற்றில் பிரதான யோசனைகளாகும். எனினும், மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை ஏற்று பிரதமர் பதவி விலக மறுத்துவிட்டார்.

இந்நிலையில் மகாநாயக்க தேரர்களின் யோசனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்என தீர்மானம் நிறைவேற்றுவதற்காக மகா சங்கத்தினரின் சம்மேளனம், கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-44)

## சம்பளத்தைப்...

கைகளை முன்வைக்க இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது என்று அதன் தலைவர் கெமுனு விஜரத்ன தெரிவித்தார்.

அரசதுறை தொழிற்சங்கங்கள், வேதனத்தைப் பெற்றுக்கொள்ளாமல், ஹர்த்தாலில் பங்கேற்க இணக்கம் தெரிவிப்பது, எமது முதலாவது நிபந்தனை. எமது தொழிற்சங்கம் வேதனமின்றியே இந்த நடவடிக்கையில் ஈடுபடுகிறது. எனவே, அந்தத் தொழிற்சங்கங்களும், இதற்கு முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டும். இது குறித்து அமைச்சுக்களின் செயலர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கவுள்ளோம்.

மேலும், கனியவளக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

அரசாங்கம் வெளியேற வேண்டும் என வலியுறுத்தி எதிர்வரும் 6ஆம் திகதி ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்காக, பேருந்து சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக, தொழிற்சங்க மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

ஹர்த்தாலில் 30 இற்கும் அதிகமான ரயில் தொழிற்சங்கங்கள் பங்கேற்க உள்ளதாக, ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பின் இணைப்பாளர் எஸ்.பீ.விதானகே தெரிவித்துள்ளார். அன்று ரயில்கள் முழுமையாக சேவையில் ஈடுபட மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும், ரயில் இயந்திர சாரதிகள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் நிலைய அதிபர்கள், ஹர்த்தாலில் ஈடுபடுவது குறித்து இதுவரையில் தீர்மானம் மேற்கொள்ளவில்லை என ரயில்வே இயந்திர சாரதிகள் சங்கத்தின் செயலர் இந்திக்க தொடங்கொட தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## ஸ்டாலினுக்கு...

பதற்கு பெரியதொரு பங்களிப்பை தமிழக சட்டசபையில் முன்மொழிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு, இதயபூர்வமான நன்றிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

'மிக மிகப் பெரிய உதவியை இந்திய ஒன்றிய அரசின் ஊடாக இலங்கைக்கு அனுப்புவதற்கு தீர்மானித்து சட்டசபையில் நிறைவேற்றிய தீர்மானத்துக்காக எங்களுடைய உடன்பிறவா சகோதரர்களாகிய உங்களுக்கு இதயம்கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்' என்று கூட்டமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## பல்பொருள்...

பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். சிவப்பரிசி, நாட்டரிசி மற்றும் சம்பா அரிசி ஆகியனவே இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ளன.

ச.தொ.ச. ஊடாக மாத்திரம் வழங்கப்படும் அரிசியை பல்பொருள் அங்காடிகளுக்கு வழங்கும் பட்சத்தில் சலுகை விலையில் அரிசியை விற்பனை செய்ய முடியும் என்று பல்பொருள் அங்காடிகளின் உரிமையாளர்கள் உறுதியளித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று மே...

ஒழுங்குபடுத்தியுள்ளன. பிரதான எதிர்க் கட்சிகளின் மே தினக் கூட்டங்கள் கொழும்பில் இடம்பெறுவதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை ஆளும் கட்சி இம்முறை மே தினப் பேரணிகள் எதனையும் ஒழுங்கு படுத்தவில்லை. தமிழர் தரப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினம் வடக்கில் கிளிநொச்சியிலும், கிழக்கில் மட்டக்களப்பிலும் இடம்பெறவுள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது மேதின நிகழ்வுகளை மட்டக்களப்பில் முன்னெடுக்க வுள்ளது. (அ-ஒ-5)


## வாடகைக்கு வீடு தேவை

யாழ்நகரை அண்டிய பகுதியில் வாடகைக்கு வீடு தேவை (3 பேர்)

076 977 4628, 077 262 7890

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்கு அனுபவமுள்ள மேசன், கூலியாட்கள், தச்சுவேலை செய்வோர் தேவை.

(CS 19519) (4/6) 077 777 0969

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவுஸ்திரேலியாவில் பிரயாவுரிமை பெற்ற 1976ல் பிறந்த விவாகரத்துப் பெற்ற இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த எஞ்சினியர் மணமகனுக்கு பெற்றோர் உள்நாட்டு/வெளிநாட்டு அழகிய படித்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். மணமகனுக்கு மூன்றாம் இடத்தில் சூரியன், செவ்வாய் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்புக்கு:- 077 2659 883, 077 9530 606

## திருமண சேவை

Jaffnaroots.com

001 416 3195236 (கனடா)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அரியாலை பொன்னம்பலம் வீதிக்கு எதிராக கண்டி வீதியில் இருந்து மூன்றாவதாக இருக்கும் சுற்றுமதில் கட்டிய கிணற்றுடனும் சிறிய ஒரு அறை வீட்டுடனும் கூடிய காணி விற்பனைக்குண்டு.

077 293 5509

## ENGLISH CLASSES

யாழ்நகரில் தனி வகுப்புகள்

Grade 7 - G.C.E. O/L - A/L

Graduates தொழில்புரிவோர் - சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும்

GCE O/L English Literature

K.Ganesh B.A 077 766 8725

## வேலையாட்கள் தேவை

யாழ். மாவட்டத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள உணவகமொன்றிற்கு றொட்டி வேலை தெரிந்த வேலையாட்கள் தேவை. (CS 44426) (4/6)

076 722 7047

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு இரவு நேர கிராபிக் டிசைனர் (Graphics Designer) தேவை. (முழுநேரம் / பகுதி நேரம்)



ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிபரக் கோவையுடன் நாளை (02.05.2022) திங்கட்கிழமை மாலை 05.00 மணிமுதல் 7.00 மணிவரை நேரில் சமுகம்தரவும்.

உதயன் பணிமனை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## அறிவிப்பாளர் தேவை

Youtube Cooking Channel இற்கு அறிவிப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு:

001 416 786 7241 (கனடா)

## விற்பனையாளர் தேவை

மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள வியாபார நிலையத்துக்கு அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை.

வயது : 25 - 45

076 287 8655

## தனியார் குழு வகுப்பு

உயர்தர /கணிதத்தில் மேற் கற்கைகளுக்கு விருப்பமுடைய மாணவர்களுக்கான இணைந்த கணிதம் / கணித வகுப்புக்கள் ஆசிரியர் செ.அன்று சேவியர் (077 249 4540) மேற்கொள்ளலாம்.

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆடை மற்றும் பான்சி வியாபார ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை. (cs.19496) (2/6)

076 256 2609

## வாடகைக்கு

ஆரியகுளம் சந்தியிலிருந்து 50M உட்பட்ட தூரத்தில் வீட்டுடன் கடை வாடகைக்கு உண்டு.

077 507 5487

## மின்சாரம் துண்டித்து விட்டதா?

இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்.

மின்சாரம் இருக்கும் போது பற்றி சார்ஜர் மூலம் மின்சாரம் சேமித்து மின்சாரம் இல்லாத நேரத்தில் சேமித்து வைத்த மின்சாரத்தை பற்றி மூலம் 12V 220V INVERTER மின்சாரம் பயன்படுத்த முடியும். 10 மணித்தியாலம் LIGHT, FAN, TV , RADIO, CCTV CAMERA மின்சாரப் பொருள்கள் பாவிக்க முடியும்.

J.J GROUP No:603, K.K.S.Road Jaffna. 021 222 8854, 077 555 5100 (CS 19475) (4/6)

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கிவரும் அலுவலகத்திற்கு படித்த வேலையாள்கள் தேவை.

077 830 8360

076 776 8444

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கும் தொண்டு நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக தேவைகளிற்காக யாழ்நகர் அல்லது நல்லூர் பகுதியில் அமைதியான சூழலில் வீடு ஒன்று வாடகைக்கு தேவை.

077 919 1529

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளானில் ஒட்டகப்புலத்தில் 39 பரப்புக் காணி 2 பரப் பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

- அச்சுவேலி தெல்லிப்பழை பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி
- பிரதான வீதியில் இருந்து 50 M தூரத்தில்
- ஒட்டகப்புலம் றோ.க.த.க. பாடசாலைக்கு அருகாமையில் 14 அடி பாதையுடன்.
- அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 02 KM தூரத்தில்
- பரப்பின் விலை 5 லட்சம்

தொடர்பு: 077 9116 983

## சிறுநீரகம் தேவை

B அல்லது O குருதி வகை சிறுநீரகம் ஒருவரின் உயிரினை காப்பதற்கு அவசரமாக தேவைப்படுகிறது. சிறுநீரகம் தர விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 311 9361

## சாரதி தேவை

எமது நிறுவனத்தில் வேலைசெய்ய அனுபவமுள்ள சாரதிதேவை. இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் வாகனம் செலுத்தக்கூடிய அனுபவம் 5 வருடம்

வயது : 25 - 50

விண்ணப்பதாரிகள் பின்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

076 287 8655

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரம் பகுதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

14 அடி பாதையுடன்

நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்

கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 2 KM தூரம்

நல்லூர் கந்தசுவாமி கோவிலிருந்து இருந்து 3 KM தூரம்

**பார்வையிடும் நேரம் :**

**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை**

**1 பரப்பின் விலை** 750,000/=

தரகர் தேவையில்லை

ஜெயம் 077 8147 389

077 2417 589


## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் இருந்து 100M தூரத்தில் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**(பரப்பு ஒரு கோடியே அறுபது லட்சம்)** (CS 0044428) (4/6)

077 321 5353, 077 390 2994


## மரண அறிவித்தல்



### கந்தையா குலசிங்கம்

**(ஊடகவியலாளர், அகில இலங்கைச் சமாதான நீதவான், முன்னாள் யாழ்.மாவட்ட வர்த்தக சங்க சமாசத் தலைவர்)**

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குலசிங்கம் அவர்கள் கடந்த (29.04.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஷக்கடி வைத்தியர் கந்தையா ஆசைப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான கந்தையா மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நகுலேஸ்வரியின் ஆருயிர்க் கணவரும், திலீபன் (அதிபர், யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை), சுஜீவன் (ஜேர்மனி), ஹர்சன் (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, நடராசா தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கவிதா (ஆசிரியர், யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), ரேணுகா (ஜேர்மனி), நிலானி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டிதுஷன், றதுஷன், அரண்யா, அக்ஷயா, அபினயா, அபிராமி, வேணிஷா, சக்ஸ்சன் ஆகியோரின் அருமைப் பேரனாரும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் தேவராசா, நாகலிங்கம், சரஸ்வதி, பராசக்தி, பாக்கியலட்சுமி மற்றும் நாகம்மா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சின்னராசா, நகுலாம்பிகை, நாகம்மா கேசவநாதன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தாவடியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, தாவடி.

தகவல்: குடும்பத்தினர். (தொ.பே.இல:077 670 1485) (CS 956) 1/6

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

பக்கங்கள்: 08

பின்னாலே தெரிவது அடிச்சுவடு
முன்னாலே இருப்பது அவன் வீடு
நடுவினிலே நீ விளையாடு
நல்லதை நினைத்தே போராடு
- கண்ணதாசன்

# சஞ்சீவி

மலை 33: | வள்ளுவர் ஆண்டு : 2053 | சித்திரை 18 | ஞாயிற்றுக்கிழமை (01.05.2022) | சிகரம் : 97



# சஜித்தின் கதையும் மகாநாயக்கர்களின் கடிதமும்!



அ.நிக்ஸன்

கோத்தாபயவுக்கு எதிரான போராட்டத்தில் வடக்கு, கிழக்குத் தமிழர்கள் பெரிதாக பங்குகொள்ளாதவொரு நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி பதவிக்கு வந்தால் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியிருக்கிறார். ஆனால் அவருக்கு ஆதரவான சிங்கள சமூகவலைத்தளங்களில் தமிழர்கள் போராட்டங்களில் பங்கெடுக்காமை குறித்து இனவாதக் கருத்துகள் பதிவிடப்படுகின்றன.

ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் வடக்கு, கிழக்குத் தமிழர்கள் கூடுதல் ஆதரவு என்ற கண்ணோட்டத்தில் சஜித் பிரேமதாஸ, ரணிலுடைய அணுகுமுறையைப் பின்பற்றி 13 தொடர்பாகப் பேசியிருக்கலாம் என்று சிங்கள சமூகவலைத்தளத்தில் பதிவிடப்பட்டிருந்தது. '13' அரசியல் தீர்வல்ல என்று தமிழர்களின் அதிகமானோர் பேசுகிறார்கள் என்று தெரிந்தும் , இந்தியாவைச் சமாளிக்கும் நோக்கில் சஜித் அவ்வாறு கூறியிருக்கலாம் என்ற சில பதிவுகளும் உண்டு. கோத்தாவுக்கு எதிரான போராட்டத்தில் வடக்கு, கிழக்குத் தமிழர்கள் ஏன் பங்குபற்றவில்லை? என்ற வாதங்கள் சிங்கள சமூகவலைத்தளங்களில் மாத்திரமல்ல, இந்திய ஊடகங்களிலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்தவொரு சூழலில் சஜித் பிரேமதாஸ பி.பி.சி. செய்திச் சேவைக்குப் '13' பற்றிச் சொல்லியிருக்கிறார். ஆனால் '13' பற்றியும் கோத்தாவுக்கு எதிரான போராட்டம் குறித்தும் தமிழர்கள் தெளிவாகவே இருக்கின்றனர் என்பது பட்டவர்த்தனம்.

'கோத்தா வீட்டுக்குப் போ' என்ற போராட்டம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் பல கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. தொடர்ச்சியாகக் கூட்டங்கள் நடத்தப்படவுமுள்ளன. "உங்களைப் புரிந்துகொள்கின்றோம். ஆனால் எங்களை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்" என்று யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் சமூக அமைப்பு ஒன்று வெளியிட்டுள்ள அறிக்கை பல உண்மைகளை சிங்கள மக்களுக்கு உணர்த்தியிருக்கிறது. குறிப்பாக ரணில், சஜித் மற்றும் ஜே.வி.பிக்கு நல்லதொரு புரிதலை சிவில் சமூகத்தின் அறிக்கை உணர்த்தியிருக்கிறது.

மக்களின் போராட்டத்தை நிராகரிக்கவோ புறக்கணிக்கவோ முடியாது என்ற கருத்து வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள் மற்றும் பொது அமைப்புகளிடம் அதிகமாகவே உண்டு. ஆனால். தற்போதைய நெருக்கடிக்கான சிங்கள மக்களின் போராட்டத்தில் பங்குபற்றாமல் வெளியில் நின்று ஆதரவு கொடுக்க வேண்டும் என்ற கருத்துக்கள் தமிழர்கள் மனதில் ஆழமாகவே பதிந்துள்ளன.

முப்பது ஆண்டுகாலப் போரிலும் அதன் பின்னரான பன்னிரண்டு வருடங்களிலும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படைப் பிரச்சினைகள் ஏராளம். நிரந்தர அரசியல் தீர்வுக்கு முன்னர் போரின் பக்கவிளைவுகளுக்குக்கூட உரிய தீர்வுகள் பெறப்படாதவொரு சூழலில், தற்போதைய பொருளாதார நெருக்கடியில் ஈழத்தமிழர்கள் மேலும் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

ஆனால் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் முப்பது ஆண்டுகாலப் போரும் அதன்பின்னர் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவ மயமாக்கல், சிங்களக் குடியேற்றங்கள் போன்ற இனரீதியான செயற்பாடுகளுமே காரணம் என்பதை சிங்கள அரசியல் தலைவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? என்பது சந்தேகமே.

எரிபொருள்களுக்கான விலை அதிகரிப்புகள் கட்டுப்பாடின்றி நாளுக்கு நாள், வாரத்துக்கு வாரம் ஏறிச் செல்லும் நிலையில் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் மருந்துப் பொருள்களின் விலைகளும் கட்டுப்பாடின்றி அதிகரித்து வருகின்றன.

ஆகவே இதற்கு எதிராகப் போராடுகின்ற சிங்கள மக்கள், இன ரீதியாக வகுக்கப்பட்ட அரசியல், பொருளாதாரத் திட்டங்களே இதற்குக் காரணம் என்றும், ஆகவே இலங்கை அரச கட்டமைப்பில் மாற்றங்களைச் செய்து தமிழ், முஸ்லிம் மக்களும் சம உரிமையோடு வாழும் சூழலை உருவாக்கினால் மாத்திரமே, பொருளாதார வளர்ச்சியும், அரசியல் ஸ்திரத்தன்மையும் ஏற்படும் என்ற நம்பிக்கையையும் முதலில் வெளிப்படுத்த வேண்டும்.



1947 ஆம் ஆண்டு இன ரீதியான அரசியல், பொருளாதாரத் திட்டங்கள் வகுக்கப்பட்ட காலந்தொட்டு சிங்கள ஆட்சியாளர்கள் அனைவரிடமும் ஊழல், மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் என்பன இருந்தே வருகின்றன.

ஆகவே தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குரிய மூல காரணத்தை அங்கிருந்துதான் நோக்கவேண்டும். வெறுமனே இது ராஜபக்ச குடும்பத்துக்குரிய பிரச்சினை மாத்திரமல்ல. 1983 ஆம் ஆண்டில் இருந்து போர் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் ஊழல்மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் இருந்ததாக சிங்கள சமூகவலைத்தளங்களில் பதிவுகள் காணப்படுகின்றன. 'சொந்த மக்களையே கொலை செய்ய அனுமதித்து விட்டு அதன் பின்னரான பன்னிரண்டு வருடங்களில் ஊழல்மோசடிக்கும், அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கும் இடமளித்துவிட்டோம்' என அந்தச் சிங்கள சமூக வலைத்தளங்களில் பதிவுகள் சொல்கின்றன. ஆனால் வேறு சில பதிவுகளில் பௌத்ததேசிய இனவாதம் மேலோங்கியுள்ளது. குறிப்பாகத் தமிழர்களின் போராட்டத்தில் சிங்கள மக்கள் கொல்லப்படடார்கள் என்றும் அதற்கு நீதி தேவை என்ற கோணத்திலும் தற்போது பதிவுகள் வெளிவருகின்றன. இலங்கைத் தேசியக் கொடியை தமிழர்கள் ஏற்க வேண்டும் என்றும், அந்தக் கொடியின் கீழ் அணி வகுத்து காலிமுகத்திடல் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டுமெனவும் சிங்கள சமூகவலைத்தளங்களில் பதிவுகள் வலியுறுத்துகின்றன.

பொருளாதார நெருக்கடிக்கு ஈழப்போர் காரணம் என்பதால், ராஜபக்சக்களைக் குறை சொல்லத் தேவையில்லை. தமிழர்கள்தான் இதற்குப் பொறுப்பேற்க வேண்டுமென்ற இனவாதப் பதிவுகளும் உள்ளன. குறிப்பிட்ட சில பதிவுகள் மாத்திரமே வடக்கு, கிழக்குத் தமிழர்களை நியாயப்படுத்துகின்றன.

இந்த நெருக்கடி நிலையில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்துத் தமிழர்களைத் திருப்திப்படுத்தலாம் என்ற கருத்துகள் பிரதான சிங்கள அரசியல் கட்சிகளிடம் உண்டு. ஆனால் ஊழல் மோசடி, அதிகாரத்துஷ்பிரயோகம் என்பவற்றுக்கான அடிப்படை மூல காரணம் எது என்பதைப் புரிந்துகொள்ளாமல், இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் உள்ள 20 ஆவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்து மீண்டும் 19 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருவதும், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்களை நாடாளுமன்றத்துக்குப் பாரப்படுத்துவதும் உரிய தீர்வல்ல. இந்த மாற்றங்களுடன் சேர்த்து ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான உரிய அதிகாரப் பங்கீட்டையும் முன்வைக்க வேண்டும். ஆனால் அதற்குச் சிங்கள அரசியல் கட்சித் தலைவர்கள் தயாராக இருக்கின்றனரா? என்பதே கேள்வியாகும். இந்த நிலையில்தான் '13' ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கூறியிருக்கிறார்.

ஆனால் 13 இல் இருந்த அதிகாரங்கள் மீளவும் பெறப்பட்டமை தொடர்பாக சஜித் எதுவுமே கூறவில்லை. அத்துடன் 13 பற்றிப் பேசவே கூடாதென சஜித்துக்கு ஆதரவான சிங்கள சமூகவலைத்தளங்கள் கட்டளையிட ஆரம்பித்துள்ளன.

இந்த இடத்திலேதான் மகாநாயக்கர்களால் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு எழுதிய கடிதங்கள் வடக்கு,கிழக்குத் தமிழர்களுக்குப் பல சந்தேகங்களை உருவாக்கியுள்ளன.

'கோத்தா வீட்டுக்குப் போ' என்பதே சிங்கள மக்கள் நடத்தும் போராட்டத்தின் பிரதான இலக்கு. ஆனால் கடிதம் எழுதியுள்ள மகாநாயக்கர்கள் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகவேண்டுமெனக் கோரவில்லை. மாறாகப் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுப் பிரச்சினைகள் போன்றவற்றுக்கு உடனடித் தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

ஆகவே பதவி விலக வேண்டுமென தேரர்கள் ஏன் கோரவில்லை ?என்று இதுவரை எந்தவொரு சிங்கள அரசியல் கட்சியும் கேட்கவில்லை. சிங்கள சமூகவலைத்தளங்களிலும் அப்படியான பதிவுகள் இல்லை. மகாநாயக்கர்களை எதிர்ப்பது பௌத்த சிங்கள மக்களின் பண்பு அல்ல. அத்துடன் இலங்கை அரசியல் யாப்பை விட பௌத்த தேரர்களின் சொல்லுக்கே சிங்கள ஆட்சியாளர்கள் பணிவதும் அதிகம்.

ஆகவே கோத்தாபய ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலக வேண்டுமென மகாநாயக்கர்கள் கோரவில்லை என்பதன் பின்னணியில், எதிர்க்கட்சிகளின் அரசியல் நகர்வுகளில் உடன்பாடு இல்லை என்பதும், பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுகள் பொதுவான பிரச்சினையாக நோக்கப்பட வேண்டுமென்ற உத்தரவுமே மகாநாயக்கர்களின் கடிதத்தின் மூலம் வெளிப்படுகின்றன.

ஆகவே பௌத்த தேசியவாதம் இங்கே மேலும் மேலும் முதன்மை பெறுகின்றது . இப்படியானதொரு தருணத்தில் ' கோத்தா வீட்டுக்குப் போ ' என்ற போராட்டத்தில் தமிழர்கள் அமைதி காப்பதே மேல். சஜித்தின் '13' பற்றிய புதிய கதை என்பது இந்தியாவைச் சமாளித்துத் தமிழ்த்தேசியக் கட்சிகளையும் தன் பக்கம் ஈர்க்கும் தந்திரோபாயம் மாத்திரமே.

ஆகவே இத்தனை அவலங்களின் பின்பும் சிங்கள அரசியல் தலைவர்கள் மீண்டும் மீண்டும் சமாளிக்கும் ஏற்பாடுகளுடன் இயங்குவதானது, இலங்கைத்தீவில் பொருளாதார வளர்ச்சியோ, அரசியல் ஸ்திரத்தன்மையோ ஏற்பட வாய்ப்பில்லை என்பதையே கட்டியம் கூறி நிற்கின்றன.

அதேவேளை, எந்தவொரு நெருக்கடி நிலையிலும் பௌத்த தேசியத்தை விட்டுக் கொடுக்க முடியாதென்ற செய்தியை மாகாநாயகத் தேரர்களின்கடிதங்கள்வெளிப்படுத்தியுள்ளன. எத்தனை ராஜபக்சக்கள் வந்தாலும் சிங்கள பௌத்த மனோநிலை மாறப்போவதில்லை .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோத்தா கோ கமவும் மே பதினெட்டும்

○ நிலாந்தன்

கோத்தா கோ கம கிராமத்தில் யுத்த வெற்றி வீரர்களுக்கும் ஒரு குடில் ஒதுக்கப்பட்டமை தொடர்பாக நான் எழுதிய விமர்சனத்துக்கு நண்பர் ஒருவர் பதிலளித்தார். அரசியல் சிவில்.சமூக செயற்பாட்டாளரான அவர் அண்மையில் 'கோத்தா கோ கம' கிராமத்துக்கு விஜயம் செய்திருந்தார். அவர் தரும் தகவல்களின்படி ரணவிரு குடிலில் அமர்ந்திருக்கும் படைவீரர்கள் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்தே அதில் இணைந்து செயற்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது. அவர்கள் யுத்தவெற்றியை ஓர் அரசியல் முதலீடாக முன்னெடுக்கும் ராஜபக்சக்களின் யுத்த வெற்றிவாதத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் என்றும் அவர்களை யுத்த வெற்றிவாதத்துக்கூடாகப் பார்க்கத் தேவையில்லை என்றும் நண்பர் கூறினார்.

எனினும், ரணவிரு குடிலை அந்தக்கிராமத்தில் உருவாக்கக் காரணம் அரசாங்கம் முன்னெடுக்கக்கூடிய முறியடிப்பு நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கும்தான் என்ற ஒரு விளக்கம் உண்டு. இலங்கைத் தீவு ஏற்கனவே மூன்று தடவைகள் தன் சொந்த இளையோரின் ரத்தத்தில் குளித்த ஒரு நாடு. ஜே.வி.பி.யின் இரண்டு ஆயுதப் போராட்டங்கள், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் என்று கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் இலங்கைத்தீவு மூன்று தடவைகள் தனது சொந்த மக்களின் ரத்தத்தில் குளித்த ஒரு நாடு. எனவே இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் குறிப்பாக பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இழந்த இளைய தலைமுறையின் ஆர்ப்பாட்டங்களை அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு நசுக்காது என்று நூறுவீதம் நிச்சயமாகக் கூற முடியாது. ஆனால், அவ்வாறு நசுக்குவது என்றால் அதை தொடக்கத்திலேயே செய்திருந்திருக்க வேண்டும். இப்பொழுது அது உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் ஒன்றாக மாறியிருக்கும் பின்னணியில், குறிப்பாக கொழும்பின் மையத்தில், தூதரகங்களின் மத்தியில் அந்தக் கிராமம் அமைந்திருப்பதனால் அதனை இனி இரும்புக்கரம் கொண்டு நசுக்குவது கடினமானதாக இருக்கும் என்றும் ஒரு விளக்கம் உண்டு.

எனினும் அரசாங்கத்தின் முறியடிப்பு நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு ஒரு தற்காப்பு ஏற்பாடாக கிராமத்தில் குடியிருப்பவர்கள் ரணவிரு குடிலை அங்கு அமைத்திருக்கலாம் என்றும் கருதலாம். தாங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு எதிரானவர்கள் அல்ல, தமது போராட்டம் தேசத்துரோகமானது அல்ல என்பதனை அவர்கள் நிரூபிக்க முற்படுகிறார்கள். அவர்கள் கைகளில் சிங்கக் கொடிகளை ஏந்தி வைத்திருப்பதும் அவ்வாறான ஒரு தற்காப்பு உள்நோக்கத்தை கொண்டதா? என்ற சந்தேகம் தமிழ்த் தரப்பில் உண்டு.

இவ்வாறானதொரு பின்னணியில் கோத்தா கோகம கிராமத்தில் ரணவிரு குடில் உருவாக்கப்பட்ட பின் அங்கே மனிதஉரிமை செயற்பாட்டாளர்களால் காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கான ஒரு குடிலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது ரணவிரு கிராமத்தை சமன் செய்யும் ஒரு நடவடிக்கையாகவும் பார்க்கப்படுகிறது.

ஆயினும் இப்படிப்பட்ட எல்லா விமர்சனங்களுக்கும் அப்பால் கோத்தா கோகம கிராமத்தில் கூடியிருப்பவர்களோடு தமிழ்த் தரப்பு உரையாட வேண்டும். இப்பொழுது நொந்து போயிருக்கும் படித்த சிங்கள நடுத்தர வர்க்கத்தின் மனசாட்சியை உலுப்பும் விதத்தில் தமிழ்த் தரப்பு விடயங்களைச் சுட்டிக் காட்ட வேண்டும். அதன்மூலம் சிங்களப் பொது உளவியலைக் கூட்டுக் குற்ற உணர்ச்சிக்கு உள்ளாக்க வேண்டும். அவ்வாறு சிங்களப் பொது உளவியலின் கூட்டுக் குற்றவுணர்ச்சியைத் தூண்டவில்லை என்றால் இலங்கைத் தீவுக்குள் இரண்டு இனங்களும் எந்த ஒரு இணக்கத்துக்கும் போகமுடியாது. எனவே கோத்தா கோகம கிராமத்தோடு தமிழ்த்தரப்பு உரையாட வேண்டும். அதன் பொருள் மெய் மறந்து இணைந்து போராட வேண்டும் என்பதல்ல. முதலில் உரையாட வேண்டும்.

குறிப்பாக மே மாதம் தமிழ்மக்களைப் பொறுத்தவரை அது நினைவுகூர்தலுக்கான மாதம். கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ்மக்களின் நினைவுகூரும் கூட்டுரிமை மறக்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக தென்னிலங்கையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களின் நிலைப்பாடு என்ன?



இப்போதுள்ள நிலைமைகளின்படி ஜனாதிபதி வீட்டுக்குப் போகக்கூடிய நிலைமை இன்னமும் தோன்றவில்லை. அதேசமயம் பௌத்த மகா நாயக்கர்களின் வேண்டுகோளை ஏற்று ஜனாதிபதி உருவாக்கக்கூடிய இடைக்கால ஏற்பாட்டில் எதிர்க்கட்சிகள் இணையுமா? என்பதும் சந்தேகமே. இந்நிலையில் ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டு காலிமுகத்திடலில் கூடியிருப்பவர்கள் அவர் வீட்டுக்குப் போகக்கூடிய விதத்தில் திருப்திகரமான மாற்றங்கள் ஏற்படுமா என்பது சந்தேகமே.

அவ்வாறு அக்கிராமம் மே 18ஆம் திகதியும் அங்கே இருக்குமாக இருந்தால் நினைவு கூர்தல் தொடர்பாக கோத்தா கோ கம கிராமத்தில் இருப்பவர்கள் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டியிருக்கும்.

கோத்தா கோ கம கிராமத்தில் நினைவு கூர்வதற்கு இடம் இருக்குமா? அல்லது நினைவுகூர்தல் தொடர்பாக கோத்தா கோகம கிராமத்தில் இருப்பவர்களின் கருத்து என்ன? அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

கடந்த ஆண்டு சஜித் பிரேமதாஸ நினைவுகூர்தல் தொடர்பாக தமிழ் மக்களுக்கு சாதகமாகக் கருத்துத் தெரிவித்திருந்தார். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் துப்பாக்கியின் நிழலில்தான் நினைவு கூர முடிகிறது.

கடந்த ஆண்டு மட்டக்களப்பில் நினைவு கூர்தலை அனுஷ்டித்தவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு, கடந்த திங்கட்கிழமை தான் விடுவிக்கப்பட்டார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். எனவே நினைவு கூர்தல் தொடர்பில் கோத்தா கோகம கிராமத்தில் இருப்பவர்களின் தார்மீக நிலைப்பாடு என்ன என்பதனை அறிவது அவசியம். அந்தக்கிராமத்தில் இருப்பவர்கள் மற்றும் அந்தக் கிராமத்தை எதிர்ப்பின் மையமாக கருதுபவர்கள் அனைவரும் தமிழ்மக்களின் நினைவு கூர்தலுக்கான கூட்டுரிமை தொடர்பாக ஒரு நிலைப்பாட்டுக்கு வரவேண்டியிருக்கிறது. அந் நிலைப்பாடு தமிழ் மக்களை அந்தக்கிராமத்தை நோக்கி போவதா? இல்லையா? என்ற முடிவை எடுக்க உதவக்கூடும். தென்னிலங்கையில் நிகழும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் விலகி நின்று சாட்சிகளாகக் காணப்படும் தமிழ்மக்களின் மனதை மாற்ற அது உதவக் கூடும்.

இதுவிடயத்தில் தமிழ் தரப்பிலிருந்து யாராவது கோத்தா கோகம கிராமத்தோடு உரையாடினால் என்ன ?

இலங்கைத் தீவில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்துவது என்றால் அதற்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆகிய மூன்று தரப்புக்களும் இணைந்தால்தான் உண்டு. அதைத் தனியே சிங்கள மக்களால் செய்ய முடியாது என்பதைத்தான் 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் உணர்த்தியது. இப்பொழுதும் அடிப்படையான கட்டமைப்பு மாற்றத்துக்கு மூன்று இனங்களும் இணைய வேண்டும்.

ஆனால் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் பெரும்பாலானவர்கள் ஒரு குடும்பத்தை ஆட்சியில் இருந்து அகற்றினால் எல்லாம் சரியாகிவிடும் என்று கருதுவதாகத் தெரிகிறது. அவர்கள் தமது எதிர்ப்பு முழுவதையும் ஒரு குடும்பத்தின் மீதே குவிக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பசில் ராஜபக்சவின் மீது முழு வெறுப்பையும் காட்டுகிறார்கள். பஸில் ராஜபக்சவை ஒரு காகமாக உருவகித்து அவர் மீது தொடர்ச்சியாக தனிப்பட்ட முறையில் தாக்கி வருகிறார்கள். கடந்த செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சிகள் ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டத்தில் ஒரு பிரமாண்டமான காகச் சிலையை செய்து அதன் கழுத்தில் குரக்கன் சால்வையைக் கட்டி ஊர்வலமாக எடுத்துச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது. பூமிகா ஜெயசிங்க என்ற ஓவியர் காகத்தை குரக்கன் சால்வையோடு கழிப்பறைக் குழிக்குள் வைத்து ஓவியம் வரைந்திருக்கிறார். பெரியவர்கள் தொடக்கம் சிறுகுழந்தைகள் வரையிலும் காகம் என்றால் பஸில் என்று நக்கலடிக்கக் காணலாம்.

ஆனால் இங்கு பிரச்சினை ஒரு பஸில் ராஜபக்ச மட்டுமல்ல. அவர் பத்து வீதம் கொமிஷன் பெற்றதால் மட்டும் நாடு கெட்டுப் போகவில்லை. அல்லது ஏனைய ராஜபக்சக்கள் கொள்ளை அடித்ததால் மட்டும் நாடு கெட்டுப் போகவில்லை. இந்த எல்லா ராஜபக்சக்களும் எப்படி ஒரேயடியாக நாடாளுமன்றத்துக்குள் வந்தார்கள்? என்ற கேள்வியை சிங்களமக்கள் தங்களைத் தாங்களே கேட்க வேண்டும். யுத்தவெற்றிதான் அதற்கு அடிப்படைக் காரணம். தமிழ் மக்களுக்கு எதிராகப் பெற்ற வெற்றிதான். அதாவது இனவாதம். இனவாதத்தை முதலீடு செய்துதான் ஒரு குடும்பம் ஆட்சியைக் கைப்பற்றியது. இந்தக் குடும்பம் மட்டுமல்ல இதற்கு முன்னரும் கொழும்பை யார் ஆட்சி செய்வது என்பதனை இனவாதம் தான் பெருமளவுக்குத் தீர்மானித்திருக்கிறது. அதுதான் இலங்கைத்தீவின் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் அடிப்படைப் பண்பு. அதை மாற்ற வேண்டும். அதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தயாரா? எதிர்க்கட்சிகள் தயாரா?

தமிழ் மக்கள் கேட்கும் மாற்றம் என்பது நாடாளுமன்றத்தில் இப்பொழுது நடப்பது போன்ற அரசியல் சங்கீதக்கதிரை விளையாட்டு அல்ல. அரசாங்கம் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறது. பௌத்த மகா நாயக்கர்களின் எச்சரிக்கையையடுத்து ஜனாதிபதி மீண்டும் அவ்வாறான ஒரு சங்கீதக் கதிரை விளையாட்டுக்குத் தயாராகி வருகிறார். அதை இன்னும் திருத்தமான வார்த்தைகளில் சொன்னால் இப்போது இருக்கும் யாப்புக்குள், இப்போதுள்ள நாடாளுமன்றத்துக்குள், என்னதான் மாற்றத்தைச் செய்ய முற்பட்டாலும் அது ஒரு சங்கீதக்கதிரை விளையாட்டாகத்தான் முடியும். எனவே ஆர்ப்பாட்டக்காரர்கள் கேட்க வேண்டியது அடிப்படையான கட்டமைப்பு மாற்றத்தை. அதுதான் அவர்களுக்கும் நிரந்தர மீட்சியைக் கொடுக்கும். அதைத்தான் தமிழ் மக்களும் கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக கேட்டுவருகிறார்கள்.

கோத்தா கோ கம கிராமத்தில் தேசியகீதம் தமிழில் இசைக்கப்பட்டது ஒரு நல்ல சகுனம்தான். எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் தமிழில் தேசியகீதம் இசைக்கப்பட்டது ஒரு நல்ல சகுனம்தான். ஆனால் தமிழ் மக்களை இது போன்ற சீர்திருத்தங்களால் மட்டும் திருப்திப்படுத்த முடியாது. ஏனெனில் தமிழ்மக்களின் சந்தேகங்கள் நூற்றாண்டு காலத்துக்குரியவை. காயங்கள் ஆழமானவை, இப்பொழுதும் ஆறாதவை.


தமிழ் மக்கள் வாகனத் தகட்டு இலக்கங்களில் பொறிக்கப்பட்ட சிங்களச் சிறீ எழுத்து, சிங்கக்கொடி, தேசியகீதம் எல்லாவற்றுக்கும் எதிராக ஒருகாலம் போராடினார்கள். இப்பொழுது இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கேட்டுப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். சின்னச்சின்ன சீர்திருத்தங்களைக் கேட்டு அல்ல.

சிங்கள பௌத்த மேலாண்மையை பாதுகாக்கும் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை உடைத்து பல்லினத்தன்மைமிக்க ஒரு தீவைக் கட்டியெழுப்புவதே தமிழ்மக்கள் கேட்கும் கட்டமைப்பு மாற்றம் ஆகும். காகச்சிலையைத் தெருத்தெருவாக இழுத்துச்செல்லும் சிங்கள மக்கள் இந்த அடிப்படை மாற்றத்தை ஏற்றுக் கொள்வார்களா?

அண்மையில் மட்டக்களப்பில் அன்னை பூபதி நினைவு தினம் வந்தது. அந்த நினைவு நாளை அனுஷ்டிக்கக் கூடியவர்கள் என்று அரசாங்கம் இனங்கண்ட ஒரு தொகுதி அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக தடையுத்தரவுகள் விநியோகிக்கப்பட்டன. அதே சமயம் கடந்த ஆண்டு நினைவு கூர்தலை அனுஷ்டித்த பத்துபேர் கைதுசெய்யப்பட்டு நான்கு மாதங்களின்பின் இந்தவாரம் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். தென்னிலங்கை குழம்பிப் போயிருக்கும் ஒரு பின்னணியில் இம்முறை மே 18ஐ நினைவு கூர்வது தொடர்பில் அரசாங்கம் எப்படிப்பட்ட ஒரு முடிவை எடுக்கும்? ஆனால் அதைவிட முக்கியமானது, இப்பொழுது அரசுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கும் சிங்[illegible] மக்கள் அதுதொடர்பாக என்ன முடிவை எடுப்பார்கள் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஒரு கடிதம்...



ஐயா அரசியல்வாதிமாரே!,
எல்லாருக்கும் வணக்கம்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலை தொடர்பாக தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்று கூடி கலந்துரையாடல் நடத்தியுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது. புலிகளை விமர்சித்த குற்றத்துக்காக இதுவரை காலமும் தீண்டத்தகாதவர் என கருதப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியும் இம்முறை அழைக்கப்பட்டிருக்கிறார். இது உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

ஐயா மெத்தப்படித்த கனவான்களே, 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் கோத்தாவை பதவியில் அமர்த்துவதற்காக உழைத்ததை நாங்கள் இன்னும் மறக்கவில்லை; மறக்கவும் மாட்டோம். 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் திருநெல்வேலி ரியூட்டரி பெடியன்களின் நாணயக்கயிற்றினுள் நீங்கள் நின்று ஆடியதன் பலனை இன்று நாங்கள் உட்பட முழு இலங்கையும் அனுபவித்துக்கொண்டிருக்கிறது. உங்களைப்பொறுத்த மட்டில் உங்களுக்கு சம்பளம், சொகுசு வாகனம், இதர கொடுப்பனவுகள், நாடாளுமன்றச் சிற்றுண்டிச்சாலையிலும் இலங்கையில் வேறு எங்குமே கிடைக்காத மலிவான விலையில் உணவு, இத்யாதி என நீங்கள் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வருகிறீர்கள். தற்போது நீங்கள் பதவியில் அமர்த்திய அரசாங்கம் எடுத்த தான்தோன்றித்தனமான தவறான முடிவுகளால் இலங்கையர்கள் அனைவரும் அன்றாட சீவியத்துக்கே திண்டாடுகின்றனர்.

"நாங்கள் எங்கே கோத்தாவை பதவியில் அமர்த்தினோம்?" என நீங்கள் யாராவது கேட்டால் உங்களுக்கு அரசியல் அரிச்சுவடி கூட தெரியாது என்று தான் அர்த்தம். நீங்கள் அனைவருமே அரசியலில் பழம் தின்று கொட்டையும் போட்டவர்கள். ஒரு முன்னாள் நீதியரசர், சிங்கள அரசியல்வாதிகள் அனைவருக்கும் ஆலோசனை வழங்கும் நாடறிந்த ஒரு ஜனாதிபதி சட்டத்தரணி, 30 வருடகாலம் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பேச்சுவார்த்தைகளிலும் பங்குபற்றி மாகாணசபை நிர்வாகத்தையும் நடத்தியவர்கள் என்று இவ்வளவு பின்புலங்களையும் கொண்ட நீங்கள் பால்குடிப்பெடியளின்ரை நாணயக்கயிற்றினுள் நின்று ஆடி, கோத்தாவை பதவியில் அமர்த்தினீர்கள். ஒற்றுமை என்ற பெயரில் திருநெல்வேலி ரியூட்டரி பெடியள் முன்வைத்த 13 அம்ச கோரிக்கைக்கு பூம் பூம் மாடு மாதிரி தலையை ஆட்டிக்கொண்டு ஒப்பமிட்டீர்கள்; நீங்களும் திருநெல்வேலி ரியூட்டரி பெடியன்களும் சேர்ந்து செய்த கூத்தால் இன்று நாட்டு மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

ஐயா, நீதி அரசரே,ஜனாதிபதி சட்டத்தரணியே, எமக்காக துப்பாக்கி தூக்கி லெபனானுக்கு சென்று பயிற்சி பெற்று வந்து எமக்காக சிங்கள இராணுவத்துடன் போர் புரிந்த வீர மறவர்களே, திருநெல்வேலி ரியூட்டரி பெடியள் கூப்பிட்டால் உங்களுடைய புத்தி எங்கே போயிற்று. தமிழர்கள் யாரை ஆதரிக்கிறார்களோ அவருக்கு எதிராக சிங்கள பேரினவாதம் அணி திரளும் என்பது உங்களுக்குத் தெரியாதா? சரி சின்னப்பெடியள் கூப்பிட்டாலும் அவர்களுக்கு புத்திமதி சொல்லி அவர்களை வழி நடத்த வேண்டியவர்கள் அல்லவா நீங்கள். எதற்காக ரியூட்டரி பெடியள் முன்வைத்த 13 அம்ச கோரிக்கைக்கு கண்ணை இறுக கட்டிக்கொண்டு ஒப்பமிட்டீர்கள். நீங்கள் முன்வைத்த 13 அம்ச கோரிக்கை தான் இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு சிறுபான்மையினரின் ஆதரவின்றி ஒருவர் ஜனாதிபதியாக வர முடியும் என்ற நிலைப்பாட்டை உருவாக்கியது என்பதை உங்களால் மறுக்க முடியுமா? மனதை தொட்டுச் சொல்லுங்கள்.

சரி நடந்தது நடந்து விட்டது ,விட்டு விடுவோம் . இனியாவது திருந்தும் நோக்கம் உள்ளதா? அல்லது இன்னும் இன்னும் தமிழர்களை படுகுழியில் தள்ளப்போகிறீர்களா? இப்போது புதிய அல்லது 21 ஆவது அரசியல் யாப்புக்கு சமர்ப்பிக்கும் நோக்குடன் புதிய சமஷ்டி அரசியல் திட்ட வரைபு ஒன்றைத் தயாரிக்கும் பணி சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள், சமஷ்டி என்ற பெயரைக்கேட்டாலே எந்த ஒரு படித்த அல்லது பாமரச் சிங்களவனும் பிடரியில் கால் தெறிக்க ஓடுவான்; எனவே இப்போது நீங்கள் செய்ய வேண்டியது இந்தியா கூறுவது போல் அதியுச்ச அதிகாரப் பகிர்வைத்தான் . அதனைத்தான் இந்திய வெளியுறவு அமைச்சரும் வலியுறுத்தி வருகிறார்; கடைசியாக நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் இந்தியப்பிரதிநிதியும் வலியுறுத்தியுள்ளார். அது என்ன பெயரில் வேண்டுமானாலும் இருக்கலாம்; மாநிலங்களின் ஒன்றியம்,பிராந்தியங்களின் ஒன்றியம் அல்லது ஒருங்கிணைந்த மாகாணங்கள் ஏதோ ஒரு பெயரை வையுங்கள். எமக்குத்தேவை சட்டமியற்றும் அதிகாரத்துடன் கூடிய அதியுச்ச அதிகாரப்பகிர்வே (ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் சட்டமியற்றும் அதிகாரம் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது) எனவே தயவு செய்து சமஷ்டி என்ற பெயரை விட்டு விட்டு வேறு ஏதாவது பொருத்தமான பெயரைத் தெரிவு செய்யுங்கள். நீங்கள் உங்களது அடிப்படைக் கோரிக்கையிலிருந்து விலகி விட்டீர்கள் என்பதற்காக உங்களை யாரும் வந்து மண்டையில் போடப்போவதில்லை.

இப்படிக்கு,
ந.பரமேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ இராகவன்

# ஊர்ப்புதினம்

போதாக்குறைக்குப் பிராமணவளவுச் சங்கடப்படலையிலயும் ஆமைப்பூட்டுத் தொங்கிச்சுது. "ம்... எல்லாரும் கிளம்பிப் போகிட்டினம். இனி நிண்டு வேலையில்லை. வா! போவம்" எண்டு சொல்லிக்கொண்டு அம்மா முன்னுக்கு நடந்தா. நான் "பொறணை வாறன்" எண்டுட்டு ஓடிப்போய் சிவாப்பெரியப்பா வீட்டுக்கேற்றைத் திறந்து கீழை விழுந்துகிடந்த பாண்டி மாங்காயளில அஞ்சாறை எடுத்து வாளிக்குள்ள போட்டுக் கொண்டு அம்மாவுக்குப் பின்னால போனன். 'உதுக்கே இப்ப விழுந்தடிச்சு ஓடினனி? உனக்கு நேரங்காலந்தெரியாது. இப்ப உதுதான் முக்கியம்" எண்டு அவா புறுபுறுத்துக் கொண்டு முன்னால போனா.

எண்பத்தொன்பதில கொழும்பில வைச்சு இயக்கக்காரர் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் எம்.பி.யாக்களை மண்டையில போட்டதைக் கேள்விப்பட்டிருப்பியள். அப்ப சம்பவ இடத்தில சிவாப்பெரியப்பாவுமிருந்தவர். அவருக்குக் காலில காயம். அதுக்குப் பிறகு அவர் தமிழ் நாட்டுக்குப் போய்ச் செட்டிலாகிட்டார். இடைக்கிடை கொழும்புக்கு வந்துபோவார். ஆனால் ஊர்ப்பக்கம் வாறதேயில்லை. அதால இரண்டொரு குடும்பம் சிவாப்பெரியப்பா வீட்டிலயிருந்ததும் எனக்கு ஞாபகமிருக்கு.



எங்கட ஊரில சிவகுரு எண்டொராள் எப்பவும் தாடியோட திரிவார். அதால அவரை எல்லோரும் 'தாடிச்சிவகுரு' எண்டு செல்லமாய்க் கூப்பிடுவினம். அவரின்ரை மகன் காந்தன். அவர் கொஞ்சக்காலம் குடும்பத்தோட சிவாப்பெரியப்பா வீட்டிலயிருந்தவர். அவருக்கு இரண்டு பெடியங்களும் ஒரு பெட்டையும் எண்டு நினைக்கிறன். காந்தன் அண்ணை சாதுவாய் கொன்னை தட்டித்தான் கதைப்பார்.

37


நான் ஊர்ப்புதினத்தில குலமக்கா,சதாமாமா, துரைமாமா ஆக்களின்ரை தகப்பன் புழுவெட்டிச் சின்னையப்பாவின்ர செத்தவீட்டுக்குப் போட்டு அப்பாவோடை திரும்பி வரேக்குள்ள 'தெடுத்தனை' எண்ட பகுதிக்குள்ளால வந்ததையும் தெடுத்தனையாக்கள் பொல்லாத சண்டியர் எண்டும் சொல்லியிருக்கிறன்.

அந்தத் தெடுத்தனைக்குள்ள ஒரு முக்கியமான புள்ளிதான் 'ஐயாத்துரை'. ஆள் கொஞ்சம் வைப்புச் செப்புக்காரன். அதுக்கை மன்மதலீலையிலயும் ஆள் கெட்டிக்காரன்.

இவருக்கு மார்க்கண்டு, கணேசு, இரத்தினம் எண்டு மூண்டு ஆம்பிளைப்பிள்ளையளும் தங்கமுத்து, மாணிக்கம், சரசு, பாக்கியம், ஆலா எண்டு அஞ்சு பொம்பிளைப்பிள்ளையளுமாய் எட்டுப்பிள்ளையள். இதிலை கணேசு ஒருகாலத்தில கள்ளக்கடத்தல் மன்னன் எண்டு பேரெடுத்தவர். இவரின்ரை இரண்டாவது மகள் கணேசியக்காவைத் தான் காந்தண்ணை கட்டினவர்.

காந்தண்ணையை இயக்கம் மண்டையில போட்டாப்போல கணேசியக்கா பிள்ளையோட கனடாக்குப் போட்டா. நாங்களெல்லாம் கணேசுவைக் கணேசுமாமா எண்டுதான் கூப்பிடுவம். இவர் ஈழத்து இசைக்கலைக்கு அணில் மாதிரி உதவியிருக்கிறார். அதை அடுத்த கிழமை சொல்லுறன்.

(தொடரும்)





# காலத்தை முற்றும் பயன்படுத்துவோம்

அபிராஜன் அன்ரனிபீற்றர்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்

கல்லும் செதுக்கப்பட்டே சிலையாகின்றது
கடினங்கள் முன்னேற முனைப்பாகின்றது
சொல்லிலே பெருமை பேசிய காலம் போய்
செயலிலே எதிர்காலம் தங்கியுள்ளது
எல்லாவற்றையும் நாம் எதிர்பார்த்தால்
எம்வழி புரியாத புதிராகிடும்
தொல்லையிலும் எதிர்நீச்சல் போட வேண்டும்
இல்லையேல் தொலைந்து போய்விடுவோம்

பருப்புக்கும் பாணுக்கும் விலைபோனால்
பண்பட்ட எம்வாழ்வு பறிபோய்விடும்
நெருப்புக்குப் பயந்து விலகிநின்றால்
இருப்பே பறிபோகும் இதையுணருவீர்
விருப்பு வெறுப்புகளைப் புறமொதுக்கி
விவசாயம் முன்னெடுத்தால் விடிவுண்டு
கருத்து வேறுபாடுகளை மறந்து
காலத்தை முற்றும் பயன்படுத்துவோம்

முன்னோர்கள் எல்லாம் முட்டாள்களல்ல
முன்னோக்கு உணர்ந்த ஞானமுள்ளவர்
சொன்னார்கள் என்றவர்கள் செய்யவில்லை
சொன்னதன் படியே வாழ்ந்தார்கள்
என்வளம் இல்லை அந்நாட்களில்
ஏன் கை ஏந்துகிறோம் இந்நாள்களில்
தன்னார்வம் இல்லார்கள் தரைக்குப் பாரம்
தன்னார்வம் தகர்த்திடும் எதிர்வாதம்
கிராமத்து வாழ்க்கை இனிமையானது
கிரமமாய் வாழ்ந்தவர் சேர்த்து வைத்தனர்

சிரமங்கள் இருந்தும் சிறந்துவாழ்ந்தனர்
சிரமங்கள் இன்றியவர் பரபரப்பாகினர்
நகரத்து வாழ்க்கை நரகமென்றானது
நாகரீக மோகம் அழுத்தங்கள் தந்தது
சிகரத்தை தொடலாம் தொடர் முயற்சியால்
சீரான வாழ்வுதான் சிறப்பைத் தரும்




கருணை ரவி

1995. வருடங்கள் உருண்டிருந்தன. பவுண் தோட்டை சீலையில் முடிந்து வைத்து, நித்தியின் ஞாபகமாக அவன் எடுத்துக்கொடுத்த இருபது ரூபா தோட்டில் ஒன்று தொலைந்ததை நினைத்து கவலைப்பட்டாள். எங்கே தொலைந்தது? தொலைந்த இடம் ஞாபகத்துக்குள் வரவில்லை. காலையில் முகம் கழுவும்போது காதுகளையும் கழுவினாள். அப்பொழுது இரு காதுகளிலும் தோடுகள் இருந்தன.

கிணற்றடியில் முகம் கழுவிய இடத்தைப் பார்த்தாள். தலை இழுத்த இடத்தைப்பார்த்தாள். சேலை உடுத்த இடத்தைப்பார்த்தாள். எங்குமே இல்லை. முற்றம் கூட்டிய இடங்களையும் பார்த்தாள். நடந்து திரிந்த இடங்களை குனிந்து பார்த்தாள். எல்லா இடமும் ஏமாற்ற மடைந்தாள். ஒரு காதில் தோடுடனும் மறுகாதில் தோடு இல்லாமலும் இருக்க விருப்பமில்லாமல் இருந்தது அவளுக்கு.

நித்தி எடுத்த தோட்டைக் கழற்றினால் அவனை மனதில் இருந்து கழற்றுவதாக நினைத்தாள். கழற்றுவதா? கழற்றாது விடவா? யோசித்து ஒரு முடிவை எடுக்க அவளுக்கு இரண்டு நாட்கள் எடுத்தன. அவனின் நினைவுப் பரிசை காதில் சுமப்பதாகவே மனம் அவளுக்குச் சொன்னது.

தூரத்தில் குண்டுச்சத்தங்கள் கேட்டன. இராணுவம் யாழ்ப்பாணத்தைப்பிடிக்க வலிகாமத்தில் சண்டை நடப்பதாக தெருக்களில் சனங்கள் கதைத்தார்கள். அவள் நித்தியை பார்க்கவேணும் என நினைத்தாள். வீட்டில் எவரும் உதவிக்கு இல்லை. உழைக்க எவரும் இல்லை என இயக்கத்துக்குச் சொல்லி நித்தியை வீட்டுக்கு கூட்டிவர நினைத்தாள். தன்கஷ்டத்தை உணர்ந்து அவர்கள் வீட்டுக்கு விடுவார்கள் என்ற நம்பிக்கை தேனாக மனதில் குழைந்து கொண்டிருந்தது.

அவளுக்கு யாருடன் நித்தியைப் பற்றிக் கதைப்பதென்று தெரியவில்லை. நித்தி இருக்கும் முகாம் எங்கு இருக்கிறதென அவளுக்குத் தெரியாது. தொண்டமானாற்றுக்குப் போய் நித்தியின் பொறுப்பாளரோடு கதைக்கவேணும் என நினைத்து தெருவுக்குப் போனாள். மரநிழலில் நின்று யாரும் போராளிகள் வருகிறார்களா எனப்பார்த்தாள். கன்னங்களை வெயில் வதைக்க சீலைத்தலப்பை தலையில் போட்டாள். அவனுக்காக சேமித்து முடிச்சில் கட்டிவைத்த ஆயிரம் ரூபா கழுத்தில் தொங்கியது. அதைப்பிடித்துப் பார்த்தாள்.

சுப்பர்சொனிக் அதிவேக விமானங்கள் வானில் பறந்தன. இடைக்கிடை குண்டுச் சத்தங்களும் கேட்டுக்கொண்டிருந்தன. தொண்டமானாறுப்பக்கம் எந்தச்சத்தங்களும் கேட்கக்கூடாது என நினைத்தாள். வாகனம் ஒன்று வந்தது. ஜெயக்கொடி பருத்தித்துறையில் ஓடித்திரிந்த ஜீப் மாதிரி இருந்தது. கிட்ட வந்ததும் அது ஜெயக்கொடியின் ஜீப் என அடையாளம் கண்டாள். மிகவும் வேகமாக அந்த ஜீப் வந்தது. ஜீப்பில் போராளிகள் நின்றார்கள். தோள்களில் துப்பாக்கிகள் தொங்கின. பாடியபடி கைகளைத் தட்டிக் கொண்டு போனார்கள். அவர்கள் இப்படி சந்தோசமாக ஆடிப்பாடிப் போவதை அவள் கண்டதில்லை.

"சண்டைரீம் போகுது வலிகாமத்துக்கு..."

சைக்கிளில் போனவர்கள் சொன்னார்கள். அவள் அந்த ஜீப்பில் நித்தியைத் தேடினாள். வேகமாகப் போனதால் அவளுக்குள் அந்த ஜீப்பில் இருந்தவர்களின் முகங்கள் தெரியவில்லை. நித்தியும் அந்த ஜீப்பில் போகிறானா? அவனும் சண்டையிட இப்படி சந்தோசமாக போவானா? நித்தி பயந்தவன். இரவில் மூத்திரம் பெய்ய அவளை எழுப்பிக்கொண்டு போவான். அவனுக்கு இப்படி வீரம் வராது. உடனடியாக நித்தியை வீட்டுக்கு கூட்டிவரவேணும் என நினைத்தாள். கிளினர் தெய்வேந்திரத்துடன் தொண்டமானாற்றுக்குப் போகவேண்டும் என நினைத்து அவன் வீட்டுக்குப் போனாள். தெய்வேந்திரம் விறாந்தையில் றேடியோ கேட்டுக்கொண்டிருந்தான்.



சஞ்சீவி

தொடர் கதை

"தெய்வேந்திரம், நித்தியைப் பாக்கோணும்போலை இருக்கு. வாறியே தொண்டமானாத்துக்கு?"

"இப்ப அங்கை போகேலாது"

"வீட்டிலை கஷ்டம். உழைக்க ஆக்களில்லை. என்ரை நிலைமைய பொறுப்பாளருக்குச் சொன்னா நித்தியை விடுவாங்கள்."

"தொண்டமனாற்றிலை சனங்கள் ஒண்டுமில்லை. பக்கத்திலை ஆமியள். முன்னணிக் காவலரண்களுக்கு சனங்கள் போகேலாது."

அவன் சொல்லியும் அவள் புரிவதாக இல்லை. மகனின் அதீத பாசத்தில் ஒரு யுத்தக்களம் என்றும் பார்க்காது அவ்விடத்துக்கு தன்னை அழைப்பதை அவன் கோபமாக நினைக்கவில்லை. அவள் தனது அறிவுக்கெட்டியவரை அதைக் கேட்டாள். தான் தனது அறிவுக் கெட்டியவரை அவளுக்குக் கூறிவிட்டேன் என நினைத்தவன் இறுதியாக தான் இயக்கத்துடன் கதைத்து நித்தியை வீட்டுக்கு வரவழைக்க ஒழுங்கு செய்வதாக நம்பிக்கையை ஊட்டி அவளை வீட்டுக்கு அனுப்பி வைத்தான்.

வானத்தில் பறக்கும் விமானங்கள் குறைவதாக இல்லை. சண்டையில் இராணுவத்துக்கு அதிக இழப்பு என்றால் வானத்தில் குண்டுவிமானங்கள் அதிகரிக்கும். விமானங்கள் மேலே பறக்க பூங்கொடிக்குப் பயமாக இருந்தது. பிலிப்பு வீட்டுக்கு நிருபனை கூட்டிக் கொண்டு போனாள். ஏதும் எறிகணை வீச்சுக்கள், விமானத் தாக்குதல்கள் என்றால் அவள் பிலிப்பு வீட்டுக்குத்தான் போவாள்.

பிலிப்பு வீட்டுக்கு எறிகணைகள் விழாது. குண்டுவீச்சு விமானங்கள் குண்டுகளைக் கொட்டாது என யார்ரோ அவளுக்குச் சொல்லியிருக்க வேண்டும்.

பிலிப்பு றேடியோவும் கையுமாக இருந்தான். வலிகாமத்தில் சனங்களை கோயில்களிலும் பாடசாலைகளிலும் இருக்கும்படி அரசாங்கம் அறிவித்துக்கொண்டிருந்தது. ஏதும் சண்டைகள் என்றால் பிலிப்பு றேடியோவை விடமாட்டான். கழுத்தில் தூக்கிக்கொண்டு திரிவான். தோட்டத்துக்குப் போகிலும் கழுத்தில் இருந்து றேடியோவைக் கழட்டமாட்டான்.

"அண்ணை... நித்தி தொண்டமானாற்றிலை நிண்டவன். நித்தியை சண்டைக்கு கொண்டுபோயிருப்பங்களே...?"

போராளிகளுக்கு ஒரு இடம் என்றில்லை. எங்கு சண்டைகள் நடந்தாலும் அங்கு அவர்கள் போவார்கள். இதை பிலிப்பு அவளுக்குச் சொல்லவில்லை. அவள் மகனின் உயிர் ஆசையில் கேட்பதாகவும் அவளின் மனதை குழப்பமடையவிடாது அவளுக்குச் சாதகமாகவே

"அவன் சின்னப்பிள்ளை. பெரிய சண்டையளுக்குக் கூட்டிக் கொண்டு போகமாட்டாங்கள்"

பிலிப்பு ஒரு கட்டளைத்தளபதி என்றும் அவனின் வாக்கு ஒரு தெய்வவாக்கு என்றும் நினைத்தவளுக்கு பிலிப்புவின் வார்த்தைகள் இதமாக இருந்தன. கிளினர் தெய்வேந்திரம் வந்தான். அவன் வீட்டில் வேலைகளற்று இருக்கும் போது பிலிப்பு வீட்டுக்கு வருவான். பிலிப்புவோடு தெய்வேந்திரம் ஒன்றாகப்படித்தவன். படிக்கும் நாட்களில் ஒன்றாகத் திரியும் பழக்கத்தை இப்பவும் அவன் கைவிடவில்லை. படிக்கும் காலத்தில் யார்யாரின் படங்கள் யாழ்ப்பாணத் தியேட்டர்களில் ஓடுகிறது. யாருக்கு யார் ஜோடி. எல்லாம் சரியாகச்சொல்லுவான். படிக்கும் காலத்தில் பிலிப்பு, தெய்வேந்திரம் இல்லாது படங்களுக்குப் போகமாட்டான். அவனுக்குப்பக்கத்தில் இருந்து இவன் யார்? இவள் யார்? சிவாஜி ஏன் அடிக்கடி பாட்டுக்கு நடிகைகளைக் கட்டிப் பிடிக்கிறார்? எம்.ஜி. ஆருக்கு ஒரு பாடலுக்கு ஏன் ஒரு ஏக்கர் காணி வேணும்? முத்துராமன் நல்ல நடிகர். ஏன் ஜெமினியை முந்தவில்லை? என்று கேட்டபடியே இருப்பான். படம் பார்த்துக் கொண்டிருந்தால் படம் பற்றிக் கதைக்காது வீட்டுக் கதைகளையே கதைப்பான். சில வேளைகளில் தெய்வேந்திரத்துக்கு பிலிப்புமேல் கோபமும் வரும்.

அந்த நட்பை இப்பவும் காப்பாற்றியபடியே தெய்வேந்திரம் இருக்கிறான். இயக்கம் எங்கு சண்டை செய்தது? எத்தனை சண்டையில் வென்றார்கள்? எத்தனை ஆயுதங்கள் கைப்பற்றினார்கள். எந்தச்சண்டையில் எந்தப்பொறுப்பாளருக்கு பணிஸ்மென்ற்? எந்தத் தளபதிகள் எந்த பெண் தளபதிகளைக் கல்யாணம் செய்தார்கள்? என்பதையும் சரியாகச் சொல்லுவான்.

தெய்வேந்திரத்தைக் கண்டதும் பிலிப்புக்கு சந்தோசமாக இருந்தது. வலிகாமச் சண்டைகள் பற்றி அறிய பிலிப்பு விரும்பினான். சண்டைகள் பற்றி றேடியோ சரியாகச் சொல்வதில்லை. புலிகளின் குரலில் இரவுச்செய்திவரை காத்திருக்கவேண்டும் என்று நினைத்தவனுக்கு தெய்வேந்திரம் ஒரு செய்திப்பெட்டமாகப் பட்டான். "பிலிப்பு... நவாலித் தேவாலயத்துக்கு புக்காரா குண்டு போட்டு நூற்றியம்பதுக்கு மேலை சனங்கள் செத்திடுத்து. வள்ளிநாயகியும் முடிஞ்சுதெண்டு இப்பத்தான் அறிஞ்சனான்."

(வருவாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஓ மை டோக்'

## குழந்தைகளுக்காக ஒரு படம்!

'ஓ மை டோக்'. அண்மையில் அமேசான் ப்ரைம் ஓ.டி.டி தளத்தில் வெளியான குழந்தைகளுக்கான தமிழ்த் திரைப்படம். நாய்களை வளர்த்து , நாய்களுக்காக நடைபெறும் சர்வதேசப் போட்டிகளில் சம்பியனாக வலம்வரும் ஒரு பணக்காரர், தனது பண்ணையில் பிறந்த பார்வையிழந்த நாய்க்குட்டியொன்றை கொன்று புதைக்கக் கட்டளையிடுகிறார். ஆனால் அவர்களிடமிருந்து தப்பிக்கும் நாய்க்குட்டிக்கு அடைக்கலம் கொடுக்கிறான் ஒரு சிறுவன். அவன் அன்பில் வளரும் அந்த நாய்க்குட்டி இறுதியில் தன்னை கொல்லுமாறு உத்தரவிட்ட பணக்காரரை எப்படித் தோற்கடிக்கிறது என்பதுதான் கதை. மிகப் பழக்கப்பட்ட, பல படங்களில் பார்த்த இந்தக் கதையை குழந்தைகளின் பார்வையில் சொல்லி, அனைவரையும் கவர்ந்த 'ஓ மை டோக்' பட இயக்குநர் சரோவ் சண்முகம், தன் மனப் பதிவுகளை இந்த நேர்காணலூடாக 'உதயன்-சஞ்சீவி' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.



இயக்குநர் சரோவ் சண்முகம்.

நேர்கண்டவர்: ஔண்யன்

**கே: சரவணனாக இருந்த நீங்கள் இயக்குநர் சரோவ் சண்முகமாக மாறிய கதையைச் சொல்லுங்கள்?**

சரோவ்: சினிமாவில் சிறுவயதில் இருந்தே ஆர்வம். அதனால் பிரபல இயக்குநர்களான வசந்தபாலன், சுசீந்திரன் இருவருடனும் பணியாற்றினேன். அதன்பின்னர் சொந்தமாக படம் இயக்கும் கனவோடு உருவாக்கியதுதான் 'ஓ மை டோக்'. தென்னிந்திய சினிமாவில் பலர் சரவணன் என்ற பெயரில் இருப்பதால் நான் என் பெயரை 'சரோவ் சண்முகம்' என மாற்றிக்கொண்டேன். சண்முகம் என் அப்பாவின் பெயர்.

**கே: பொதுவாக எல்லா இயக்குநர்களும் தங்களது முதல் படம் அதீத வணிகமயப்பட்டதாக அல்லது அடர்த்தியான கருவைக் கொண்டதாக இருக்க வேண்டுமென எண்ணுவார்கள். நீங்கள் இந்த இரு வகைகளிலும் இருந்து வேறுபட்டு, குழந்தைகளுக்காக 'ஓ மை டோக்' படத்தை இயக்க வேண்டுமென நினைத்தது ஏன்?**

சரோவ்: எனக்கு குழந்தைகளைப் பிடிக்கும், செல்லப் பிராணிகளையும் பிடிக்கும். ஆனால் தமிழில் குழந்தைகளுக்கான படம் என்று எனக்குத் தெரிந்து பல வருடங்களுக்கு முன்னர் வந்த 'மைடியர் குட்டிச்சாத்தான்' படத்தை மட்டுமே சொல்ல முடியும். பல இயக்குநர்கள் குழந்தைகளை வைத்து படமெடுத்திருக்கிறார்கள். மணிரத்னத்தின் 'அஞ்சலி' கூட அத்தகைய படமே. ஆனால் அவை குழந்தைகளை வைத்து பெரியவர்களுக்காக எடுக்கப்பட்ட படங்கள். குழந்தைகளுக்காக எடுக்கப்பட்டவை அல்ல. அதனால் எங்கள் குழந்தைகள் பெரியவர்களுக்காக எடுக்கப்பட்ட படங்களையே, தங்களுக்கான படங்களாகப் பார்க்க வேண்டிய சூழல். எனவேதான் குழந்தைகளுக்காக, அவர்களது மொழியில், அவர்களது பார்வையில், அவர்களுக்கு பிடித்த செல்லப் பிராணிகளோடு இருக்கும் வகையில் 'ஓ மை டோக்' படத்தை உருவாக்கினேன்.

இந்தப் படத்தில் வரும் பல சம்பவங்கள் என் வீட்டில் நடந்தவை. ஒருமுறை நானும், என் தம்பியும் வீட்டில் உள்ளவர்களுக்கு தெரியாமல் ஒரு நாய்க்குட்டியைக் கொண்டு வந்து, 2 நாள்கள் சாப்பாடு போட்டு வளர்த்தோம். பிறகுதான் வீட்டில் உள்ள பெரியவர்களுக்கு இந்த விடயம் தெரியவந்தது. அப்படி எனக்கும் நாய்களுக்குமான பல சம்பவங்களையும் இணைத்தே இந்தப் படத்தின் கதையை உருவாக்கினேன்.

**கே: உங்கள் வாழ்வில் இருந்து இந்தக் கதைக்கான பல சம்பவங்களை எடுத்திருந்தாலும், இதில் வரும் வில்லன் உள்ளிட்ட பல சில பாத்திரங்கள் மோடிப்படுத்தப்பட்டவையாக உள்ளன. அதைவிட குழந்தைகளை வைத்து எடுக்கப்பட்ட , குழந்தைகளுக்கான ஆங்கிலப் படங்களையும் நினைவூட்டுகின்றன. அது ஏன்?**

சரோவ்: அது உண்மைதான். எனக்கு அந்தப் படங்கள் பிடிக்கும். அதனால் அவற்றின் பாதிப்பும் இதில் இருக்கும். நான் ஏற்கனவே சொன்னது போல இது குழந்தைகளுக்கான படம். அவர்களின் உலகத்தில் எப்படி வில்லன்களை உருவகப்படுத்தியிருப்பார்களோ அப்படி கொண்டுவர விரும்பினேன். அதனால்தான் கதை ஊட்டியில் நடப்பதாக காட்டி, வில்லனின் அடியாள்களுக்கு ஒருவித கோமாளித்தனமான நடை, உடை, பாவனையைப் புகுத்தினேன். அது குழந்தைகளிடம் மிகுந்த வரவேற்பையும் பெற்றுள்ளது.

**கே: இந்தப் படத்தில் இன்னொரு சிறப்பு மூன்று தலைமுறையைச் சேர்ந்தவர்களான நடிகர்கள் விஜயகுமார், அருண் விஜய், அர்னோவ் விஜய் ஆகிய மூவரும் தாத்தா, அப்பா, மகன் என்ற பாத்திரங்களில் நடித்திருப்பது. இது படம் தொடங்கும் போதோ அல்லது கதையை எழுதும்போதோ திட்டமிடப்பட்டதா?**

சரோவ்: இல்லை. இந்தப் படத்தின் கதையை நடிகர் சூர்யாவிடம் சொன்னேன். அவருக்குப் பிடித்ததால் தானே தயாரிக்க முன்வந்தார்.

அவர்தான் அருண் விஜய்யின் மகன் அர்னோவ் விஜய் இதற்குப் பொருத்தமாக இருப்பார் என்று அவரிடம் என்னை அனுப்பினார். அர்னோவ் விஜயை நேரில் பார்த்து, அவரிடம் கதை சொல்லும்போது பக்கத்தில் அவரது தந்தை அருண் விஜய்யும் இருந்தார். அவருக்கும் கதை மிகவும் பிடித்து விட்டது.

அப்போதுதான் 'அர்னோவ் விஜய்க்கு அப்பாவாக அருண் விஜய்யைக் கேட்போமா?' என்ற எண்ணம் வந்தது. உடனேயே கேட்டும் விட்டேன். அருண் விஜய்யும் சம்மதித்தார். அப்படியே அவருக்குத் தந்தையாக விஜயகுமாரையும் நடிக்க வைத்தோம்.

மூன்று தலைமுறையைச் சேர்ந்தவர்களும் ஒரேபடத்தில் நடித்த முதல் தமிழ்ப் படமாகவும் 'ஓ மை டோக்' மாறியது இப்படித்தான்.

**கே: இவர்கள் தவிர படத்தின் பிரதான பாத்திரம் 'சிம்பா' என்கிற அந்த நாய்தான். அதை எப்படி நடிக்க வைத்தீர்கள்?**

சரோவ்: பிராணிகளை நடிக்கவைப்பது மிகக் கஷ்டமானதுதான். அதற்காக ஒருவேலை செய்தோம். சிம்பாவாக நடித்த பெரிய நாயையும், குட்டியையும் சொந்தமாகவே வாங்கிவிட்டோம். பின்னர் அவற்றுக்குப் பயிற்சி கொடுத்து, எங்களின் உண்மையான செல்லப் பிராணியாக மாற்றியதால் ஓரளவு சுலபமாக அவற்றையும் நடிக்க வைத்தோம். ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் அவற்றை நடிக்க வைப்பதும்,அவை நடிக்கும்வரை கமெராவோடு காத்திருந்ததும் நடக்கத்தான் செய்தது.

அந்தக் குட்டி சிம்பாவை அர்னோவ் தன் செல்லப்பிராணியாக்கிவிட்டார். இப்போது அது நன்றாக வளர்ந்து விட்டது. பெரிய சிம்பாவாக நடித்த நாய் என் செல்லப்பிராணியாக, என் தோட்டத்தில் ( ஊரில்) இருக்கிறார்.

**கே: தனியே ஆர்னோவுக்கு மாத்திரமல்லாமல் , கூட நடிக்கும் ஏனைய சிறுவர்களுக்கும் இந்தப்படத்தில் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறீர்கள். சிறுவர்களின்-சண்டை, அன்பு , புத்தி சாதுர்யம், சில நாள்களில் காணாமற்போகும் கோபம் என்று எல்லாவற்றையும் முடிந்தளவுக்கு இயல்பாகக் காட்சிப்படுத்திருக்கிறீர்களே..?**

சரோவ்: இது குழந்தைகளுக்கான உலகம். அவர்களது உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் அதே உயிர்ப்போடு கொண்டுவர நினைத்தேன். அதற்கான படப்பிடிப்பு தொடங்க ஒரு மாதத்துக்கு முன்னரே நடிக்கும் எல்லாச் சிறுவர்களையும் ஒன்றாகத் தங்க வைத்து, பட்டறைகள் நடத்தி , உண்மையாகவே அவர்களை ஒரு நண்பர் கூட்டமாக்கினோம். அதைவிட, எல்லாச் சாகசங்களையும், கண்டுபிடிப்புகளையும் தனியே பிரதான பாத்திரமாக இருக்க ஆர்னோவ் மட்டுமே செய்யாமல் எல்லோரும் இணைந்து செய்யும் வகையில் கதையை எழுதியிருந்தேன். ஏனென்றால் தனியே ஒரு குழந்தைதான் கெட்டித்தனமானதல்ல, எல்லாக் குழந்தைகளுமே கெட்டித்தனமானவர்களே. அதைத்தான் என் படத்தில் சொல்லியிருப்பேன். இப்போது படம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது, குறிப்பாக குழந்தைகள் கொண்டாடித் தீர்க்கிறார்கள். அந்தக் கொண்டாட்டமே என் உழைப்புக்கான ஆத்ம திருப்தி.




**கே: அடுத்த படமும் குழந்தைகளுக்கான படமா?**

சரோவ்: இல்லை. அது முற்றிலும் வணிகமயப்பட்டது. வேறுவகையிலானது. ஒரு அக்ஷன் திரைப்படம் , அதற்கான முன்னேற்பாடுகள்தான் நடந்து கொண்டிருக்கின்றன. நிச்சயமாக அதுவும் எல்லோரையும் கவருமென நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

# கோத்தாவின் மந்திரநூல் மர்மம்



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தற்போதைய சூழ்நிலையில் கடும் அழுத்தங்களுக்கு மத்தியிலேயே காணப்படுகின்றாராம். அவர் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி இடம்பெறும் போராட்டங்களால் நொந்துபோயுள்ள கோத்தா, மொட்டுக் கட்சி உறுப்பினர்களின் அழுத்தங்களால் மேலும் நெருக்கடிக்குள் சிக்கியுள்ளார். தனக்கென ஒரு கட்சி இல்லை, நாடாளுமன்றத்தில் பலமும் இல்லை என்பதால் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்துவதிலும் அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்.

சுமார் 20 நாள்களுக்கு மேலாக ஜனாதிபதி செயலகப் பக்கமும் அவரால் செல்லமுடியவில்லை. மகாநாயக்க தேரர்களும் அவ்வப்போது அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துவருகின்றனர். இதற்கிடையில் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள வேண்டிய சவால் வேறு.

இவ்வாறு அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில், தனது கையில் அணிந்திருந்த சிவப்பு நிறத்திலான மந்திர நூலை ஜனாதிபதி அகற்றியுள்ளார் எனத் தெரியவருகின்றது. ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர், அவர் இந்த நூலை கையில் கட்டியிருந்தார். தற்போது திடீரென அகற்றியுள்ளார்.

மந்திரவாதியான 'ஞான அக்காவே' ஜனாதிபதிக்கு இந்த நூலை அணிவித்திருந்தார். இதற்காக விசேட யாகமும் செய்யப்பட்டிருந்தது. ஞான அக்காவோடான கோபத்தில் இந்த நூலை கோத்தா அகற்றினாரா? அல்லது ஞான அக்காவின் ஆலோசனையினால் அகற்றினாரா ? என்பதுதான் பலருக்கும் புரியவில்லை.

# கழுகும் காகமும்



○ சுழியன்

ஜனாதிபதியும், அவர் தலைமையிலான அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி பிரதான எதிர்க்கட்சியால் முன்னெடுக்கப்பட்ட பாதயாத்திரை மே முதலாம் திகதி கொழும்பை வந்தடையவுள்ளது.

'சுதந்திர போராட்டம்' என்ற மகுடவாசகத்துடன் இப்பாதயாத்திரை கடந்த 26 ஆம் திகதி கண்டியில் ஆரம்பமானது. பெருந்திரளான மக்கள் பங்கேற்றனர். பேரணியில் காட்சிப்படுத்தப்பட்ட காகம் அனைவரினதும் கவனத்தை ஈர்த்தது. சமூக வலைத்தளங்களில் ஹிட்டானது.

இராட்சத காகமொன்று உருவாக்கப்பட்டு, அதன் கழுத்தில் ராஜபக்சக்களின் சிவப்பு சால்வை தொங்கவிடப்பட்டது. லொறியொன்றில் அந்த காகம் காட்சிப்படுத்தப்பட்டது. பேரணியில் ஆரம்பத்தில் அந்த வாகனமே வந்தது.

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், காகங்கள் என்ற சொல்லை, பஸில் சிங்கள மொழியிலேயே 'கப்புடாஸ்' என பயன்படுத்திவிட்டார். அதன்பின்னர் பஸிலை அனைவரும் 'கப்புடா' என்றே கிண்டலடித்து வருகின்றனர். போராட்டங்களின்போதுகூட 'கப்புட்டு கா...கா...கா....., பஸில், பஸில், பஸில்" என கோஷம் எழுப்பப்படுகின்றது. இது பற்றி பாடல்கூட வெளிவந்துவிட்டது.

நாட்டில் இடம்பெறும் எல்லாப் போராட்டங்களிலும் காகத்துக்கு இடமளிக்கப்படுகின்றது.

அதேபோல மைத்திரிபால சிறிசேனவின் கழுகு தாக்குதலும் மீண்டும் களத்துக்கு வந்துள்ளது. கடந்த பொதுத்தேர்தலின்போது, "நீண்டநேரம் காத்திருந்து நீர்க்காகம் மீனை கொத்தினாலும், மேலே இருந்து தக்கதருணம் பார்த்து பறந்துவந்து கழுகு அதனைப் பறித்துச் செல்லும். இம்முறை எனது தாக்குதல் வியூகமும் அவ்வாறே அமையும்." - என மைத்திரி அறிவிப்பு விடுத்திருந்தார்.

பொலநறுவை மாவட்டத்தில் தனது அரசியல் எதிரியான, ரொஷான் ரணசிங்கவை இலக்கு வைத்தே மைத்திரி இவ்வாறு குறிப்பிட்டார். இதன்படி மாவட்ட விருப்பு வாக்கு பட்டியலில் முதலிடமும் பிடித்தார்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையிலும் மைத்திரி கழுகுத் தாக்குதலையே நடத்தியுள்ளார் என பேசப்படுகின்றது. சுயாதீன அணிகளுக்கு தேவையான நிதிப் பலத்தை அவரே வழங்கிவருவதாகவும், ராஜபக்சக்களை அகற்ற வேண்டும் என்பதில் மைத்திரி குறியாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.



# பொறிக்குள் சிக்கவேண்டாம்!

" 11 கட்சிகளின் கூட்டணி எங்கள் முதுகில் அரசியல் சவாரி செய்ய முயல்கின்றது. அந்தப் பொறிக்குள் நாம் சிக்கிவிடக்கூடாது. தற்போதைய நெருக்கடி சூழ்நிலைமையை மிக நிதானமாகக் கையாள வேண்டும்."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் ராஜித சேனாரத்ன.

ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கூட்டமொன்று அண்மையில் இடம்பெற்றது. சஜித் பிரேமதாஸ உட்பட கட்சிப் பிரமுகர்கள் இதில் பங்கேற்றிருந்தனர். இதன்போது நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை, நம்பிக்கையில்லாப் பிரேரணை, இடைக்கால அரசு யோசனை பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகி, புதிய பிரதமர் நியமிக்கப்பட்டால், இடைக்கால அரசுக்குள் சுயாதீன அணிகள் நுழைந்துவிடும். எனவே, மே 03 ஆம் திகதிவரை காத்திருந்து காய்நகர்த்துவோம் என இதன்போது பிரேரிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அங்கம் வகிக்கும் அரசில் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்தால், அது எதிர்கால அரசியலுக்கு சிக்கலாக அமைந்து விடும். எனவே, வெளியில் இருந்து கொண்டு தேவையான ஆதரவை -ஒத்துழைப்பை - வழங்கலாம் எனவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்புக்கு பின்னரே, இடைக்கால அரசை நிராகரிக்கும் வகையில் சஜித் பகிரங்கமாக கருத்து வெளியிட்டு வருகின்றார். விமல், கம்மன்பில உள்ளிட்ட 11 கட்சிகளில் உள்ளவர்கள், எந்நேரத்திலும் காலை வாரலாம். அவர்கள் குறித்து விழிப்பாகவே இருக்க வேண்டும் என ராஜித சேனாரத்ன மேற்படி சந்திப்பின்போது எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# நான் சூழ்ச்சிக்காரன் இல்லை!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் கடந்த 28 ஆம் திகதி , ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தின் ஆரம்பத்தில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என மொட்டுக் கட்சி எம்.பிக்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்விரு காரணங்களே, மக்கள் மத்தியில் அரச எதிர்ப்பு அலை கோலோச்ச பிரதான காரணங்களாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதன்பின்னர் இடைக்கால அரசு தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இது சம்பந்தமான யோசனையை இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ முன்வைத்தார்.


இந்த யோசனைக்கு இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி ஆகியோர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். "ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சிக்கே மக்கள் ஆணை வழங்கினர். இடைக்கால அரசு அமைக்க அல்ல . " என திஸ்ஸ குட்டியாராச்சி கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதற்கிடையில் பிரதமர் பதவி விவகாரமும் கூட்டத்தில் சூடுபிடித்துள்ளது.

" ஆளுங்கட்சிக்குள் இருந்துகொண்டே டலஸ் அழகப்பெரும சூழ்ச்சி செய்கின்றார். பதவியைப் பெறுவதாக இருந்தால் நேர்வழியில் அதனை செய்ய வேண்டும். 113 இருந்தால் அதனைப் பெற்றுக்கொள்ளலாம்." என டலஸ்மீது சரமாரியாக விமர்சனக் கணைகளை குட்டியாராச்சி தொடுத்துள்ளார். இதனால் டலஸ் அழகப்பெரும கடுப்பானார்.

" சந்திரிகா காலத்தில், மஹிந்தவை உயர் இடத்துக்கு கொண்டுவருவதற்கு நான்தான் போராடினேன். அப்போது ஐக்கிய தேசியக்கட்சி பக்கம் இருந்தவர்களும், அரசியலில் இல்லாதவர்களும்தான், 'சூழ்ச்சி' பற்றி கதைக்கின்றனர். நான் எதையும் வெளிப்படையாக பேசுபவன் = செய்பவன். [illegible] அரசு அமைய வேண்டும் என்ற முடிவிலேயே இன்றும் இருக்கின்றேன்." என பதிலளித்துள்ளார்.

# யானையின் பக்கம் சேவல்?



ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவது சம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கவனம் செலுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசுடனான உறவை முறித்துக்கொண்டுள்ள இ.தொ.கா., இடைக்கால அரசுக்கு செல்லக்கூடாது என்ற நிலைப்பாட்டிலே உள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி பக்கம், தமிழ் முற்போக்கு கூட்டணி இருப்பதால், அங்கு ஆதிக்கம் செலுத்த முடியாத நிலை காங்கிரஸுக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் [illegible] அரவணைத்து, தனது பயணத்தை பலப்படுத்துவதற்கு காங்[illegible] தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

**1505-1948 வரை**

ந.பரமேஸ்வரன்


சேர் முத்துக்குமாரசாமி

### 1862 செப்ரெம்பர்

இலங்கையில் வெண்கல நாணயம் அறிமுகம் செய்யப்பட்டது.

நிக்கலஸ் கூட் (Nicholas Gould) Jaffna Freeman பத்திரிகையை ஆரம்பித்தார். ஜோன் விற்றர்போன் (John Witterbon), சந்தியாகுப்பிள்ளை, செல்வி . தகித்தா ஒண்டற்ஜி (Tahita Ondatjee) ஆகியோர் இந்தப் பத்திரிகையின் ஆசிரியபீடத்தில் பணியாற்றினர். இதன் மூலம் உலகின் முதலாவது பெண் பத்திரிகையாளர் என்ற பெருமையை தகித்தா ஒண்டற்ஜி பெற்றுக் கொண்டார். இவரது தந்தையார் Ondatjee மட்டக்களப்பு அரசாங்க அதிபராக பதவி வகித்தவர். தனது பதவிக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு செல்லும் வழியில் ஆங்காங்கே மடங்களை கட்டுவித்தார். இவற்றுள் பெரியது ஒந்தாச்சிமடம். ஒண்டற்ஜி (Ondatjee) என்ற பெயரை மக்கள் ஒந்தாச்சி என அழைத்தனர். இதனால் இந்த மடம் இருந்த இடம் ஒந்தாச்சிமடம் என அழைக்கப்படுகிறது .

Nelli fly என்ற புலிட்ஸர் பரிசு பெற்ற பெண் பத்திரிகையாளரைத்தான் முதலாவது பெண் பத்திரிகையாளர் என உலகம் கொண்டாடி வருகிறது. Nelli fly யின் காலம் முதலாம் உலக மகாயுத்த காலம்; அதற்கு முன்னரே தகித்தா ஒண்டற்ஜி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த Jaffna Freeman பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் பணியாற்றி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரே உலகின் முதல் பெண் பத்திரிகையாளர் என யாழ்ப்பாணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். பிரபல ஆங்கில எழுத்தாளர் மைக்கல் ஒண்டற்ஜி (Michael Ondarje) இவர்களின் வழித்தோன்றலே; தற்போது அவர் அவுஸ்திரேலியாவில் வசித்து வருகிறார். நான் மைக்கல் ஒண்டற்ஜியுடன் முகநூல் ஊடாக தொடர்பை ஏற்படுத்த முயன்றேன் (தகித்தா ஒண்டற்ஜி யின் புகைப்படம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன்) எனினும் அவர் பதிலளிக்கவில்லை. இவர்கள் ஒல்லாந்த பறங்கி (Dutch Burger)இனத்தைச்சேர்ந்தவர்கள்.

### 1862 டிசெம்பர்

ஹென்றி மார்டினின் சேவையைப்பாராட்டி அவர் வசித்த வீதிக்கு (யாழ்ப்பாணம் புகையிரத நிலைய வீதிக்கு) அரசாங்க அதிபர் டைக். 'மார்ட்டின் வீதி' எனப் பெயர் சூட்டினார். 1970 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு ஜி.ஜி.பொன்னம்பலத்தை தோற்கடித்து நாடாளுமன்றம் சென்று, பின்னர் சிறிமாவோ அரசாங்கத்தில் இணைந்து கொண்ட சி.எக்ஸ். மார்ட்டினின் பேரனாரே ஹென்றி மார்ட்டின்.

### 1863 பெப்ரவரி 06

**தேசாபிமானி பத்திரிகை ஆரம்பம்.**

ஊர்காவற்றுறை பொலிஸ் நீதவானாக கடமையாற்றிய வைமன் கதிரவேற்பிள்ளை Patriot என்ற பெயரில் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தார். தமிழில் தேசாபிமானி எனவும் ஆங்கிலத்தில் Patriot எனவும் இந்தப் பத்திரிகை வெளிவந்தது. தற்போது தொல்பொருள் திணைக்களத்தால் மரபுரிமைச்சொத்தாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கில்னர் பாடசாலையின் ஸ்தாபகரான வணக்கத்துக்குரிய ஜோன் .கில்னரும் (John Kilner) இந்தப்பத்திரிகையின் ஆசிரியபீடத்தில் பணியாற்றினார். அப்போது வெளிவந்த Patriot, Jaffna Freeman ஆகிய இரு பத்திரிகைகளின் ஆசிரியர் குழாமும் தமது ஊடகப் புலமைத்துவதை இரு பத்திரிகைகளிலும் வெளிக்கொணர்ந்தனர்; இதனால் இரு பத்திரிகளுக்குமிடையே ஒரு ஊடகப் புலமைத்துவ சமர் நடந்தது .

**சேர் முத்துக்குமாரசாமி பரிஸ்டர் பட்டம் பெற்றார்**

பரிஸ்டர் பட்டம் பெற்ற முதல் கிறிஸ்தவரல்லாத சட்டத்தரணி என்ற பெருமை சேர் முத்துகுமாரசாமிக்கு கிடைத்துள்ளது; அதுவரை ஒரு யூதர் கூட பரிஸ்டர் பட்டம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### 1864 மே

ஆயர் செமரியா (Semeriya)யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலைக்கு அடிக்கல் நாட்டினார். யாழ்ப்பாணக் கச்சேரியில் தோம்பு பராமரிப்பாளராக கடமையாற்றிய ஜோசப் காலமானார். பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் குதிரை வண்டி மூலமே பிற மாவட்டங்களுக்கான தபால்கள் எடுத்துச்செல்லப்பட்டன. இந்தத் தபால் சேவையை குத்தகைக்கு எடுத்து நடத்தியபடியால் இவர் வண்டி சூசையப்பர் எனவும் அழைக்கப்பட்டார்.

### 1864 செப்ரெம்பர்

ஓரியண்டல் வங்கிக்கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பிரதான வீதிமூன்றாம் குறுக்குத்தெரு சந்தியில் இந்த வங்கி அமைந்திருந்தது.

### 1865 ஜூன் 13

**பிறிமியர் பேக்கரி ஆரம்பம்.**

சிறந்த சமூக சேவையாளனான சவரிமுத்து பேதுறுப்பிள்ளை யாழ்ப்பணம் பிரதான வீதியில் பிறிமியர் பேக்கரியை ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பேக்கரி இதுவே. இந்த பேக்கரி பேதுறுப்பிள்ளை பேக்கரி எனவும் அழைக்கப்பட்டது. அப்போதைய அரசாங்க அதிபர் உவில்லியம் துவைனம் பிறிமியர் பேக்கரி வாடிக்கையாளராக இருந்தார். 2010 ஆம் ஆண்டு வீதி அகலிக்கும் வரை ஆரம்பித்த இடத்திலேயே பிறிமியர் பேக்கரி இயங்கியது. புனித சம்பத்தரிசியார் கல்லூரியின் ஆரம்பகால மாணவர்களுள் ஒருவரான பேதுறுப்பிள்ளை யாழ்ப்பாண மருத்துவமனைக்கும் கணிசமான நிதிப் பங்களிப்பை செய்துள்ளார்.

*(வரலாறு நீளும்)*



---



ஆர்.பிரகாஷ்

# புடின் என்னும் போர்த்தந்திரி

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்து, ஐரோப்பிய ஒன்றியம் கூட்டாகவும் ஐரோப்பிய நாடுகள் தனித்தனியாகவும் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளைக் குவித்திருந்தமை யாவரும் அறிந்ததே. ஆனால், தனது தற்துணிவான, இராஜதந்திர நகர்வால் இந்தப் பொருளாதாரத் தடைகள் அனைத்தையும் அர்த்தமற்றதாக ஆக்கியுள்ளார் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின்.

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து பெப்ரவரியின் பிற்பகுதியில் உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை அறிவித்தார் விளாடிமிர் புடின். மிகவேகமாக ரஷ்யப் படைகள் உக்ரைனுக்குள் ஊடுருவின. உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையைத் தகர்ப்பதற்காகவும் = ரஷ்யாவுக்குப் பின்னடைவை ஏற்படுத்துவதற்காகவும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இதர பல நாடுகளும் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொருளாதாரத் தடைகளை அள்ளிக் குவித்தன. இதில், அமெரிக்கா ரஷ்யாவின் பண அலகைச் சிதைப்பதற்காக ரஷ்ய வங்கிகளுக்குத் தடையையும் பல நாடுகள் விதித்தன. சர்வதேச சந்தையில் ரூபிளை பெறுமதியிழக்கச் செய்ய வேண்டும் என்பதில் தீவிரம் காட்டியது அமெரிக்கா.

இலக்இலர்

### மின்னல் வேகப் பதிலடி

ரஷ்ய வங்கிகளுக்குப் பொருளாதாரத் தடைகளை விதித்த அமெரிக்காவின் அறிவிப்பு வெளிவந்த வெறும் ஆறு மணித்தியாலத்தில் விளாடிமிர் புடின் உலகமே எதிர்பாராத அறிவிப்பொன்றை விடுத்தார்.

"ரஷ்யாவின் நட்புறவில் அல்லாத நாடுகள், பொருளாதாரத் தடைகளை விதித்த நாடுகள் ரஷ்யாவிடம் இருந்து எரிவாயுவையும், எரிபொருள்களையும் கொள்வனவு செய்ய வேண்டுமாயின் ரூபிளைத்தான் செலுத்த வேண்டும். டொலருக்கு ரஷ்யப் பொருள்கள் வழங்கப்பட மாட்டாது " என்ற உத்தரவு மொஸ்கோவில் இருந்து புறப்பட்டது. டொலரை ஈட்டுவதற்கு ரஷ்யா தடுமாறும் என்ற அமெரிக்காவின் கணக்குப் பொய்த்துப்போனது. ரூபிளை ஈட்டுவதற்கு எரிவாயு, எரிபொருள் தேவைப்படும் இதர நாடுகள் தடுமாற வேண்டிய நிலையை புடின் ஏற்படுத்தினார். தான் இல்லாமல் ஐரோப்பிய நாடுகளால் எரிவாயுத் தேவையை நிவர்த்திசெய்ய முடியாது என்பது புடினுக்கு நன்கு தெரியும். இதையடுத்து மேற்கத்திய தேசம் ரஷ்ய வங்கிகளை ரூபிளுக்காக நாடியது. ரஷ்யாவுக்கு எதிராக விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் புஸ்வாணம் ஆகின.

### சரணடைந்த 10 நாடுகள்

தாம் விதித்த பொருளாதாரத் தடையைத் தாமே மீறி 10 ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிடம் இருந்து எரிவாயுவைக் கொள்வனவு செய்துள்ள தகவல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இதில் சிரிப்புக்குரிய விடயம் என்னவென்றால், உக்ரைனுக்கு இராணுவத் தளபாட உதவிகளை அள்ளிக்குவித்த நாடுகளில் ஒன்றான ஜேர்மனிதான் உக்ரைன் போரின் பின்னர் ரஷ்யாவிடம் இருந்து எரிவாயுவைக் கொள்வனவு செய்த நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் இருக்கின்றது. உக்ரைனில் ரஷ்யா செய்வது சரி, தவறு என்பதற்கு அப்பால், நான்தான் உலகப்பொலிஸ் என்ற அமெரிக்காவின் மெத்தனப்போக்குக்கு சரியான பாடமொன்று கற்பிக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவில் புடினும் சீனாவில் ஜின்பிங்கும் ஆட்சியதிகாரத்தில் இருக்கும் வரையில் அமெரிக்காவின் எதேச்சதிகாரம் அவ்வப்போது சவாலுக்குட்பட்டே தீரும். அதுதான் தற்போதும் நடக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

81

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | | 4 | 5 |
| | | 6 | | | 7 | | |
| 8 | 9 | | | 10 | | 11 | |
| 12 | | | 13 | | 14 | | |
| | | 15 | | 16 | | | 17 |
| | 18 | | 19 | | | 20 | |
| 21 | | | | | 22 | | |
| 23 | | | 24 | | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................................

கையொப்பம்:..................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. மயிர்க்கொட்டி போன்றவற்றை இரையாக்கும் பறவை 4. உள் 6. மறி 7. வெட்டும் ஆயுதம் 8. ஒன்றை சுக்குநூறாக்கி அழிப்பு 11.நிலம் 12. ஏழ்மை 13. வாழ்க்கை நெறியை போதித்தவர் 16. தமிழ் 'மிஸ்டர்' 18. ஒரு மரக்கறி இனம் 20. அடவி 21. அமைச்சன் 22. தீட்டும் கருவி 23. பெருங்கதை 24. சுவருக்குப் பூசுவர்.

## மேலிருந்து கீழ்

1. தூய எம்மொழி 2. உள்ளீடு இல்லாத அற்பம் 3. அகங்காரம் 4. ஒரு வாசனைப் பொருள் 5. நாற்காலி 9. வாயால் கவ்வு. 10. மகள் 14. மரம் 15. தந்திரோபாயம் 17. ஊர்வன வகையைச் சேர்ந்தது 18. இதுவானாலும் கசக்கி கட்ட வேண்டும். 29. பயன்படுத்தப்படாத நிலம் 20. உறைப்புச்சுவை 21. பெரிய 22. இந்தியாவில், பணத்தின் சிறிய அளவு.

### சொற்சிலம்பம் போட்டி 80 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. விகடகவி 5. உப 7. வடு 8. வழிபடல் 10. சாம்பார் 12. தின் 13. சதம் 14. பாவி 16. கனல் 17. கடுகு 18. உரம் 19. உரு 20. தண் 21. கரும்பு 23. விடிவெள்ளி 24. கைமை

**மேலிருந்து கீழ்**

1. விவசாயி 2. கடும் 3. கவர்தல் 4. விழி 5. உடன்பாடு 6. பல் 9. பதி 11. பாசனம் 15. விகுதி 16. கரண்டி 17. கரும் 18. உதவி 19. உருளி 22. புகை

**சொற்சிலம்பம் போட்டி இல.81**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**06.05.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 80 இல் வெற்றி பெற்றோர் விவரம்

**1 ஆம் பரிசு**
**கே.இராஜகோபால்**
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை

**2 ஆம் பரிசு**
**த.நிர்மலம்,**
24ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
**மா.மகாலிங்கம்,**
கைதடி மேற்கு,
கைதடி.

**4 ஆம் பரிசு**
**சி.பாலசுந்தரம்,**
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

**5 ஆம் பரிசு**
**தி.செல்வராணி,**
121/8, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

# பயணங்கள் முடிவதில்லை!



9

○ தே.கோகிலவாணி

ஜப்பான் மக்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் அநேகமாக ஆரோக்கியத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அதனாலேயே, உலகில் அதிக ஆரோக்கியமானவர்களையும் நீண்ட ஆயுள்கொண்ட மக்களையும் கொண்ட நாடாக ஜப்பான் விளங்குகிறது.

உலகின் மிக மூத்த மக்கள் ஜப்பானின் ஒகினாவா (Okinava) நகரில் வாழ்கிறார்கள். இதனால்'கிழவர்களின் நாடு' என்று ஜப்பான் எள்ளப்படுவதுமுண்டு. ஆனால் அவர்களின் இயற்கையோடு இயைந்த, உடல் மீதான அக்கறையோடு கூடிய உணவு முறைகளும், சுத்தம் பேணும் சுகாதார நடைமுறைகளும் முழு உலகுக்குமே முன்னுதாரணமானவை. வாழும் பிராந்தியத்துக்கேற்ப அரிசி உணவுகளே இங்கும் முக்கியமானவை. அத்தோடு, ஜப்பானியர்கள் மீன் பிரியர்களும் கூட. அதனால் அரிசிக்கடுத்து உணவில் மீனை அதிகம் சேர்த்துக் கொள்வார்கள்.

மீனில் செய்யப்பட்ட வகைவகையான, சுவைமிக்க நூற்றுக்கணக்கான தயாரிப்புகள் எங்கும் விற்கப்படுவதைக் காணமுடியும். சல்மோன் எனப்படும் மீனைப் பச்சையாக உண்பார்கள். இவற்றைவிட, இறைச்சி வகைகள், முட்டை, காய்கறிகள், பழங்கள், கடற்பாசி, சோயா, கிழங்குகள் விசேடமாக வத்தாளை என்பன ஜப்பானியரின் உணவுகளாக அமைகின்றன.



சரிவிகிதமாக அமையும் அவர்களின் உணவுகளில் உப்பும் இனிப்பும் எப்போதும் குறைவாகவே காணப்படும். முக்கியமாக, ஜப்பானியர்கள் ஒருபோதும் வௌவால்கள், பாம்புகள், பல்லிகள், பூச்சிகள், புழுக்கள் போன்றவற்றை உண்பதில்லை. 'உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே' என்ற திருமந்திரப் பொருளை உணர்த்தும் வகையிலானது ஜப்பானியரின் உணவுமுறை என்றால் மிகையாகாது. ஜப்பானியர்களின் உணவுப் பழக்கத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது அவர்களின் தேநீர்ப் பழக்கத்தைக் குறிப்பிடாவிட்டால் அது நிறைவுபெறாது. அதுவும் கிறீன் ரீ (Green tea/ matcha) எனப்படும் பச்சைத்தேநீர் அருந்துவதென்பது அவர்களது வாழ்வோடு இணைந்த ஒரு பழக்கமாகக் காணப்படுகிறது. தண்ணீருக்கு அடுத்துக் கிறீன் ரீயையே ஜப்பானியர்கள் அதிகம் அருந்துவார்கள். கசப்புத்தன்மை அதிகம் கொண்ட கிறீன் ரீயைச் சிறிதும் சீனியையோ பாலையோ சேர்க்காமல் நாளொன்றுக்குப் பலதடவைகள் குடிப்பார்கள். கிறீன் ரீ நிறைய மருத்துவ குணங்களைக் கொண்டது. ஜப்பானியர்களின் இளமையான தோற்றத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் இந்தத் தேநீரை அருந்தும் பழக்கமும் ஒரு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது. ஜப்பானில் என்னை ஈர்த்த இன்னொரு விடயம், அதன் வீதிகள். போக்குவரத்து, வாகனப் பயன்பாடு என்னபனவாகும். பொதுவாகவே சுத்தத்துக்கு முதலிடம் கொடுப்பவர்கள் ஜப்பானியர்கள். அதனடையாளமாக அவர்களின் வீதிகளைக் காணலாம். ஐரோப்பிய நாடுகளில் ஞாயிறுதோறும் வீதிகள் யாவும் சுத்தமாகக் கழுவப்படுவதைப் பார்த்திருக்கிறேன். அதே நடைமுறை இங்கும் காணப்படுகிறது. அதனால் மிக அகன்ற, ஜப்பானிய வீதிகள் யாவுமே எப்போதும் மிகத் தூய்மையாகவே காட்சியளிக்கும். வீதிகளின் இருபுறமும் சைக்கிள்களில் பயணிப்போருக்காக பிரத்தியேக மாக ஒதுக்கப்பட்டிருக்கும். இத்தகைய ஒழுங்கு வேறு நாடுகளிலும் உண்டு. ஆனால் இங்கு விசேடமாக ஒரு விடயத்தை ஆச்சரியத்தோடு அவதானித்தேன். பிரதான சாலைகளில் பயணிக்கும் வாகனங்களைவிட சைக்கிள்களின் பாவனை அதிகமாகக் காணப்பட்டமைதான். உலகம் முழுவதும் கார்கள் உட்பட ஜப்பானின் பல்வேறு வாகனங்கள் விரைந்து கொண்டிருக்க ஜப்பானியர்கள் முடிந்தவரையில் சைக்கிள்களையே உபயோகிக்கிறர்கள்.

பின்னும் முன்னுமாக ஒன்றின் மேலொன்றாகக் கூடைகளுடன் அமைந்த சைக்கிள்களை நான் வேறெங்கும் கண்டதில்லை. இத்தகைய சைக்கிள்களில் நிறையப் பொருள்களை கடைகளில் வாங்கிக் கொண்டு செல்வதைக் காணலாம்.

விசேடமாகப் பெண்கள், குழந்தைகளையும் பொருள்களையும் இவ்வாறு சைக்கிள்களில் ஏற்றிச் செல்வதை வீதிகளில் சர்வசாதாரணமாகக் காணலாம். பஸ், புகையிரதம் போன்ற பொதுப் போக்குவரத்துச் சேவைகளை மக்கள் அதிகமாகப் பயன்படுத்துவார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் கார்கள் போன்ற ஆடம்பரவாகனங்களின் பாவனை ஜப்பானில் குறைவாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜப்பானில் பொதுப்போக்குவரத்தினை உபயோகிப்பது நல்லதொரு பயண அனுபவமாகும். சிறந்த நேரமுகாமைத்துவம், அளவான பயணிகள், மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகளுட்படச் சௌகரியமான இருக்கைகள் என விரும்பத் தக்க பல நடைமுறைகள் காணப்படுகின்றன. இதற்கு ஒருபடி மேலாக பயணிக்கும் மக்களின் ஒழுங்குகளைக் காணலாம்.

அமைதி காத்து வரிசையில் நின்று, தொலைபேசியிலோ நேராகவோ தேவையற்று உரத்த தொனியில் பேசுவதைத் தவிர்த்து, சட்டதிட்டங்களை மதித்துச் சகபயணிகளை இடையூறு செய்யாது, பரஸ்பரம் விட்டுக்கொடுத்து நடக்கும் பண்பை ஜப்பானியர்களிடம் எப்போதும் காணலாம்.

பயணங்களில் மட்டுமல்ல, வேறெந்தப் பொதுவிடங்களிலும் அவர்கள், மற்றவர்களின் கவனத்தைக் கலைக்கும் வகையில் உரத்துக் குரலெழுப்பிப் பேசியதையோ சிரித்ததையோ நான் காணவில்லை.

வியாபார நிலையங்களிற் கூவியழைக்கையிலும், நுகர்வோரை எரிச்சலூட்டி [illegible] செய்யாத இதமான அணுகுமுறையே காணப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org